Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 03, இதழ்: 203 சுபகிருது வருடம், பங்குனி மாதம் 20ஆம் திகதி திங்கட்கிழமை
(03.04.2023) ஹிஜ்ரி 1444, ரமழான் - 11, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## கமெண்ட் கந்தர்...

குருந்தூர் மலை கோயில் வழக்கு நீதிமன்றத்தில் இருக்கும்போது விகாரை கட்டலாம்..
வெடுக்குநாறியில் மட்டும் சாமி சிலை வைக்க ஏலாதோ...?



## உஷ்



யால பூங்காவில் மற்றுமொரு அரிய வகையான கரும்புலி கடந்த வாரம் கண்டுபிடிக்கப்பட்டதல்லவா..?

அந்த செய்தி வெளியான கையோடு அம்பாந்தோட்டையில் இருந்து மேற்படி கரும்புலியை படம் எடுக்க யால காட்டுக்குள் தனது கெமராவை எடுத்துக்கொண்டு சென்றாராம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச..

காட்டுக்குள் சுமார் 5 மணிநேரம் காத்துநின்ற சஜித் பிரேமதாச, புலி எங்கும் தென்படாத காரணத்தினால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினாராம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆளுங்கட்சிக்கு செல்ல ஏற்பாடுகள் நடப்பதாக செய்திகள் வெளிவந்துகொண்டிருக்கும் நிலையில் அவற்றை...

02 பக்கம்

# சிலை பிரதிஷ்டை முயற்சி தோல்வி!



## வெடுக்குநாறிக்குச் சென்ற அமைச்சர்களான டக்ளஸ், ஜீவன் ஏமாற்றத்துடன் திரும்பினர்

(நமது விசேட செய்தியாளர்)

வவுனியா, நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் விஷமிகளால் அகற்றப்பட்ட விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வதற்கான ஏற்பாடுகளை ஆரம்பித்துவைக்க அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் ஆகியோர் அங்கு நேற்று (02) சென்றிருந்தபோதிலும் அந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

ஆலயத்தில் சிலைகள் அனைத்தும் பிரதிஷ்டை செய்யப் படுமென ஏற்கனவே உறுதியளிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் சிலைகளை பிரதிஷ்டை செய்யுமாறு ஆலய நிர்வாகத் தினரால் அமைச்சர்களிடம்....

02 பக்கம்

## ஜனாதிபதி தலைமையில் தேசிய புத்தரிசி விழா



02 பக்கம்

## சட்டம், ஒழுங்கை மீறுவதற்கு எவருக்கும் இடமளியேன்

ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு

05 பக்கம்

# பயங்கரவாதத்தில் ஈடுபடும் எதிர்பார்ப்பு சிலருக்கு உண்டு

### அதனாலேயே புதிய சட்டத்தை எதிர்ப்பதாகக் கூறுகிறார் விஜயதாச

(நா. தினுஷா)



பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்ந்து அமுலில் இருந்தால், உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரிவிப்பவர்களின் உயிர்களே முதலில் பலியாகும். பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடும் எதிர்பார்ப்பு இல்லாவிட்டால் எதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு பயங்கொள்ளவேண்டும்? எதிர்காலத்தில் பயங் கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான எதிர்பார்ப்பில் இருப்பதாலேயே உத்தேச சட்டமூலத்துக்கு எதிர்ப்புத் தெரி விக்கிறார்கள் - என்று நீதி, சிறைச்சாலை அலுவல் கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்...

02 பக்கம்

## எங்கள் உறுப்பினர்கள் விலைபோக மாட்டார்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் நம்பிக்கை



எதிர்க்கட்சியிலிருந்து அரசாங்கத்திற்குச் செல்வதற் குப் பதிலாக, அரசாங்கத்திலிருந்து எதிர்க் கட்சிக்கு வருவதற்கே பலர் காத்திருப்பதாகவும், கட்சித் தாவல் செய்தி கேட்டு முன்னைய எதிர்க் கட்சித் தலைவர்கள் தமது உறுப்பினர்களை பாதுகாத்துக்கொள்ள சிங்கப்பூருக்கு அனுப் பியதுபோன்று தமக்கு அத்தகைய தேவைப் பாடு இல்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் ...

02 பக்கம்

## கோயிலில் சூனியமா?

### நானுஓயாவில் ஏமாற்றிய தஞ்சை பூசாரிகள் விரட்டியடிப்பு

03 பக்கம்

## கப்பல் சேவை திட்டம் அரசாங்க ஒப்புதலுக்கு

### தமிழக நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் வேலு தகவல்

(திருச்சி எம்.கே.ஷாகுல் ஹமீது )



இந்தியா - இலங்கை இடையில் குறைந்த தூர பயணிகள் கப்பல் சேவை தொடங்கப்படும் என்றும், மாநில நெடுஞ் சாலைகளின் 3 இடங்களில் சாலையோர வசதி மையங்கள் அமைக்கப்படும் என்றும் இது தொடர்பில் விரிவான திட்ட அறிக்கை மற்றும்...

02 பக்கம்

## பாட்டலி ஆரம்பிக்கும் புதிய கட்சி

(நா. தினுஷா)

பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் தலைமையில் ஐக்கிய குடியரசு முன்னணி என்ற பெயரில் புதிய அரசியல் கட்சியொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் மே மாதமாகும்போது இந்தக் கட்சியை...

02 பக்கம்

## ஆக்கிரமிப்பை எதிர்த்தோர்மீது துப்பாக்கியால் சுட முயற்சி

### புல்மோட்டையில் பதற்றம்

புல்மோட்டை, பொன்மலைக்குடா பிரதேசத்தில் பௌத்த துறவிகள் குழுவொன்று மேற்கொண்ட ஆக்கிரமிப்பு முயற்சியை அப்பகுதி மக்கள் எதிர்த்ததன் காரணமாக நேற்று (02) பதற்ற நிலை ஏற்பட்டது.

அங்கு நின்ற பாதுகாப்பு...

02 பக்கம்

## சிறுவர் இல்லம் யாழில் முற்றுகை

### 13 பேர் பாதுகாப்பாக மீட்பு

(யாழ். செய்தியாளர்)

யாழ்ப்பாணம் இருபாலையில் கிறிஸ்தவ சபை ஒன்றினால் அனுமதியின்றி நடத்தப்பட்ட சிறுவர் இல்லம் முற்றுகையிடப்பட்டு 13 சிறுவர்கள்...

02 பக்கம்

## மோசடியில் ஈடுபட்ட சீனப் பிரஜைகள்

### அளுத்கமவில் 39 பேர் அதிரடியாகக் கைது

பல்வேறு நாடுகளில் இணையத்தளத்தின் ஊடாக மக்களை ஏமாற்றிய சீனப் பிரஜைகள் 39 பேர் அடங்கிய குழுவொன்று அளுத்கம பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளது.

சந்தேகநபர்கள் அளுத்கம, களுவாமோதர பிரதேசத்திலுள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் வாடகை அடிப்படையில்...

02 பக்கம்



# அரசுக்கு எதிரானோர் இன்று விசேட பேச்சு

(நா. தினுஷா)

அரசாங்கத்தின் வரிகொள்கை, அடக்குமுறை, பொருளாதார மறுசீரமைப்பு, உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் நாட்டிலுள்ள தொழிற்சங்கங்கள், பல்துறைசார் அமைப்புகள், மாணவர் செயற்பாட்டாளர்கள் என பல்வேறு தரப்பினரின் முக்கிய பேச்சுவார்த்தையொன்று இன்று (03) கொழும்பில் இடம்பெறவுள்ளது.

இந்த கலந்துரையாடலின்போது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சவால்மிக்க நிலைமைகள் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாக தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன. இந்நிலையில், அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் நாட்டில் தற்போதுள்ள பிரச்சினைகள் குறித்து இந்த வாரம் கூடவுள்ள விசேட நிறைவேற்றுக்குழு கூட்டத்தின் பின்னர் அவர்களின் தீர்மானத்தை அறிவிக்க எதிர்பார்த்துள்ளதாக அந்தச் சங்கத்தின் ஊடக பேச்சாளர் வைத்தியர் சமில் விஜயசிங்க தெரிவித்தார்.

குறிப்பாக உத்தேச பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பில் எதிர்வரும் இந்த வாரத்தில் அறிக்கையொன்றை சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும், இந்த சட்டமூலம் தொடர்பில் சகல பிரிவினரதும் இணக்கப்பாடு கிடைக்கும் வரை, கலந்துரையாடலொன்று முன்னெடுக்கப்படும் வரை பாராளுமன்றத்தினூடாக அனுமதியை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு அறிவித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளதாகவும் அரசாங்க மருத்து அதிகாரிகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, தமது பிரச்சினைகளுக்கு தீர்வை பெற்றுக்கொடுத்தால் எதிர்வரும் விடுமுறை தினங்களிலாவது கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கைகளை முன்னெடுக்க தயாராகவுள்ளதாக பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சாருதத்த இளங்கோன் தெரிவித்தார்.

மேலும், உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டத்தினூடாக நாட்டிலுள்ள பிரஜைகளினதும், தொழிலாளர்களினதும் குரல்களை முடக்கவே அரசாங்கம் முயற்சிப்பதாகவும் அரசாங்கத்தின் இதுபோன்ற செயற்பாடுகள் தொடர்பில் இன்றைய தினம் தமது தீர்மானங்களை அறிவிப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## ஆக்கிரமிப்பை...

உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் மீது துப்பாக்கியால் சுட முயற்சித்தமை குறித்து பல விமர்சனங்கள் எழுந்துள்ளன.

## உஷ்...

கவனிக்காமல், சஜித் பொழுதுபோக்கு வேளைகளில் ஈடுபடுவது குறித்து விசனம் வெளியிட்டாராம் கட்சியின் மூத்த பிரமுகர் ஒருவர்.

## பயங்கரவாதத்தில்...

விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

பல்லேகல பிரதேசத்தில் நேற்று முன்தினம் (01) இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர், ஊடகவியலாளர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும்போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

இந்தியாவிலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் நடைமுறையில் இருக்கிறது. அமெரிக்காவிலும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் அமுலில் இருக்கிறது. இந்த நாடுகளில் மாத்திரமல்ல, பிரித்தானியா, ஜேர்மன், பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் இந்தச் சட்டம் அமுலில் இருக்கிறது. ஆனால், அந்த நாடுகளில் பயங்கரவாதம் இருக்கிறதா? பயங்கரவாதம் என்பது எந்த நேரத்தில் தோற்றம்பெறுமென்று ஜோதிடர்களால் கணிக்க முடியாது.

பயங்கரவாதம் என்பது தேசிய பாதுகாப்புக்கும், மக்களின் உயிருக்கும் பாரதூரமான அச்சுறுத்தலை ஏற்படுத்தும் விடயமாகும். ஆகவே, அவ்வாறான பயங்கரவாதத்தை தடுப்பதற்கு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசாங்கங்கள் தயாராக இருக்கவேண்டும். அதனை செய்ய முடியாவிட்டால் அரசாகவோ, அரசாங்கமாகவோ இருக்க முடியாது.

இரண்டாவது காரணம், இந்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்ட மூலத்துக்கு யாராவது எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள் என்றால், தற்போது நடைமுறையிலிருக்கும் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை மாற்றாமல் அவ்வாறே செயற்படுத்த முடியும். அவ்வாறு இல்லாவிட்டால், தேசிய பாதுகாப்பு இல்லாமல் போய்விடும், மக்களின் உயிர்கள் பறிக்கப்படும், நாடு அராஜகமாகிவிடும் என்று நினைக்கிறார்கள் என்றால் பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்க முடியும்.

ஆனால், தற்போது கதைப்பவர்களின் உயிர்களே முதலில் பலியாகும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனை கொலை செய்வதற்கு, 20 இலட்ச ரூபா ஒப்பந்த அடிப்படையில் தமிழ் பயங்கரவாத குழுவினர் முயற்சித்திருந்தார்கள். அவர்கள் இன்று சிறையிலிருக்கிறார்கள். அவ்வாறு இருக்கையிலேயே இந்த சட்ட மூலத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். உத்தேச சட்ட மூலத்தைவிட இன்னுமொரு சட்டமூலத்துக்கான ஏற்பாடு இருக்கிறது என்று யாராவது கூறுகிறார்கள் என்றால் அதுதொடர்பில் கவனம் செலுத்த நாங்கள் தயாராக இருக்கிறோம்.

நாட்டு மக்களின் உரிமைகளை அரச சார்பற்ற நிறுவனங்களோ அல்லது அரசியல் கட்சிகளோ கவனம் செலுத்தப்போவதில்லை. உயர் நீதிமன்றமே மக்கள் உரிமையின் பாதுகாவலன். ஆகவே, பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தினால் மக்கள் உரிமைகள் பாதிப்படையும் என்று கருதுவார்களாக இருந்தால், யாராக இருந்தாலும் உயர் நீதிமன்றத்துக்குச் சென்று மனுத் தாக்கல் செய்ய முடியும். இன்னும் 20 நாட்கள் இருக்கின்றன. எனவே, இந்த சட்டமூலத்தை சவாலுக்கு உட்படுத்தலாம். அதற்கு சட்ட உதவிகளை வழங்க நாங்கள் தயாராக இருக்கிறோம்.

சில கருத்து வெளியிடும் நடவடிக்கைகளுக்கு இன்றும் வரையறைகள் விதிக்கப்பட்டே இருக்கின்றன. கருத்து வெளியிடும் செயற்பாடுகளின்போது தண்டனை சட்டகோவையின்கீழ், சில வரையறைகள் விதிக்கப்பட்டே உள்ளன. ஆனால், இவ்விரு சட்டங்களுக்கும் இடையிலான வேறுபாடு என்னவென்றால், பயங்கரவாதத்தை அடிப்படையாகக்கொண்ட கருத்துகள் வெளியிடப்படும்போதே பயங்கரவாத தடைச்சட்டம் அமுலாகும். தற்போதும், வன்முறையை ஏற்படுத்தும் வகையிலான கருத்துகள் வெளியிடப்படுதல், ஏனைய சமயங்களுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் செயற்படுதல், மக்கள் தொகுதியினரை பாதிப்புக்குள்ளாக்கினால் இதுபோன்ற சட்டத்திட்டங்களே தண்டனை சட்டக்கோவையிலும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்வாறெனில், தண்டனை சட்டக்கோவையும் நீக்கவேண்டி ஏற்படும்.

மக்களை பாதுகாப்பதற்காகவே இந்த சட்டமூலத்தை கொண்டுவர எதிர்பார்த்துள்ளோம். பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடும் எதிர்பார்ப்பு இல்லாவிட்டால் எதற்காக பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்துக்கு பயங்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கான எதிர்பார்ப்பு இருப்பதாலேயே பயங்கொள்கிறார்கள் என்றார்.

## பாட்டலி ஆரம்பிக்கும்...

உத்தியோகபூர்வமாக அறிவிக்க எதிர்பார்த்துள்ளதாக 43ஆவது படையணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினரமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பதுளை பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் மே மாதம் புதிய அரசியல் கட்சியொன்றை ஸ்தாபிக்க தீர்மானித்துள்ளோம். நாட்டை வங்குரோத்து நிலைமையிலிருந்து மீட்க, திறமையின் அடிப்படையிலான அரசியல் கட்சியொன்று அவசியமாகும். குடும்ப உரிமை கொண்ட கட்சி செயற்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். பணத்தைக் காட்டி வாக்குகளைப் பெற்றுக்கொள்ளும் அரசியலமைப்பை மாற்றியமைக்க வேண்டும். இந்த சகல நடவடிக்கைகளுக்கும் புதிய அரசியல் கட்சியொன்று அவசியமாகின்றது.

ஐக்கிய குடியரசு முன்னணி என்ற பெயரில் அந்தக் கட்சியை அறிமுகப்படுத்த எதிர்பார்த்துள்ளோம். பல்வேறு நபர்கள், குழுக்களுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து வருகிறோம். மே மாதமாகும்போது கட்சியின் முழு விபரங்களை அறிந்துக்கொள்ள கூடியதாக இருக்கும்.

தற்போதுள்ள நெருக்கடி நிலைமையிலிருந்து மீள்வதற்கு கடன் வழங்குனர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டியுள்ளது. அதே போன்று, தேசிய கடனையும் மறுசீரமைக்கவுள்ளதாக மத்திய வங்கி ஆளுநரும் அறிவித்திருக்கிறார். அப்படியானால், ஏதாவதொரு முறையின் கடன் குறைப்புக்கு செல்ல வேண்டியேற்படும். அதன் பிரதிபலன், நிதித்துறை, வங்கிகள், ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேமலாப நிதியம், பிணை முறைகளில் பணம் வைப்பிலிட்டவர்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடும்.

எது எவ்வாறாயினும், இந்த நிலைமையிலிருந்து மீள வேண்டுமெனில் இது போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள பரிந்துரைகளை, அவர்கள் கூறினாலும் கூறாவிட்டாலும் முன்னெடுக்க வேண்டிய செயற்பாடுகளாகவே நாங்கள் பார்க்கிறோம். இலங்கையிலுள்ள அரச நிறுவனங்கள் அரசியல்வாதிகளினால் ஊழல் செய்யப்பட்டு, வீணடிக்கப்பட்டவையாகும்.

இலங்கை விமான சேவையை எடுத்துக்கொண்டால், இதற்கு முன்னர் எயார் லங்கா நிறுவனத்தை அரபு இராச்சியத்தின் நிறுவனத்துக்கு வழங்கினார்கள். இருந்தபோதும், அதுவொரு தேசிய சொத்தாக கருதி மீண்டும் அந்த நிறுவனத்தைப் பெற்றுக்கொண்டோம். ஆனால், அந்த தேசிய சொத்தை, மஹிந்த ராஜபக்ஷ அந்த நிறுவனத்தை அவரின் மைத்துனருக்கு வழங்கி நாட்டு மக்களை கடன்காரர்களாக மாற்றி தேசிய குற்றம் இழைத்துவிட்டார்.

ஒருசிலர் கூறுவது போன்று அரச நிறுவனங்களை தனியார் நிறுவனங்களுக்கு கொடுப்பதால் ஒரு சில நிறுவனங்களை கட்டியெழுப்ப முடியாது. தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களை விற்பனை செய்துவிட்டு அதில் கிடைக்கும் வருமானத்தினூடாக கடன் பிரச்சினைக்கு தீர்வு காணவே முயற்சிக்கிறார்கள். ஆனால், அறிவுபூர்வமாக சிந்தித்து ஒட்டுமொத்த அரச சேவைத் துறையின் எதிர்காலத்தை பொறுத்து செயற்பட வேண்டியது அவசியமாகும். எனவே, அரச சேவையை தனியார்மயப்படுத்துவதால் இந்த பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கப்போவதில்லை. முகாமைத்துவத்தை நிச்சயமாக மாற்ற வேண்டும்.

குறிப்பாக, பணியாளர்களுடனும் தொழிற்சங்கங்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டும். அதேபோன்று, வலுவான ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட வேண்டும். இருந்தபோதும், தற்போது நடைமுறையிலிருக்கும் ஒழுங்கு விதிகளுக்குட்பட்ட மின்சார சபை போன்ற நிறுவனங்களை வீணடிக்கவே அரசாங்கம் முயற்சித்து வருகிறது என்றார்.

## கப்பல் சேவை திட்டம்...

மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் தமிழக நெடுஞ்சாலைத்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிவித்தார்.

தமிழ்நாடு சட்டப்பேரவையில் வரவு செலவுத்திட்ட கூட்டத்தொடர் நடைபெற்று வருகிறது. இதில் சனிக்கிழமை பொதுப்பணி, நெடுஞ்சாலைத்துறை மற்றும் சிறு துறைமுகங்கள்துறை தொடர்பான மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் நடைபெற்றது. இதற்கு பதில் அளித்து பேசிய பிறகு அமைச்சர் எ.வ.வேலு புதிய அறிவிப்புகளை வெளியிட்டார்.

அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில்,

இந்தியா - இலங்கை இடையில் குறைந்த தூர பயணிகள் கப்பல் போக்குவரத்தை தொடங்க, இராமேஸ்வரம் - தலைமன்னார், இராமேஸ்வரம் - காங்கேசன்துறை ஆகிய வழித்தடங்களில் தொடங்க விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்படும்.

இந்தியா - இலங்கை நாடுகளுக்கிடையே குறைந்த தூரப் பயணிகள் கப்பல் போக்குவரத்தினை இராமேஸ்வரம்-தலைமன்னார் (50 கி.மீ). இராமேஸ்வரம்-காங்கேசன்துறை (100 கி.மீ) ஆகிய வழித்தடங்களில் தொடங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

இரு நாடுகளுக்கிடையே குறைந்த தூர பயணிகள் கப்பல் போக்குவரத்தை ஆரம்பிக்கும் நோக்கில் இராமேஸ்வரம்-தலைமன்னார், இராமேஸ்வரம்-காங்கேசன்துறை ஆகிய வழித்தடங்களில் இயக்க இராமேஸ்வரம் சிறுதுறைமுக பகுதியில் கப்பலணையும் மேடை, பயணிகள் தங்குமிடம், சுங்க மற்றும் குடிமை பிரிவு சோதனை மையங்கள் ஆகிய கட்டுமானங்களை ஏற்படுத்துவதற்கு ஒரு விரிவான திட்ட அறிக்கை மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு ஒன்றிய அரசின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என்றார்.

## மோசடியில்...

தங்கியிருந்து இந்த இணைய மோசடிகளில் ஈடுபட்டு பெரும் தொகையை மோசடி செய்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தூதரகங்களில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் சீனப் பிரஜைகளை நேற்று முன்தினம் (01) கைது செய்தனர்.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அளுத்கம பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர்.



## எங்கள் உறுப்பினர்கள்...

ஏலத்திற்கு விலைபோக மாட்டார்கள் என தான் பூரண நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

கடுவலை பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (01) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கத்தின் தலைவர்கள் ஒன்றன் பின் ஒன்றாக போலிச் செய்திகளை உருவாக்கி சமூக வலைதளங்களில் பதிவிட்டு கோயபல்ஸின் தத்துவத்திற்கு அமைய போலிச் செய்திகளை மக்கள் மனதில் உண்மையென நிலைநிறுத்தும் சதியில் கூடிய ஈடுபாட்டுடன் செயற்பட்டு வருவதாகவும், இதில் ஐக்கிய மக்கள் சக்தியின் பெருமளவிலான உறுப்பினர்கள் அரசாங்கத்துடன் இணைவார்கள் என்று வரும் பிரசாரத்தில் ஈடுபட்டு வருவதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஆனால், சந்திம வீரக்கொடி மற்றும் ஜயந்த ஹேரத் போன்ற மொட்டுவைச் சேர்ந்த குழுவினர் எதிர்க்கட்சியில் இணைந்துள்ளனர் என்பதே பாராளுமன்றத்தில் உண்மையான நிலைப்பாடாகும் எனவும் இன்னும் அதிகமானோர் எதிர்க்கட்சியில் அமரவுள்ளனர் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த உண்மை நிலையை மறைத்து அரசாங்கம் பொய்களை புனைந்து கொண்டு, நாட்டிற்கு ஒரே பதிலாகவும் மாற்று அணியாகவும் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியை பிளவுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

செய்திகளை தாமாகவே கட்டமைத்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியை பிளவுபடுத்த அரசாங்கம் மேற்கொள்ளும் இந்த முயற்சியை தோற்கடிப்பதாகவும், பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தை தவிர்த்து எதிர்க்கட்சிக்கு வந்தாலும், அவ்வாறு வரும் சகலரையும் இணைத்துக்கொள்ள எதிர்க்கட்சி தயாராக இல்லை எனவும் அவ்வாறு வருபவர்கள் ராஜபக்ஷர்களின் அடிமைகளாக இருக்கக்கூடாது என்றார்.

மக்களுக்கு நிவாரணம் வழங்க பணமில்லாத அரசாங்கத்திடம் பாராளுமன்ற உறுப்பினர்களை விலைக்கு வாங்கும் அளவுக்கு பணம் இருப்பதாகவும் இவ்வாறான சீர்கெட்ட அரசியல் கலாசாரத்தைக் கொண்ட இந்த அரசாங்கத்திடம் தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் தேவைகளுக்கு பணமில்லாத அரசாங்கத்திடம் உறுப்பினர்களை பேரம் பேசுவதற்கு பணமுள்ளதாகவும் இந்நாடு உண்மையிலேயே வங்குரோத்தடைய ஊழல் மிக்க குடும்பமொன்றின் சீர்கெட்ட ஆட்சி நிர்வாகமே காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கும் தலா 2000 இலட்சம் இரைத்து உறுப்பினர்களை கட்சி தாவ செய்ய முடியும் என அரசாங்கம் நம்பினாலும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பணத்திற்காக தங்கள் சுயமரியாதையை தாரைவார்க்க மாட்டார்கள் எனவும், பண்டோரா பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள பணத்தை பயன்படுத்தி உறுப்பினர்களை இரையாக்கிக் கொள்ள முடியாது எனவும், கடந்த ஆண்டு நடந்த பொதுமக்கள் போராட்டத்தை மறந்திட வேண்டாம் எனவும், மக்களின் எதிர்பார்ப்புகளை சிதைப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இடமளிக்க மாட்டார்கள் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பணத்திற்கு அடிபணியும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இல்லை எனவும், எமது உறுப்பினர்கள் மக்கள் ஆணைக்கு மாத்திரமே அடிபணிவர் எனவும், எமது பாராளுமன்ற உறுப்பினர்களை முடிந்தால் பணம் கொடுத்து வாங்குங்கள் என சவால் விடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை பிரயோகித்து மக்களின் மனித உரிமைகளை மீறி மக்களை பயங்கரவாதிகளாக சித்தரிப்பதாகவும், தற்போது புதிதாக தொழிற்சங்கத்தினரையும், மாணவ போராட்டக்காரர்களையும் பங்கரவாதிகளாக அடையாளப்படுத்துவதாகவும், கோட்டாபய ராஜபக்ஷவை விரட்ட வீதிக்கு இறங்கிய இலட்சக்கணக்கான மக்களையும் பயங்கரவாதிகளாக முத்திரை குத்தி இதனூடாக மாதக்கணக்காக சிறையிலடைக்க முற்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சிறுவர் இல்லம்...

மீட்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்நடத்தை அலுவலர்களினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மீட்கப்பட்ட சிறுவர்கள் மருத்துவ அறிக்கைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்படவுள்ளனர்.

யாழ்ப்பாணம் இருபாலை பகுதியில் உள்ள கிறிஸ்தவ சபையினால் அனுமதியின்றி சிறுவர் இல்லம் நடத்தப்படுவதாக கிடைத்த தகவலின் அடிப்படையில் கோப்பாய் பொலிஸார் மற்றும் சிறுவர் நன்னடத்தை அலுவலகர்கள் ஞாயிற்றுக்கிழமை அங்கு சென்றனர்.

அதன்போது சிறுவர் இல்லத்தில் இருந்த 13 சிறுவர்கள் மீட்கப்பட்டனர். அவர்கள் துன்புறுத்தப்பட்டதாகவும் உரியவகையில் உணவு வழங்கப்படவில்லை என்றும் விசாரணைகளில் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு மீட்கப்பட்ட சிறுவர்கள் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டு மருத்துவ அறிக்கை பெற்றதன் பின்னர் யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படவுள்ளனர்.

## ஜனாதிபதி தலைமையில்...

தேசிய புத்தரிசி விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் அநுராதபுரத்தின் வரலாற்று சிறப்புமிக்க ஸ்ரீ மகாபோதிக்கு அருகில் நேற்று (02) இடம்பெற்றது.

அறுவடை செய்யப்பட்ட நெல்லின் முதற் பகுதியை ஜய ஸ்ரீ மஹாபோதிக்கு காணிக்கையாக செலுத்தும் வருடாந்த புத்தரிசி விழா, அடமஸ்தானாதிபதி வண. பல்லேகம ஹேமரதன நாயக்க தேரரின் ஆலோசனைக்கு அமைவாக விவசாய அமைச்சு மற்றும் கமநல சேவைகள் திணைக்களத்தினால் 56 ஆவது தடவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னர் காலத்தில் இருந்து நடைபெற்றுவரும் இந்த சம்பிரதாயத்திற்கு, நாடு முழுவதிலும் இருந்து ஏராளமான விவசாயிகள் திரண்டு வந்திருந்ததோடு, விவசாயத்தின் மூலம் நாடு தன்னிறைவு பெறவும், விளைநிலங்கள் செழிப்பாக இருக்கவும், சுபீட்சமிக்க பொருளாதாரம் ஏற்படவும் பிரார்த்தனை செய்தனர்.

புத்தரிசி விழாவில் கலந்து கொண்ட ஜனாதிபதி, முதலில் ஜய ஸ்ரீ மகாபோதியை வழிபட்டு ஆசி பெற்றார்.

அநுராதபுரம் சிங்கத்தூணுக்கு அருகிலிருந்து புறப்பட்ட புத்தரிசி ஊர்வலம் ஸ்ரீமகா போதியை வந்தடைந்தது.

அடமஸ்தானாதிபதி வண. பல்லேகம ஹேமரதன நாயக்க தேரர், தங்கப் பாத்திரத்தில் புத்தரிசியை நிரப்ப ஆரம்பித்ததுடன், அனைத்து மாகாணங்களிலும் இருந்து கொண்டு வரப்பட்ட அரிசியால் தங்கப் பாத்திரம் நிரப்பப்பட்டது. மகா சங்கத்தினரின் பிரித் பாராயணத்துக்கு மத்தியில் தங்கப் பாத்திரத்தில் அரிசியை நிரப்பும் நிகழ்வில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்துகொண்டார்.

சம்பிரதாயபூர்வமாக ஜய ஸ்ரீமகாபோதிக்கு காணிக்கையாக வழங்கப்படும் தேன் பூஜைக்கான, தூய தேன் பானை உருவரிகே வன்னில எத்தோவினால் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

ஜய ஸ்ரீ மகாபோதிக்கு நெய் பூஜைக்காக சப்ரகமுவ வரலாற்று சிறப்புமிக்க சமன் தேவாலயத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட நெய் பாத்திரமும், ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

பாரம்பரிய நெல் விவசாயிகளைப் பாதுகாக்கும் அமைப்பின் தலைவர் சிந்தன விலேகொட, ஜனாதிபதியின் வயதுக்கு நிகரான நெற்கதிர்கள் நிறைந்த நெல் மூடையொன்றை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் வழங்கினார்.

09 மாகாணங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு அந்தந்தப் பிரதேசங்களுக்கு பிரத்தியேகமான விதைகள் மற்றும் நெல் வகைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கி வைத்தார்.

56 ஆவது தேசிய புத்தரிசி விழா நினைவு இதழின் டிஜிட்டல் அச்சுப்பிரதிகளும் ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டன.

ருவன்வெலி சைத்தியராமாதிபதி ரஜரட்ட பல்கலைக்கழக வேந்தர் வண. ஈத்தலவெடுனுவெவே ஞானதிலக தேரர், லங்காராம விகாராதிபதி வண. ரலபனாவே தம்மஜோதி தேரர் உள்ளிட்ட மகாசங்கத்தினர், விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர, துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத், நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.சந்திரசேன, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க உள்ளிட்ட பலர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## சிலை பிரதிஷ்டை...

கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் அவர்கள் அமைதி காத்தனர்.

ஆலயத்தில் உரிய ஆவணங்கள் கிடையாதென்றும் அவற்றுக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறும் அமைச்சர்கள் சார்பில் நிர்வாகத்திடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆதிலிங்கம் உள்ளிட்ட சிலைகள் அகற்றப்பட்டமையுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை கைது செய்வதற்கு அமைச்சர்கள் அழுத்தம் கொடுக்க வேண்டுமெனவும் இதன்போது நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்ததாவது,

இந்த ஆலயத்தில் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்யும் நோக்கத்துடனேயே நானும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வருகை தந்தோம். ஆனால் நீதிமன்ற வழக்கு இருப்பதன் காரணமாக உரிய ஆவணங்கள் கிடைத்த பின்னர் உரிய தீர்வை பெற்றுக்கொடுக்க தீர்மானித்துள்ளோம். குறிப்பாக, ஆலயம் தொடர்பான ஆவணங்கள் எதுவும் இல்லை.

நாட்டில் பல இடங்களிலும் உள்ள கோயில்களில் இந்தக் குறைபாடு காணப்படுகிறது. இந்தக் கோயில் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடி ஆலயம் தொடர்பான ஆவணத்தை தயார் செய்து நிர்வாகத்திடம் ஆலயத்தை ஒப்படைக்க எதிர்பார்த்துள்ளோம்.

நீதிமன்ற வழக்கு இருப்பதன் காரணமாக சிலைகளை பிரதிஷ்டை செய்ய முடியாது. அவ்வாறு பிரதிஷ்டை செய்தால் நாம் எமது பதவிகளை துஷ்பிரயோகம் செய்ததாக ஆகிவிடும். ஆகையால் எதிர்வரும் 10ஆம் திகதி நீதிமன்ற தீர்ப்பு கிடைக்கப்பெற்றதும் அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்குச் செல்வோம்.

இங்கு எவரும் விகாரை அமைக்கவில்லை. அவ்வாறு அமைக்கப்படுமானால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றார்.

இதேவேளை, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கருத்துவெளியிடுகையில்,

இந்த விடயம் தொடர்பாக நானும் அமைச்சர் ஜீவன் தொண்டமானும் அமைச்சரவையில் பிரஸ்தாபித்திருந்தோம். ஜனாதிபதி எமது கருத்துகளுக்கு முன்னுரிமை வழங்கி சம்பவ இடத்துக்குச் சென்று எங்களுடைய கடமைகளைச் செய்துவருமாறு கூறியிருந்தார். விரைவில் நீதிமன்றம் ஊடாகவும் சம்பந்தப்பட்ட தரப்பினருடன் கலந்துரையாடியும் சுமுகமான நிலைமையை ஏற்படுத்துவோம். எங்களுடன் கொழும்பில் இதுகுறித்து கலந்துரையாடி தீர்வை வழங்குவேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார் என்றார்.

இதன்போது இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினர்களான ம. இராமேஷ்வரன், கு. திலீபன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தேசிய அமைப்பாளர் பழனி சக்திவேல், சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா ஆகியோரும் ஆலயத்துக்கு வருகைதந்திருந்தனர்.

## தினசரி பலாபலன்கள்

**சுபகிருது வருடம் பங்குனி மாதம் 20ஆம் நாள் திங்கட்கிழமை**

மேஷம் – பணம் ஏதோ வழியில் வந்து கொண்டிருக்கும், தெளிந்த மனதுடன் சேவையாற்றுவீர்கள்.

ரிஷபம் – பயணங்களால் மன மகிழ்ச்சி உற்சாகம், தாய்வழி இலாபங்கள் உண்டு.

மிதுனம் – சமயோகித புத்தியால் அனைத்தையும் வெற்றி கொள்வீர்கள், அவசிய செலவுகள் இருக்கும்.

கடகம் – திடீர் பண வரவுக்கான வாய்ப்பு உள்ளது, வார்த்தைகளால் விளையாடுவீர்கள்.

சிம்மம் – மனதை அலைய விடாதீர்கள், சிந்தனையில் மூழ்கியிருப்பீர்கள். அதனால் ஞாபக மறதி ஏற்படலாம்.

கன்னி – வீண் டென்ஷன் வேண்டாம், உங்கள் பணம் பொருட்களை பத்திரப்படுத்திக்கொள்ளுங்கள்.

துலாம் – தொட்டது துலங்கும் நாள், மன அமைதியுடன் அனைத்தையும் சாதிப்பீர்கள்.

விருச்சகம் – பயணங்களால் சிரமங்களை அனுபவித்தாலும் பண வரவு உண்டு, உடல் நிலையில் அக்கறை காட்டுங்கள்.

தனுசு – எதிர்பாராத சுப செய்தியால் மகிழ்ச்சி, ஆலய தரிசனம் செய்துகொள்வீர்கள்.

மகரம் – மௌனம் காப்பதே சிறந்தது. யாருடனும் விதண்டாவாதம் செய்ய வேண்டாம்,

கும்பம் – காதல் பயணங்கள், சுற்றுலாக்கள் மூலம் மகிழ்ச்சி உண்டு, பெண்களால் இலாபம் உண்டு.

மீனம் – உடல் நிலையில் கவனம் செலுத்துங்கள், தேவையற்ற விடயங்களால் எரிச்சல் அடைவீர்கள்.

**திதி** : துவாதசி மு.ப. 6.24 வரை பின் திரயோதசி

**நட்சத்திரம்** : மகம் மு.ப. 7.23 வரை பின் பூரம்

**யோகம்** : மரண யோகம் மு.ப. 7.33 வரை பின் சித்த யோகம்

**வார சூலம்** : கிழக்கு திசை நோக்கி சுப காரியம் கூடாது

**நல்ல நேரம்** : பி.ப. 12.07 – 1.07 மணி வரை

**ராகு காலம்** : 7.37 – 9.07 மணி வரை

**எமகண்டம்** : 10.37 – 12.07 மணி வரை

**குளிகை** : 1.37 – 3.07 மணி வரை

**சந்திராஷ்டமம்** : மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தன அதிர்ஷ்டம்** (பிறந்தவர்களுக்கு) : அசுவினி, மகம், மூலம்

**விஷேட தினம்** : பிரதோஷ விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

# நானுஓயா கிளாசோ தோட்ட அம்மன் ஆலயத்தில் சூனியம்

## தஞ்சாவூர் போலி பூசாரிகள் இருவரால் ஊரில் களேபரம்



(ஆ.ரமேஸ்)





நானுஓயா கிளாசோ கல்கந்தை மேல் பிரிவு தோட்ட அம்மன் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள சூனியத்தை தான் எடுப்பதாக கூறி தலவாக்கலையிலிருந்து வருகை தந்த இந்திய தஞ்சாவூர் பூசாரியின் செயல் தோட்ட மக்களிடத்தில் களேபரத்தை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவத்தில் பூசாரிகள் இருவரை தோட்ட மக்கள் விரட்டியடித்த சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை (31) மாலை இடம்பெற்றது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

இந்தியா, தஞ்சாவூரைச் சேர்ந்த நபர் ஒருவர் தலவாக்கலை பகுதியில் தங்கியிருந்து சாமி பார்ப்பது, சூனியம் எடுப்பது போன்ற செயல்களில் ஈடுபட்டு பணம் சம்பாதித்து வந்துள்ளார். இவர் கடந்த சில நாட்களாக நானுஓயா கிளாசோ மேல் பிரிவு தோட்டத்திற்கு வருகை தந்து அங்கு வெவ்வேறான மூன்று வீடுகளில் சூனியம் எடுக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

முதன்முறையாக சாமி ஆடி வீட்டில் சூனியம் இருப்பதாகக் கூறி ஒருதொகை பணத்தைப் பெற்று அங்கு பூமியில் மறைத்து வைத்திருந்த சூனியத்தை எடுத்ததாக வீட்டார் ஊராரிடம் தெரிவித்து, ஊர் மக்களிடம் நம்பிக்கையை வளர்த்துள்ளார்.

மேலும் பூசாரி தோட்டத்திலுள்ள அம்மன் ஆலயத்தில் ஆறு இடங்களில் சூனியம் வைக்கப்பட்டு தோட்ட மக்களை ஆலயத்திற்கு வரவிடாமல் செய்துள்ளதாகவும் அந்த சூனியத்தை ஊர் மக்கள் மத்தியில் ''நான் எடுக்கிறேன்'' என தெரிவித்ததாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் கிளாசோ தோட்ட மக்களிடத்தில் அச்சம் தோன்றி, மனக்குழப்பமும் ஏற்பட்டுள்ளது. பின் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ள சூனியத்தை எவ்வாறு எடுப்பது அதற்கு என்ன செய்யவேண்டும் என ஆலோசித்து பின் பூசாரியை அழைத்து ஆலய நிர்வாகம், பொதுமக்கள் ஆகியோர் வினவியதுடன், பொதுமக்கள் மத்தியில் எழுந்துள்ள அச்சத்தைப் போக்க சூனியம் இருந்தால் எடுக்கட்டும் என ஆலய நிர்வாகம் கூறியுள்ளது.

அப்போது பூசாரி ஒரு சூனியத்தை எடுக்க தலா ஆறாயிரம் ரூபா கேட்டு பின் ஐயாயிரம் ரூபாவுக்கு இணங்கி, ஆறு சூனியங்களை எடுக்க 30ஆயிரம் ரூபா வேண்டும் எனவும் பூசைப் பொருட்களை தோட்ட மக்கள் வாங்கித் தர வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இதற்கு சம்மதித்த தோட்ட மக்களிடத்தில் தலா ஒரு வீட்டுக்கு ஆயிரம் ரூபா வீதம் காசு வசூலிக்கப்பட்டு இதில் 46 ஆயிரம் ரூபா கிடைத்ததுடன், சூனியம் எடுக்கும் நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் ஆரம்பிக்கப்பட்டது.

இதன்போது 18 பேர் விரதம் இருக்கும்படியும், வீடுகளில் மாமிசம் சமைக்கவோ சாப்பிடவோ வேண்டாம். வீடுகளை சுத்தமாக வைத்திருங்கள் என்ற பூசாரியின் சொல்லுக்கமைய தோட்ட மக்கள் இணங்கி அரை நாள் வேலையும் விட்டு அனைவரும் ஆலயத்திற்கு வருகை தந்தனர்.

ஆலயத்தில் மக்கள் வந்து குவிய மளமளவென துணை பூசாரி சாங்கியத்திற்கான வேலைகளை பார்த்தார். ஊற்றெடுக்கும் இடங்களிலிருந்து நீரும் கொண்டுவரப்பட்டு செம்புகளில் நிரப்பப்பட்டது. தலைமை பூசாரி பூசையை ஆரம்பித்தார். யாகத்திற்கு தீயும் கொழுந்துவிட்டு எரிய சாம்பிராணி புகையுடன் வேர்கள், குச்சிகள் என இட்டு புகையும் பரப்பி கூடியிருந்த மக்களின் நெற்றியில் மைகளும் பூசப்பட்டன.

பூசாரி அருள் எடுத்து ஆஞ்சநேயர் சாமியை வரவழைத்து அங்கும் இங்கும் தாவி முதலில் ஆலயத்தின் முன் வாசலில் குழியை போடச் சொல்லி அதில் ஊற்றுநீரை இடச்சொல்லி ஆங்காரத்துடன் அந்த குழியில் இரு கைகளையும் இட்டு ஒரு மண் உருண்டையை எடுத்து தட்டில் வைத்தார்.

அட ஆண்டவனே அம்மனுக்கு சூனியமா! வைத்தவன் நல்லாவே இருக்க மாட்டான் என புலம்பிய மக்கள் அந்த மண் உருண்டைகள என்னதான் இருக்கிறது என பார்க்க ஆவலாக இருந்தனர்.

இவ்வாறே நான்கு இடங்களில் தோண்டி மண் உருண்டைகள் எடுக்கப்பட்டன. பின்னர் அம்மனுக்கு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை தோட்டத்தில் ஒருவர் மடிப்பிச்சை ஏந்தி பெரும் அரிசியில் கூழ் காய்ச்சி படைத்து, மறுநாள் புதன்கிழமை சூனியத்தை எடுக்கவேண்டும் என அருள்வாக்கு சொல்ல பயம் ஏற்பட்டதால் இன்றே எதையேனும் செய்து சூனியத்தை எடு சாமி என கூச்சலிட்டு குழப்பம் ஏற்பட்டது.

இந்தக் குழப்பம் பின் இரு தரப்புக்கிடையில் சண்டையாக மாறி கைகலப்பானது பூசாரிகள் இருவரும் தப்பிச் சென்றுவிட்டனர். இதன்போது ஆலயத்தில் சண்டை ஓயவில்லை. நானுஓயா பொலிஸாருக்கும் தகவல் செல்ல, அவர்களும் பூசாரிகளை மடக்கிப்பிடிக்க முயற்சித்தும் முடியவில்லை.

ஆலயத்தில் எடுக்கப்பட்ட சூனிய மண் உருண்டைகளை கலைக்க பூசாரி வேண்டுமே என ஒருபுறம் ஆட்கள் கதற செய்வதறியாது களேபரமானது.

பின் கிளாசோ கீழ்ப்பிரிவு தோட்ட ஆலய குருக்கள் முன்வந்து எடுத்து வைத்திருந்த மண் உருண்டைகளை தண்ணீர் விட்டு கழுவ அதில் சூனியம் ஏதும் இருக்கவில்லை. வெறும் மண் மாத்திரமே இருந்தது. இதையடுத்து போலி பூசாரிகள் மீது பொலிஸில் புகார் வழங்கப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி ரணிலை சந்தித்த இந்திய நல்லாட்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் லால்





இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் இந்திய நல்லாட்சி நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் பாரத் லால், இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் நேற்று முன்தினம் (01) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தனர்.

இலங்கையில் அரச சேவையில் பயனுள்ள மாற்றத்தை ஏற்படுத்த உதவுவது மற்றும் பயனுள்ள கண்காணிப்பு நடவடிக்கைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் அரச நிறுவனங்களின் செயல்திறனை எவ்வாறு மேம்படுத்துவது என்பதைக் கண்டறிவதே பாரத் லாலின் இலங்கை விஜயத்தின் நோக்கமாகும்.

மக்கள் சேவைகளை வழங்குவதற்காக தகவல் தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்தி இந்தியா குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை அடைந்துள்ளதாகவும் இதன்மூலம் பல பில்லியன் ரூபாவை சேமிக்க முடிந்துள்ளதாகவும் ஜனாதிபதியிடம் பாரத் லால் சுட்டிக்காட்டினார்.

இலங்கையில் அரச நிர்வாகம் மற்றும் அரச கொள்கை தொடர்பான பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவுவதற்கு ஆதரவளிக்குமாறு பாரத் லாலிடம் ஜனாதிபதி கோரிக்கை விடுத்தார்.

இந்நிகழ்வில் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவும் கலந்துகொண்டார்.

## தெலுங்கு உகாதி புத்தாண்டின் ஆரம்ப நிகழ்வு

அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் இவ்வருடத்துக்கான தெலுங்கு உகாதி புத்தாண்டிற்கான ஆரம்ப நிகழ்வை கடந்த வெள்ளிக்கிழமை (31) கொண்டாடியது.

கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வர மகா விஷ்ணு ஆலயத்தில் அதன் பிரதம குரு சிவஸ்ரீ க.ஜெனார்த்தன தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வினை அகில இலங்கை தெலுங்கு காங்கிரஸ் தலைவர் எம்.அன்பழகன் ஏற்பாடு செய்திருந்தார். பிரதம அதிதியாக கலைஞரும் சிரேஷ்ட ஊடகவியலாளரும் புதிய அலை கலை வட்டத்தின் ஸ்தாபகருமான ராதாமேத்தா கலந்துகொண்டார்.



சிறப்பு அதிதிகளாக கலைஞர் சிவா பிரதீபன் சமூக சேவையாளர் க.சசிகுமாரனும் பங்கேற்றனர்.

## கடந்த வருடத்தின் முதல் 8 மாதங்களில் 3 அரச நிறுவனங்களுக்கு 85 ஆயிரத்து 400 கோடி ரூபா நட்டம்

இலங்கை மின்சார சபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆகிய நிறுவனங்களுக்கு கடந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் மாத்திரம் 85 ஆயிரத்து 400 கோடி ரூபாவுக்கும் அதிகமான தொகை நஷ்டம் ஏற்பட்டுள்ளதாக பாராளுமன்ற துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி வலேபொட தெரிவித்தார்.

அரச நிறுவனங்களின் மொத்த நட்டத்தில் 99 வீதத்தை இந்த மூன்று நிறுவனங்களும் தோற்றுவித்துள்ளதாகவும் இந்த மூன்று நிறுவனங்களும் பல வருடங்களாக நட்டத்தில் இயங்கி வருவதால் பாரிய கடன்சுமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த வருடத்தின் முதல் எட்டு மாதங்களில் நாட்டின் 52 பிரதான அரச நிறுவனங்களின் நட்டம் 72 ஆயிரத்து 600 கோடி ரூபாவாகும். இந்த 52 நிறுவனங்களில் 32 அரச நிறுவனங்களின் வரிக்கு முந்திய இலாபம் 13 ஆயிரத்து 400 கோடி ரூபா எனவும் எஞ்சிய 20 அரச நிறுவனங்கள் 86 ஆயிரத்து 100 ரூபா நஷ்டம் அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நிதி பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் நிதி முகாமைத்துவ அறிக்கையின்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை இரண்டையும் முறையான நிதி முகாமைத்துவத்தின் கீழ் கொண்டுவருவதுடன், ஸ்ரீலங்கன் விமான சேவையை மறுசீரமைக்கவும் வேண்டும் என சுட்டிக்காட்டுவதாக தெரிவித்தார்.

இதேவேளை, 2022ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் 4.3 சதவீதமாக இருந்த வேலையின்மை வீதம் அந்த ஆண்டின் இரண்டாவது காலாண்டில் 4.6 சதவீதமாக அதிகரித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஜே.வி.பியே மாணவர்களை வீதிக்கு இறக்குகிறது

### ருஹுணு பல்கலை உபவேந்தர் சாடல்

தேசிய மக்கள் சக்தி பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளுக்கு பல்வேறு இடையூறுகளை ஏற்படுத்துவதாக ருஹுணு பல்கலைக்கழகத்தின் உப வேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேன தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (02) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய மக்கள் சக்தி அல்லது மக்கள் விடுதலை முன்னணிக்கு சார்பான குழுவினரே என்னை பதவியிலிருந்து நீக்குமாறு பல்வேறு கருத்துகளை முன்வைத்து வருகிறார்கள். ருஹுணு பல்கலைக்கழகத்தின் விரிவுரையாளர் சங்கங்களின் உறுப்பினர்கள் செயற்படும் விதத்தில் இது தெளிவாகத் தெரிகிறது.

தமக்கான மக்கள் இருப்பு, அரசியல் இருப்பு மாணவர் சங்கங்களில் இருப்பதாக தேசிய மக்கள் சக்தி நம்புகிறது. அதேபோன்று, மாணவர் அமைப்புகளை வீதிக்கு இறக்காமல் தம்மால் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற முடியாது என்றும் அவர்கள் நம்புகிறார்கள். அதனடிப்படையில் ருஹுணு பல்கலைக்கழக மாணவர்கள் அமைப்பின் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக என்னை இந்தப் பதவியிலிருந்து நீக்குவதற்கு முயற்சிக்கிறார்கள். மேலும், என் மீது பொய் குற்றச்சாட்டுகளை முன்வைத்து பதவியிலிருந்து நீக்க பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள் என்றும் நம்புகிறேன்.

இதற்காக, அச்சுறுத்தி வலுக்கட்டாயமாக மாணவர்களை ஆர்ப்பாட்டங்களுக்கு அழைத்துச் செல்கிறார்கள். விரிவுரையாளர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்து மின்னஞ்சல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. நேர்மையாகவும், பயமின்றி கடமையாற்றிவரும் என்னை பதவியிலிருந்து நீக்கிவிட்டு பல்கலைக்கழகத்தை அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவரவே முயற்சிக்கிறார்கள் - என்றார்.

# மிருசுவில் பகுதியில் குடும்பஸ்தர் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம்

### இரு மகன்கள் உள்ளிட்ட மூவர் கைது

யாழ்ப்பாணம், மிருசுவில் கரம்பகம் பகுதியில் 43 வயதுடைய குடும்பஸ்தரொருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் அவரது இரு மகன்கள் உள்ளிட்ட மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 17 மற்றும் 19 வயதுடைய இருவரும் உயிரிழந்தவரின் மகன்களெனவும் 19 வயதுடைய மற்றைய சந்தேக நபர் அவர்களின் நண்பர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, 43 வயதுடைய சிவசோதி சிவகுமார் என்ற குடும்பஸ்தர் கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் கடந்த வெள்ளிக்கிழமை (31) சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் கொடிகாமம் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளையடுத்து குறித்த மூவரும் நேற்று முன்தினம் (01) கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சிவகுமார், தனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளைப் பிரிந்து பல வருடங்களாக வாழ்ந்துவந்த நிலையில், அவரால் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க தந்தையைக் கொன்றதாக அவரது இளைய மகன்



பொலிஸில் வாக்குமூலம் அளித்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதற்கிடையில், இறந்தவரின் மூத்த மகனும் அவரது நண்பரும் சம்பவத்தின் பின்னர் வெட்டுகள் மற்றும் காயங்களுடன் மருத்துவமனைக்குச் சென்றதுடன், சிவக்குமார் ஒரு குழுவினரால் கொல்லப்பட்டதாக மருத்துவமனை ஊழியர்களிடம் கூறியதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

தனது தந்தையைக் காப்பாற்றும் முயற்சியில் காயமடைந்ததாக சிவக்குமாரின் மூத்த மகன் பொலிஸாரிடம் தெரிவித்தார்.

# பிரதான இரு மருந்து வகைகளை அதிக விலையில் கொள்வனவு செய்ய திட்டம்

### சுகாதார அமைச்சர் உடனடி நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று ரவி குமுதேஷ் வலியுறுத்து

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவில் பதிவுசெய்யப்படாத கென்சைக்லோடியன் மற்றும் லினோசோலிட் ஆகிய இரு மருந்து வகைகளை முறையே 77 ஆயிரம் ரூபாவுக்கும் இரண்டாயிரத்து 200 ரூபாவுக்கும் இறக்குமதிசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், இந்த செயற்பாடு இடம்பெறுவதற்கு முன்னர் இதுதொடர்பில் தேடிப்பார்த்து தடுத்துநிறுத்துவதற்கு சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்ல நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் நிறைவுகாண் மருத்துவவியல் வல்லுநர்களின் ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (02) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்து தெரிவிக்கையில்,

நாட்டில் குலுக்கோ மீற்றர் தொகுதியொன்றை பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளது. குறைந்த கட்டணத்தில் மேற்கொள்ளக்கூடிய மருத்துவ பரிசோதனைகளை கூட முன்னெடுக்க முடியாத நிலை உருவாகியுள்ளது. நீரிழிவு நோய்க்கான பரிசோதனைகளைக்கூட முன்னெடுக்க முடியாத நிலைமையே நிலவுகிறது. நாட்டில் பத்தில் இருவர் நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். அந்தத் தொகையையும் பத்து மடங்காக அதிகரிக்கும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இலாப நோக்குக்கான நோயாளர்களை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகள் அதிகரித்து விட்டன.

சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் சுகாதாரத்துறைக்கு உலக நாடுகளினால் வெவ்வேறுபட்ட நன்கொடைகள் வழங்கப்படுகின்றன. நாம் பெற்றுக்கொள்ளும் இரு வகையான அத்தியாவசிய மருந்துகளை 10 மடங்கு அதிகவிலைக்கு இறக்குமதி செய்ய முயற்சிக்கிறார்கள். இந்தச் சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் அதனை தடுத்துநிறுத்த ஜனாதிபதி உள்ளிட்ட தரப்பினர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அனைத்தையும் செய்துவிட்டு இந்த வழிகாட்டி தவறானது, செய்ய வேறு வழியில்லை என்று இந்த அதிகாரிகள் கூறுவார்கள் என்பதையும் நாங்கள் நன்கறிவோம்.

எனவே, கென்சைக்லோடியன் என்ற ஊசியின் தற்போதைய சந்தை விலை 7,000 ரூபாவாகும். இதனை மருந்தகங்களில் 9,000 ரூபாவுக்கு கொள்வனவு செய்யலாம். ஆனால், ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகையினூடாக தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையில் பதிவுசெய்யப்படாத இந்த ஊசி வகையை 77 ஆயிரம் ரூபாவுக்கு இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதுதொடர்பில் தேடிப் பார்க்கவேண்டும்.

அதேபோன்று, மிகவும் அவசர நிலைமையின்போது பயன்படுத்தப்படும். லினோசோலிட் என்றழைக்கப்படும் தடுப்பு மருந்து இன்று மருந்தகங்களில் 200 ரூபாவுக்கு கொள்வனவு செய்யப்படுகின்றது. ஆனால், இந்த மருந்தை 2,200 ரூபாவுக்கு கொள்வனவு செய்ய முயற்சித்து வருகிறார்கள் - என்றார்.

## 800 சாரதிகள் – 275 நடத்துனர்களை சேவையில் இணைக்க நடவடிக்கை

### இலங்கை போக்குவரத்துச் சபை

புதிதாக 800 சாரதிகள் மற்றும் 275 நடத்துனர்களை சேவையில் இணைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

அதற்கான ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் விரைவில் முன்னெடுக்கப்படவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் லலித் டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை போக்குவரத்துச் சபையில் 1035 சாரதிகள் மற்றும் 450 நடத்துனர்களுக்கு வெற்றிடங்கள் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91. விஜேராம மாவத்தை. கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஏப்ரல் 03 ஆம் திகதி, திங்கட்கிழமை

# முதலீட்டாளர்களை பாதுகாக்க வேண்டாமா

கட்டான பிரதேசத்தில் உள்ள ஓமான் நாட்டு ஆடைத் தொழிற்சாலையின் நிர்வாக இயக்குநர் கல்ஃபான் அல் ஓபைதானி என்பவர் தொழிற்சாலை வளாகத்தில் உள்ள அவரது பங்களாவில் கடந்த வியாழக்கிழமை இரவு 10.30 மணியளவில் 3 அடையாளம் தெரியாத கும்பலால் கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளார். தாக்குதலின்போது அவர் தங்கியிருந்த பங்களாவும் சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தத் தாக்குதலின் பின்னணியில் அப்பிரதேசத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர் ஒருவர் இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது. அரசியல் உள்நோக்கம் கொண்ட இந்தக் கும்பல்களால் தாங்கள் தொடர்ந்து துன்புறுத்தலுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி வருவதாக ஆடைத் தொழிற்சாலை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தாக்கப்பட்ட கல்ஃபான் அல் ஓபைதானி (55 வயது) தற்போது ஸ்ரீ ஜயவர்தனபுர மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். ஆடைத்தொழிற்சாலை காவலாளியும் குண்டர்களால் தாக்கப்பட்டுள்ளதோடு, இந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஓமான் அல் ஓபைதானி ஆடை பிரைவட் லிமிடெட் என்பது ஓமானின் முன்னணி ஆடைத் தொழிற்சாலையான அலோபைடானி ஸ்டோரின் சகோதர நிறுவனங்களில் ஒன்றாகும்.

கம்பஹா மாவட்ட இராஜாங்க அமைச்சர் ஒருவரின் சகோதரரே இந்த சம்பவத்தின் பின்னணியில் இருப்பதாக தெரிகிறது. இராஜாங்க அமைச்சரின் சகோதரருக்கு சொந்தமான வாகனம் ஒன்றை இந்த தொழிற்சாலைக்கு வாடகைக்கு விடுமாறு கோரிக்கை விடப்பட்டுள்ளது. அதற்கான வாய்ப்பு உடனடியாக இல்லையென்று தொழிற்சாலை நிர்வாகம் தெரிவிக்க, ஆத்திரமடைந்த கும்பலொன்று இரவு நேரம் புகுந்து வன்முறைகளில் ஈடுபட்டுள்ளது.

நாட்டில் வெளிநாட்டு முதலீடுகளை அதிகரிப்பது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி வரும் நிலையில், இவ்வாறு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீது தாக்குதல் நடத்தப்படுவதை ஆளும் தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு அரசியல்வாதிகள் பலரும் கண்டித்துள்ளனர். ஒன்றிணைந்த ஆடைகள் சங்கம் இதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இந்த செயல் தொடர்பில் பொறுப்பான அதிகாரிகளிடமிருந்து பாரபட்சமற்ற விசாரணை மற்றும் விரைவான சட்ட நடவடிக்கை தேவையென்று ஒன்றிணைந்த ஆடைகள் சங்கம் கோரியுள்ளது.

இலங்கையின் பொருளாதார நெருக்கடி காரணமாக ஏற்கனவே இங்கு முதலீடு செய்த வெளிநாட்டவர்கள் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கும் சமயம், நம்பிக்கையுடன் இங்கு தொடர்ந்து நிற்கும் எஞ்சிய முதலீட்டாளர்களையாவது தக்க வைக்கும் நடவடிக்கைகளை எடுக்காமல் அவர்களை அச்சுறுத்துவது, அடிபணியவைத்து மிரட்டுவது நியாயமானதா?

கடந்த காலங்களில் இப்படியான பல்வேறு நடவடிக்கைகள் நாட்டில் நடந்திருந்தன. குறிப்பாக கம்பஹா மாவட்டத்தில் மேர்வின் சில்வா காலத்தில் இருந்து கப்பம் பெறுதலும், மிரட்டி வர்த்தகர்களை பணியவைக்கும் சம்பவங்களும் அடிக்கடி அரங்கேறின. கடந்த கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சியின்போதும் இதற்கு முடிவு காணப்படவில்லை. அந்த நிலைமையே இன்று தொடர்கிறது. ஒரு பக்கம் ஜனாதிபதி ரணில் வெளிநாட்டு முதலீட்டாளர்களை இங்கு முதலிட அழைக்கிறார். அவர்களுக்குரிய வசதிகள் செய்யப்படும் என்கிறார். மறுபக்கம் அவரது நிர்வாகத்தின் கீழ் இருக்கும் அரசியல்வாதிகள், முதலீட்டாளர்களை இவ்வாறு அச்சுறுத்துகின்றனர் என்றால் என்ன அர்த்தம்?

இந்த செய்திகளைப் பார்க்கும் எவரும் இலங்கையில் முதலீடுகளை செய்வது தொடர்பில் ஒரு தடவைக்கு இரண்டு தடவைகள் யோசிக்கும் நிலைமையே ஏற்படும். மறுபுறம் எஞ்சியிருக்கும் முதலீட்டாளர்கள் கூட இங்கு தொடர்ந்து வர்த்தகத்தை செய்வது தொடர்பான தங்களது நிலைப்பாட்டை மீள்பரிசீலனை செய்யவேண்டி வரும்.

கம்பஹாவில் மட்டுமல்ல, இலங்கையின் எந்தப் பகுதியில் முதலீடுகளை செய்தாலும், அந்த முதலீட்டை செய்யும் வர்த்தகர் அல்லது தொழிலதிபர் அந்த பகுதியின் உள்ளூர் அரசியல்வாதிகளை அனுசரிக்க வேண்டும். அல்லது பணத்தால் கவனிக்க வேண்டும். இதுதான் உண்மை நிலை. தமது பகுதி முன்னேற்றம் அடைகிறதே, பலருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிறதே என்ற எந்த அக்கறையும் அந்த உள்ளூர் அரசியல்வாதிகளுக்கு இருப்பதில்லை.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தில் கவனம் செலுத்தி, முதலீட்டாளர்களின் பாதுகாப்பை உறுதிசெய்து அவர்கள் இங்கு சுதந்திரமாக தொழிலை மேற்கொள்ளும் உத்தரவாதத்தை வழங்கவேண்டும். அவர்களை அச்சுறுத்தும் நபர்களுக்கு தகுந்த தண்டனையை வழங்க பாதுகாப்பு, நீதித்துறையூடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.இந்நிலைமை தொடருமாக இருந்தால் இலங்கையின் பொருளாதார நெருக்கடி நீடிப்பதை எவராலும் தடுத்துவிட முடியாது. முதலீட்டாளர்களுக்கே இலங்கையில் பாதுகாப்பில்லை என்ற தோற்றப்பாடு உருவானால் அது சுற்றுலா உட்பட்ட பல்வேறு துறைகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் அச்சம் உள்ளது. ஜனாதிபதியும், அரசும் அதன் பாரதூரத்தை உணரவேண்டும்.

## நுண்ணுயிரிகளின் தொழிற்சாலை!

உலகில் உற்பத்தியாகும் ஆற்றலில், 54 சதவீதத்தை தொழிற்சாலைகளே கபளீகரம் செய்கின்றன. எனவே, குறைவான ஆற்றலை வைத்து பொருட்களைத் தயாரிக்கும் முறையை சிலர் ஆராய்ந்து வருகின்றனர்.

வைல்ட் மைக்ரோப்ஸ் அந்த வகை ஆராய்ச்சிதான். நுண்ணுயிரிகளை வைத்து, சூழலுக்குக் கேடு விளைவிக்காத பொருட்களை குறைந்த ஆற்றல் செலவில், பெருமளவில் உற்பத்தி செய்யத் திட்டமிடுகின்றனர் வைல்ட் மைக்ரோப்ஸின் விஞ்ஞானிகள்.

இதுவரை வேதியல் துறையினர் கண்டுபிடிக்காத, புதுவகை நுண்ணுயிரிகளைக் கண்டுபிடித்து ஒரு புதிய பட்டியலை அவர்கள் தயாரித்து வருகின்றனர். இந்த நுண்ணுயிரிகள் உருவாக்கும் வேதிப்பொருட்கள் மனிதர்களுக்குப் பயன்படும் வகையில் இருக்கவேண்டும் என்பதுதான் அடிப்படைத் தகுதி. பிறகு அந்த நற்குணங்களை அதிகரிக்கும் வகையில், நுண்ணுயிரிகளுக்கு மரபணு திருத்தம் செய்தால், அவற்றின் மூலம் வேகமாக, மலிவாக, நமக்கு வேண்டிய பொருட்களைத் தயாரிக்கலாம் என்கின்றனர் வைல்ட் மைக்ரோப்ஸின் விஞ்ஞானிகள். முதற்கட்டமாக, உணவு, அழகு சாதனம், சலவைத்துறைகளில் பயன்படுத்தப்படும் உயிரிப் புரதங்களை தயாரிக்கும் நுண்ணுயிரிகளைக் கண்டறிய வைல்ட் மைக்ரோப்ஸ் விஞ்ஞானிகள் மும்முரமாகியுள்ளனர்.

# மாரடைப்பைத் தடுக்கலாம்!



நம் உடல் தான் கோவில். அந்த இதயத்துக்குள் தான் கடவுள் இருக்கிறார். கடவுள் குடிகொண்டு இருக்கும் இதயத்தை மிகவும் பத்திரமாக பாதுகாத்து கொள்ள வேண்டும்.

''திடீரென்று மாரடைப்பு என்று சொன்னார். ஆஸ்பத்திரிக்கு போகும்போதே இறந்து விட்டார்'' எனப் பலர் சொல்லி கேள்விப்பட்டு இருக்கிறோம். ''கொஞ்சம் முன்கூட்டியே கொண்டு வந்திருக்கக் கூடாதா?'' என்பார் அவரை பரிசோதிக்கும் வைத்தியர். மாரடைப்புக்கான அறிகுறிகள் என்பது சம்பந்தப்பட்ட நோயாளிகளுக்கு ஏற்கனவே தெரிந்து விடும்.

தீ இல்லாமல் புகை வராது. புகை வந்தாலே அங்கு நெருப்பு இருக்கிறது என்றுதானே அர்த்தம்.

உதாரணமாக உலகில் பெரும் அச்சத்தை ஏற்படுத்திய கொரோனா தொற்றை எடுத்துக் கொள்வோம். காய்ச்சல் வரும், இருமல் இருக்கும், மூச்சுவிட கஷ்டமாக இருக்கும். இதுதான் முதலில் நாம் கண்ட கொரோனா அறிகுறி. அடுத்த கட்டமாக 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்த்தால் நுரையீரல் பாதிக்கப்பட்டிருக்கும். இப்படி கொரோனா கடுமையாகத் தாக்கி நுரையீரல் பாதிக்கப்பட்டுத்தான் இலட்சக்கணக்கானோர் மரணத்தை தழுவினர்.

அதேபோல் மாரடைப்பு வருவதற்கும் தொடக்கத்திலேயே பல அறிகுறிகளை உணரலாம். அதனை அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம். இதயமானது ஓய்வின்றி துடித்துக் கொண்டே இருக்கிறது. நிமிடத்துக்கு 70 முதல் 80 முறை துடிக்கிறது. ஒரு இயந்திரம் போல் உடலுக்குள் இதயம் ஓடிக் கொண்டே இருக்கிறது. அந்த இதயம் வேலை செய்வது நமக்கு தெரிவதில்லை. பம்ப் மாதிரி சுருங்கி விரிந்து கொண்டே இருக்கிறது. இதயம் ஒரு அமைதியான உழைப்பாளி.

அதே இதயம் 80 ஐக் கடந்து 100 முறை துடிக்கும்போது உடலில் படபடப்பு ஏற்படும். புகையிரதம் போவது போல் ''டப்... டப்...'' என்று வேகமாக அடிக்கும். இதேபோன்ற மாற்றம் எப்போது தெரியவருகிறதோ அப்போது இதயம் பழுதாகி விட்டது என்று அர்த்தம். அமைதியாக வேலை பார்க்கும் வரை இதயம் நல்ல இதயம்தான்.

வலி தெரிவதில்லை. இதயம் வேலை செய்வது தெரிவதில்லை. வேகமாக நடக்கிறோம். மாடிப்படி ஏறுகிறோம். எந்த மாற்றமும் இல்லை. அப்படியானால் இதயத்துக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. நேற்று வரை நன்றாகத்தான் இருந்தது. இன்று மார்பில் என்னமோ செய்கிறது. உடம்பே சரியில்லை. சோர்வாக இருக்கிறது. நடக்க கஷ்டமாக இருக்கிறது. மாடிப்படி ஏறினால் மேல் மூச்சு வாங்குகிறது என்றால் கவனமாக இருக்க வேண்டும்.

இந்த அறிகுறிகள் தென்பட்டால் ''உனக்கு உடம்பு சரியில்லை. வைத்தியரிடம் சென்று சிகிச்சை பெறு'' என்று இதயம் சொல்வதாக எடுத்துக் கொள்ள வேண்டும். ஆனால், அதனை கண்டுகொள்ளாமல் பலர் அலட்சியமாக விட்டு விடுகிறார்கள்.

நன்றாக சாப்பிடுகிறோம். சாப்பிட்டவுடன் திடீரென நெஞ்சு வலிக்கிறது. சாப்பிட்டவுடன் வயிற்று வலி வந்தால் அது அஜீரணம். சாப்பிட்டால் நெஞ்சு வலி ஏன் வருகிறது? சாப்பிட்ட பின்னர் இரத்தம் வயிற்றுக்குப் போகும். அங்குதான் ஜீரண வேலை இருக்கிறது. குடலுக்கு நல்ல இரத்த ஓட்டம் இருந்தால்தான் ஜீரணம் நடக்கும். அந்த சமயம் இதயத்துக்கு இரத்தம் வருவதில்லை என்றால் அங்கே வலி வருகிறது. இது ஆகாரத்துக்குப் பின் வரும் நெஞ்சு வலி ஆகும். நடந்தால் வலி வரும். நின்று விட்டால் வலி வராது. மாடிப்படி ஏறினால் வலி இருக்கும். நின்று விட்டால் வலி இருக்காது. இது 'அமைதியான' நெஞ்சு வலி. எந்தவிதமான அறிகுறியுமே இல்லாமல் மாரடைப்பு ஏற்படுவது.

2ஆவது வாயுத்தொல்லை என்ற மாறுவேடத்தில் வரும். திருமணத்துக்கு போனேன். பிரியாணி ஒரு பிடி பிடித்தேன். அஜீரணம் மாதிரி நெஞ்சு எரிச்சலாக இருக்கிறது. அதற்கு மருந்து வாங்கி சாப்பிட்டேன். இஞ்சி சாப்பிட்டேன். இருந்தாலும் உடல் பழைய நிலைக்கு வரவில்லை என்பார்கள். வாயுத்தொல்லையால் நெஞ்சு வலி என்ற ஒன்றே கிடையாது. வாயுத்தொல்லை என்றாலே இதயத்தின் ஓலம் என்றுதான் பொருள். இதயம் தனக்கு சரியாக இரத்தம் கிடைக்கவில்லை என்று எண்ணும் போது ஏற்படும் முணுமுணுப்புக்கு பெயர் தான் வாயுத்தொல்லை.

பயங்கரமாக நெஞ்சு வலிக்கிறது என்றால் இதயம் சத்தம் போடுகிறது. ''என்னைக் கவனி. எனக்கு இரத்த ஓட்டம் சரியாக வரவில்லை. உடனே வைத்தியசாலைக்கு செல். இல்லை என்றால் நான் நின்று போவேன்'' என ஓலமிடுகிறது. இதற்குப் பெயர்தான் மாரடைப்பு.

பசிக்கிறது என்றால் குழந்தை ஓவென்று அழுகிறது. பசியில்லாதபோது குழந்தை அழுவதில்லை. அது போல்தான் அந்த இதயத்துக்கு பசி. இரத்த ஓட்டம் சரியில்லை. இதயத்துக்கு வேண்டியது இரத்த ஓட்டம். அந்த ஓட்டம் சரியாக நடந்தால் தான் ஒட்சிசன், குளுக்கோஸ் போன்றவை உள்ளே செல்லும்.

சிலருக்கு படுத்திருக்கும்போது வலி வரும். சிலருக்கு உடலுறவின்போது வலி வரும். கோபப்படும் போதும், சத்தம் போடும்போதும் வலி வரும். சத்தம் போடும்போது ஆவென்று நெஞ்சைப் பிடித்தார். கீழே விழுந்து விட்டார் என்பார்கள். சத்தம் போடும் போதும், கோபப்படும் போதும் இரத்த அழுத்தம் அதிகரிக்கும். அந்த சமயம் அனைத்து ரத்த குழாய்களும் சுருங்குகிறது. அதனால் இரத்த ஓட்டம் தடைபடுவதால் மாரடைப்பு வருகிறது.

1ஆவது 'அமைதியாக' வரும் நெஞ்சு வலி,
2ஆவது வாயுத்தொல்லை போன்ற மாயை,
3ஆவது நடந்தால் வரும் நெஞ்சு வலி,
4ஆவது படுத்திருந்தால் வரும் நெஞ்சுவலி,
5ஆவது மாரடைப்பு. நெஞ்சு வலி வந்தால் அது மாரடைப்பாக இருப்பதற்கு நிறைய சாத்தியக்கூறுகள் உள்ளன. இரவு 10 மணிக்கு ஒருவருக்குத் திடீரென மாரடைப்பு வருகிறது. வீட்டிலிருந்து வைத்தியசாலை செல்ல அரை மணிநேரம் ஆகும். அம்பியூலன்ஸை வரச் சொல்ல வேண்டும். அடுத்து வைத்தியசாலைக்குப் போகவேண்டும். எப்படியானாலும் 20 நிமிடம் ஆகும். அதற்குள் மாரடைப்பு தீவிரமாகி விடக்கூடாது.

அதற்கு என்ன செய்ய வேண்டும் என்றால் பேசாமல் படுத்துக் கொள்ள வேண்டும். அம்பியூலன்ஸுக்கு அழைக்கலாம். உறவினர்கள் உதவியை நாடலாம். எக்காரணம் கொண்டும் எழுந்து நடக்க வேண்டாம். மாரடைப்பு வந்த சமயம் நடந்தோம் என்றால் ஆபத்து அதிகம். மாடிப்படியில் இறங்க கூடாது. நாமே மோட்டார் சைக்கிளை ஓட்டி வைத்தியசாலைக்கு சென்று விடலாம் என்றும் முயற்சிக்க வேண்டாம். அது பெரிய ஆபத்தில் போய் முடிந்து விடும்.

அதனால் மாரடைப்புக்கு முதலுதவி என்பது அமைதியாக படுத்துக் கொள்வதுதான். அடுத்தது லோடிங் டோஸ் மாத்திரைகள் (உயிர் காக்கும் மருந்து) இருந்தால் சாப்பிடுங்கள். அதில் டிஸ்பிரின், அடார்வாஸ் டாடின், குலோபிடாப் என 3 விதமான மாத்திரைகள் இருக்கும். மருத்துவரின் அறிவுரைப்படி அதனை எடுத்துக்கொள்ள வேண்டும்.

சர்க்கரை வியாதி, இரத்த அழுத்தம் உள்ளவர்கள், அதிக மன அழுத்தம், மனக் குழப்பம் உள்ளவர்கள், உள்ளவர்களுக்கு மாரடைப்பு வர அதிக வாய்ப்புண்டு. அப்படிப்பட்டவர்கள் லோடிங் டோஸ் மாத்திரைகளை எப்போதும் கூடவே வைத்துக் கொள்ளுங்கள். ஆண்கள் தங்கள் சட்டைப்பையிலேயே வைத்திருங்கள். பெண்கள் தங்கள் கைப்பைகளில் எப்போதும் இருக்கும்படி பார்த்துக் கொள்ளுங்கள்.

நெஞ்சுவலி வந்தவுடன் லோடிங் டோஸ் மாத்திரைகளை சாப்பிட்டு விட வேண்டும். மாத்திரைகளாக விழுங்க முடியாதவர்கள் பொடியாக மாற்றி வைத்துக் கொள்ளுங்கள். லோடிங் டோஸ் மாத்திரைகள் இரத்தத்தின் அடர்த்தியை உடனே குறைத்து மாரடைப்பின் தீவிரத் தன்மையை குறைக்கும். இந்த மாத்திரைகள் சாப்பிடுவதால் 100 சதவீதம் உயிர் பிழைக்க சாத்தியம் உண்டு. மாத்திரை அடுத்த பாதிப்பு ஏற்படாதவாறு 3 மணிநேரம் வரை தாக்குப்பிடிக்கும். அதற்குள் மருத்துவரிடம் சென்று சிகிச்சை எடுத்துக் கொள்ளலாம்.

எப்போதுமே பெரியளவில் உடல் பிரச்சினை வரும்போது ஒரு மணிநேரத்துக்குள் வைத்தியசாலைக்குப் போக வேண்டும். தலையில் அடிபட்டாலோ, மாரடைப்பு வந்தாலோ, ஒரு பக்க மூளை வேலை செய்ய வில்லை என்றாலோ, தற்கொலைக்கு முயற்சித்தாலோ அந்த நபரை காப்பாற்ற வேண்டுமானால் ஒரு மணிநேரத்துக்குள் மருத்துவமனைக்குக் கொண்டு சென்று விட வேண்டும். அந்த ஒரு மணிநேரம் என்பது தங்கமான நேரம். ஒரு மணிநேரத்தை கடந்து சென்றால் சிகிச்சை பலன் கொடுக்காமல் போகும்.

லோடிங் டோஸ் மாத்திரை ஒரு மணிநேர தங்கமான நேரத்தை 3 மணிநேரமாக அதிகரித்துக் கொடுக்கும். இல்லாவிட்டால் ''தாமதமாக வந்து விட்டீர்களே, வரும் வழியிலேயே உயிர் பிரிந்து விட்டதே'' என்ற துயர சொல்லைத் தான் கேட்க வேண்டியிருக்கும். இந்த மாத்திரைகளை கையில் வைத்து பயன்படுத்தி ஆயிரக்கணக்கான இதய நோயாளிகள் உயிர் பிழைத்துள்ளனர்.

அதை விடுத்து சோடா குடிப்பது, சூடாக கோப்பி, டீ குடிப்பது, எண்ணெய் போட்டு நெஞ்சில் தேய்ப்பது போன்றவைகள் எந்த பயனையும் தராது. அதற்கு பதில் பாதிக்கப்பட்ட நோயாளி மூச்சை நன்றாக இழுத்து விடலாம். அப்போது ஒட்சிசன் நிறைய நம் உடலில் சென்று பலனை கொடுக்க வாய்ப்புண்டு.

வைத்தியசாலையை அடைந்ததும் அங்கும் முதலுதவி சிகிச்சை அளிப்பார்கள். தொடர்ந்து ஈ.சி.ஜி., ஒட்சிசன் அளவு, இரத்த அழுத்தம், இதயத்துடிப்பு, இரத்த பரிசோதனை என பல பரிசோதனைகளை வைத்தியர்கள் மேற்கொள்வர். தொடர்ந்து இதய பிரச்சினைக்கான காரணம் கண்டறியப்பட்டு அதற்கேற்ற சிகிச்சை அளிக்கப்படும்.

அடுத்து மாரடைப்பு வந்தவரை சுற்றி இருக்கும் உறவினர்கள் அந்த நபரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று சொல்கிறேன். மாரடைப்பு வந்தவர் பதட்டத்துடனும் அச்சத்துடனும் காணப்படுவார். சுற்றியிருக்கும் நீங்கள் அவரை மேலும் அச்சமடைய வைக்கக் கூடாது. ''ஐயோ, அம்மா...'' என அழுது சத்தம் போட்டால் பாதிக்கப்பட்டவர் மேலும் அச்சமடைந்து நோயின் தாக்கம் அதிகரிக்க நாமே காரணமாகி விடுவோம். எனவே, பாதிக்கப்பட்டவரை ''தைரியமாக இருங்கள். பயப்படாதீர்கள். வைத்தியரிடம் சென்று சரி செய்து விடலாம்'' என நம்பிக்கை தரும் வார்த்தைகளை பேசுங்கள். உங்கள் முகத்தில் தைரியத்தை காட்டுங்கள். அந்த தைரியம் நோயாளியை பிழைக்க செய்யும்.

''மாரடைப்பு வந்துவிட்டதே.. இனி பைபாஸ் சத்திரசிகிச்சை தான்..'' என்று கவலைப்பட வேண்டாம். எல்லோருக்கும் பைபாஸ் சர்ஜரி தேவைப்படாது. இப்போது நல்ல மருந்துகள் எல்லாம் வந்து விட்டன. இதயத்தில் சிறிய பிரச்சினைதான் என்றால் மருந்து செலுத்தி 2 நாட்களில் சரியாகி வீடு திரும்பி விடலாம்.

மாரடைப்பு என்பது இதயத்துக்கு இரத்தம் செல்லும் சிறு குழாயில் இரத்தம் உறைந்து கட்டியாக இருக்கும். அந்த கட்டியை அகற்றி இயல்பு நிலைக்கு கொண்டு வந்தால்தான் மீண்டும் இதயம் நல்ல முறையில் இயங்கும். அந்த இரத்தக் கட்டியை மருந்து கொடுத்து உடைக்கலாம். அந்த முயற்சி பலன் அளிக்காத பட்சத்தில் தான் அறுவை சிகிச்சைக்கு செல்ல வேண்டி இருக்கும்.


4 ஏக்கர் நிலத்தில் 3 ஏக்கருக்கு மட்டும் தண்ணீர் செல்கிறது. ஒரு ஏக்கர் நிலத்துக்கு தண்ணீர் செல்லவில்லை. அப்படியென்றால் அந்த ஒரு ஏக்கர் நிலம் வாடிப்போய் விடும். அதேபோன்று வாடிப்போன இதயம் தான் மாரடைப்பு. அந்த வாடிப்போன இதயத்தை பழையபடி இரத்த ஓட்டத்தை சீர் செய்து இதயத்தை இயங்கச் செய்வது தான் வைத்தியர்களின் பணி.

எனவே, சரியான நேரத்தில் சரியான மருத்துவத்தை செய்தால் உங்களுக்கு மருந்து மூலமாகவே மாரடைப்பு வியாதியை சரி செய்ய முடியும். மாரடைப்பு மீண்டும் வராமலும் தடுக்க முடியும். ஒரு வைத்தியரிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டால் கடைசி வரை அவரிடமே சிகிச்சை பெறுங்கள். அவர் மருந்து எடுத்துக் கொள்ளும் முறை, உடற்பயிற்சி, மூச்சுப்பயிற்சி எனப்பல ஆலோசனைகளை வழங்குவார். அந்த வழிமுறைகளைக் கடைப்பிடித்து மாரடைப்பை எதிர்த்து போராடி வெற்றி காணலாம்.

நன்றி - இணையம்

## தவக்கால சிந்தனை

***''மரியாவைத் தடுக்காதீர்கள். என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும்''***



*பாஸ்கா விழாவுக்கு ஆறு நாட்களுக்கு முன்பு இயேசு பெத்தானியாவுக்குச் சென்றார். அங்குதான் இயேசு இலாசரை உயிர்த்தெழச் செய்தார். அங்கு அவருக்கு விருந்தளிக்கப்பட்டது. மார்த்தா உணவு பரிமாறினார். இயேசுவோடு பந்தியில் அமர்ந்திருந்தவர்களுடன் இலாசரும் இருந்தார். மரியா ஏறக்குறைய 320 கிராம் இலாமிச்சை என்னும் கலப்பற்ற விலையுயர்ந்த நறுமணத் தைலத்தைக் கொண்டுவந்து இயேசுவின் காலடிகளில் பூசி, அதனைத் தமது கூந்தலால் துடைத்தார். தைலத்தின் நறுமணம் வீடெங்கும் கமழ்ந்தது. இயேசுவின் சீடருள் ஒருவனும் அவரைக் காட்டிக்கொடுக்க இருந்தவனுமான யூதாசு இஸ்காரியோத்து, "இந்தத் தைலத்தை 300 தெனாரியத்துக்கு விற்று, அப்பணத்தை ஏழைகளுக்குக் கொடுத்திருக்கக் கூடாதா?" என்று கேட்டான். ஏழைகள்பால் கொண்டிருந்த அக்கறையினால் அல்ல, மாறாக அவன் ஒரு திருடனாக இருந்ததால்தான் இப்படிக் கேட்டான். பணப்பை அவனிடம் இருந்தது. அதில் போடப்பட்ட பணத்திலிருந்து அவன் எடுத்துக் கொள்வதுண்டு. அப்போது இயேசு, "மரியாவைத் தடுக்காதீர்கள். என் அடக்க நாளை முன்னிட்டு அவர் இதைச் செய்யட்டும். ஏழைகள் உங்களோடு என்றும் இருக்கிறார்கள். ஆனால், நான் உங்களோடு என்றும் இருக்கப்போவதில்லை" என்றார். இயேசு அங்கிருப்பதை அறிந்த யூதர்கள் பெருந்திரளாக வந்தார்கள். அவர்கள் இயேசுவை முன்னிட்டு மட்டுமல்ல, அவர் உயிர்த்தெழச் செய்திருந்த இலாசரைக் காண்பதற்காகவும் வந்தார்கள். ஆதலால் தலைமை குருக்கள் இலாசரையும் கொன்றுவிடத் திட்டமிட்டார்கள். ஏனெனில், இலாசர் காரணமாக யூதர்களிடமிருந்து பலர் விலகி இயேசுவிடம் நம்பிக்கை கொண்டனர்.*

## இன்றைய நாளில்...

- 1505 – இலங்கையில் முதன்முதலாகப் போர்த்துக்கேயர் வந்திறங்கினர்.
- 1922 – ஜோசப் ஸ்டாலின் சோவியத் ஒன்றியப் பொதுவுடைமைக் கட்சியின் முதல் பொதுச் செயலாளரானார்.
- 1958 – பிடெல் காஸ்ட்ரோவின் புரட்சி இராணுவம் அவானா மீது தாக்குதல் தொடுத்தது.
- 1966 – சோவியத்தின் லூனா-10 விண்கலம் சந்திரனின் சுற்றுவட்டத்தை அடைந்தது. பூமியை விட வேறொரு விண்பொருளைச் சுற்ற ஆரம்பித்த முதலாவது விண்கலம் இதுவாகும்.
- 2016 – 214,488 வணிக நிறுவனங்களின் தகவல்கள் அடங்கிய பனாமா ஆவணங்கள் வெளியிடப்பட்டன.

## நக்கல் நமசிவாயம்

**தன்ர ஆட்சியில சட்டவிரோத செயல்களுக்கு இடமளிக்கப் போவதில்லையெண்டு ரணில் ஐயா சொல்லுறார்..! அப்படியெண்டா தேர்தலை நடத்தாமல் இருக்கிறது என்னவாம்..?**



# நான் ஜனாதிபதியாக இருக்கும்வரை சட்ட ஒழுங்கை மீற எவருக்கும் இடமளியேன்!

## பாதுகாப்புத் துறையினருக்கான உரையில் ஜனாதிபதி தெரிவிப்பு



தான் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் சட்ட ஒழுங்கை மீற எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அதேபோல் தான் ஒருபோதும் பிரசித்தமான தீர்மானங்களை மேற்கொள்ளப்போவதில்லை எனவும், மாறாக சரியான தீர்மானங்களையே எடுப்பதாகவும் தெரிவித்த ஜனாதிபதி, பிரசித்தமான தீர்மானங்களினால் நாட்டிற்கு சீரழிவு மட்டுமே ஏற்பட்டதாகவும் தெரிவித்தார்.

முப்படைகளினதும் தலைவரான ஜனாதிபதி, அநுராதபுரத்திலுள்ள விமானப்படை முகாமில் நேற்று முன்தினம் (01) முப்படையினருக்கான சிறப்புரை ஆற்றியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கருத்துச் சுதந்திரத்திற்கமைய தன்னை விமர்சிக்க அனைவருக்கும் சுதந்திரம் உள்ளது. ஆனால், வீதிகளில் வன்முறைகளை மேற்கொள்ள எவருக்கும் உரிமை இல்லை.

சரியானதை செய்ய அனைவரும் பழகிக்கொள்ள வேண்டும், அதற்கான சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளதாக என்பதை அறியவே, சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகள் முதலில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

அதனை உதாரணமாக கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். புதிய சிந்தனைகளுடன் புதிய பயணத்தை தொடர்ந்தால் 25 வருடங்களுக்குள் பெரும் அபிவிருத்தியை அடையமுடியும்.

பயங்கரவாதத்தை வெற்றிகொண்டது போன்றே நாட்டின் பொருளாதார யுத்தத்தையும் வெற்றிகொண்டு பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த துரித நடவடிக்கை எடுக்கப்படும். அதற்காக முப்படைகளினதும் பொலிஸாரினதும் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக தேவை.

உலகின் பலம்வாய்ந்த நாடுகளுக்கிடையிலான போட்டித் தன்மை, இந்து சமுத்திர வலயத்தை பெரிதும் பாதிக்கும். இலங்கையின் ஜனாதிபதி என்ற வகையில் அந்த பாதிப்பிலிருந்து இலங்கையை மீட்க முயற்சிக்கிறேன்.

நடந்து முடிந்த போராட்டங்களைப் போல் அல்லாது எதிர்காலத்தில் வரவிருக்கும் இந்த போராட்டங்கள் தொழில்நுட்பத்தை மையப்படுத்தியதாக அமையும். தொழில்நுட்ப தெரிவுடன் கூடிய முப்படையினரை உருவாக்குவதற்காகவே "பாதுகாப்பு - 2023" (Defense - 2023) என்ற திட்டம் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சட்டம் ஒழுங்கு மற்றும் நீதி அமைச்சர்களுக்கு இது தொடர்பான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் அதற்காக படையினரின் ஒத்துழைப்பு அவசியம் எனவும் ஜனாதிபதி மேலும் வலியுறுத்தினார்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வு) ஜெனரல் கமல் குணரத்ன, பாதுகாப்பு பதவி நிலை பிரதானி ஜெனரல் ஷவேந்திர சில்வா, இராணுவ தளபதி லெப்டினன் ஜெனரல் விக்கும் லியனகே, விமானப்படைத் தளபதி வைஸ் எயார் மார்ஷல் சுதர்ஷன பத்திரன, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரால் பிரியந்த பெரேரா, பொலிஸ்மா அதிபர் சீ.டி.விக்ரமரட்ன, முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் 1,200 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டிருந்தனர்.

# 2027ஆம் ஆண்டு இறுதிக்குள் நாட்டை கண்ணிவெடி இல்லாத நாடாக மாற்றுவதற்கான திட்டங்கள் வகுப்பு



2027ஆம் ஆண்டு இறுதிக்குள் நாட்டை கண்ணிவெடிகள் இல்லாத நாடாக மாற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் ஆலோசனைக்கு அமைய கண்ணிவெடிகளை அகற்றும் அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் இது நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இதன்படி, இலங்கையில் கண்ணிவெடி அகற்றுவதற்கான இறுதி மூலோபாய ஒழுங்கமைப்புத் திட்டத்தை, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ்.சத்யானந்தா தலைமையில் கொழும்பு கோல்பேஸ் ஹோட்டலில் கடந்த வெள்ளிக்கிழமை (31) நடைபெற்றது. இந்த வேலைத்திட்டத்தில் கலந்துகொண்ட தூதுவர்கள், உயர்ஸ்தானிகர்கள் மற்றும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளிடம் இந்நாட்டில் கண்ணிவெடிகளை அகற்றுவது தொடர்பான திட்டம் அமைச்சின் செயலாளரால் முன்வைக்கப்பட்டது.

ஜெனீவா சர்வதேச மனிதநேய கற்றலுக்கான கண்ணிவெடி அகற்றும் நிலையத்தின் ஆதரவுடன் தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தினால் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன்கீழ், நாட்டை கண்ணிவெடிகளில் இருந்து விடுவிக்க தேசிய மற்றும் சர்வதேச பங்காளர்களுடன் நெருக்கமாக பணியாற்ற இருப்பதாக அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

2002ஆம் ஆண்டு முதல், கண்ணிவெடி அகற்றும் வேலைத்திட்டம் நாட்டில் இயங்கி வருவதுடன், 2010ஆம் ஆண்டு தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. கடந்த காலங்களில் பல்வேறு அமைச்சுகளின் கீழ் இயங்கிய இந்த நிலையம் தற்போது நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மீள்குடியேற்றப் பிரிவின் கீழ் செயற்படுகின்றது. இது கண்ணிவெடி அகற்றும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, வழிநடத்துவதோடு கண்காணிக்கிறது.

நாட்டில் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கைகளுக்காக இலங்கை இராணுவத்தின் மனிதாபிமான கண்ணிவெடி அகற்றல் பிரிவுக்கு அரசாங்கம் நிதி உதவி வழங்குகிறது. மற்ற 4 அரசு சாரா நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் 17.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இந்த திட்டத்திற்கு ஆதரவை வழங்கும் சர்வதேச அமைப்புகளிடமிருந்து வழங்கப்படுகிறது.


இதுவரை, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் 204 சதுர கிலோமீற்றருக்கும் அதிகமான நிலப்பரப்பில் இருந்து ஆளணிக்கு எதிரான கண்ணிவெடிகள் அகற்றப்பட்டு பொதுமக்களுக்காக விடுவிக்கப்பட்டுள்ளன. 'தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தின்படி', கிட்டத்தட்ட 15 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் கண்ணிவெடிகள் அகற்றப்பட உள்ளன.

நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர் (வீடமைப்பு மற்றும் அபிவிருத்தி) டபிள்யூ.எம்.ஆனந்த, ஜெனீவா சர்வதேச மனிதநேய கற்றலுக்கான கண்ணிவெடி அகற்றும் மையத்தின் சிரேஷ்ட ஆலோசகர் ஓசா மஸ்லிபெர்க், தேசிய கண்ணிவெடி அகற்றல் செயற்பாட்டுத்திட்ட நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் வீ. பிரேமச்சந்திரன், இலங்கை இராணுவத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் அலகின் தலைவர் மேஜர் ஜெனரல் எம்.கே.ஜயவர்தன, பிரதம அதிகாரி (2) மேஜர் ரஜித அம்பலன்பிட்டிய உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

தளபாடத் தொழிலில் திறமையாக ஈடுபடக் கூடியவர்கள் தேவை. உணவு, தங்குமிடம் உண்டு. உடனடியாக தொடர்புகொள்ளவும்.

0713 255 329

# சித்த வைத்திய அலகுகளைப் பீடங்களாக தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அனுமதி



யாழ்ப்பாணம் – கைதடியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த வைத்திய அலகு மற்றும் திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சித்த வைத்திய அலகு ஆகியவற்றை சித்த வைத்திய பீடங்களாகத் தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

கடந்த மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலேயே இதற்கான அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்கள் சட்டத்தின்படி கல்வி அமைச்சரினால் பீடங்களுக்கான பிரகடன வர்த்தமானி விரைவில் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கான பணிகளை விரைவுபடுத்துமாறு கல்வி அமைச்சின் செயலாளருக்கு அமைச்சரவை அறிவுறுத்தியிருக்கிறது.


யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த வைத்திய அலகு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த வைத்திய அலகு ஆகியவற்றை சித்த வைத்திய பீடங்களாகத் தரமுயர்த்துவதற்கான முன்மொழிவு கடந்த பெப்ரவரி 6ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கல்வியமைச்சரால் முன்வைக்கப்பட்டது. அன்றைய தினம் கல்வியமைச்சரின் முன்மொழிவை ஆராய்ந்த அமைச்சர்கள் குழு, இரு பல்கலைக்கழகங்களிலும் சித்த வைத்திய பீடங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான ஆளணி மற்றும் பௌதீகவளங்கள் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கையிடுமாறு கல்வியமைச்சருக்கு ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவரைப் பணித்திருந்தது. இரு பல்கலைக்கழகங்களிலும் சித்த வைத்திய பீடங்கள் இயங்குவதற்குத் தேவையான பௌதீகவளங்களும், ஆளணியும் இருப்பதை உறுதிப்படுத்தி கல்வியமைச்சருக்கு ஊடாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுத் தலைவர் வழங்கிய அறிக்கையும், சித்த வைத்திய பீடங்களின் முக்கியத்துவத்தை விபரித்து கூற்றொழில் அமைச்சர் சமர்ப்பித்த முன்மொழிவும் கடந்த மாதம் 27ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சித்த வைத்திய அலகு மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த வைத்திய அலகு ஆகியவற்றை சித்த வைத்திய பீடங்களாகத் தரமுயர்த்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதுடன், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கல்வியமைச்சின் செயலாளரை அறிவுறுத்தியுமுள்ளது.

# ஷாதுலிய்யா தரீக்காவின் கலீபதுல் குலபாவாக மௌலவி

## ஸுஹ்ருத்தீன் முஹம்மத் நியமனம்

**(பேருவளை நிருபர்)**




பாஸியதுஷ் ஷாதுலிய்யாத் தரீக்காவின் இலங்கைக்கான புதிய கலீபதுல் குலபாவாக பிரபல மார்க்க அறிஞரும் காலி அலிய்யா சட்டக்கல்லூரி பணிப்பாளரும் காலி மாவட்ட ஜம்மியதுல் உலமாவின் தலைவருமான சங்கைக்குரிய மௌலவி அல் ஹாஜ் ஸுஹ்ருத்தீன் முஹம்மத் (பாரி)உலக ஷாதுலிய்யா தரீக்காவின் உயர்பீடத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

கலீபதுல் குலபாவாக பதவி வகித்து இறையடி சேர்ந்த கொழும்பு உம்மு ஸாவியாவின் பிரதம இமாம் பிரபல மார்க்க அறிஞர் மர்ஹூம் மௌலவி அல் ஹாஜ் ஜே.அப்துல் ஹமீத் (பஹ்ஜி - ரஹ்) மறைவுக்குப் பின்னர் வெற்றிடமாக இருந்த இப்பதவிக்கு புதிதாக மௌலவி அல் ஹாஜ் ஸுஹ்ருத்தீன் முஹம்மத் (பாரி) நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 12 இலட்ச ரூபா பணத்தை களவாடிய இளைஞர் கைது

**(வவுனியா நிருபர்)**

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டமை தொடர்பில் 20 வயது இளைஞன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் நேற்று (02) தெரிவித்தனர்.

வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் உள்ள பிரபல பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றில் வங்கியில் வைப்புச் செய்வதற்காக தயார் செய்து வைக்கப்பட்டிருந்த 12 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பணம் திருடப்பட்டுள்ளதாக விற்பனை நிலைய உரிமையாளரால் கடந்த புதன்கிழமை வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

விசாரணைகளின் அடிப்படையில் குறித்த வர்த்தக நிலையத்தில் கடமையாற்றி கொழும்பு சென்றிருந்த இளைஞர் ஒருவரை பொலிஸார் சூட்சுமமான முறையில் வவுனியாவிற்கு வரவழைத்து வவுனியா பஸ் நிலையத்தில் வைத்து கைதுசெய்தனர்.

அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது குறித்த பணத்தில் 9 இலட்ச ரூபா இளைஞனின் வங்கியில் உள்ளதாகவும், மிகுதி 3 இலட்சத்து 10 ஆயிரம் ரூபா செலவு செய்துவிட்டதாகவும் தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா, நீலியாமோட்டைப் பகுதியைச் சேர்ந்த 20 வயது இளைஞரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மேலதிக விசாரணைகளின் பின் குறித்த இளைஞரை வவுனியா நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# கதிர்காமம் - பழைய ஏழுமலை வீதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயம்



கதிர்காமம் - பழைய ஏழுமலை வீதியில் நேற்று (02) பிற்பகல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் காயமடைந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு, தப்பிச்சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதேபகுதியைச் சேர்ந்த 46 வயதுடைய பிரதீப் லக்மால் என்ற 'உடவத்தே மஞ்சு' என்பவரே இவ்வாறு துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காயமடைந்தவர் ஒரு கராத்தே ஆசிரியர் என்றும், சந்தேகநபர்கள் அவரை துரத்திச் சென்று துப்பாக்கிச் சூடு நடத்தியதாகவும் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த துப்பாக்கிச் சூட்டில் அவரது கால்கள் காயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.



# செலான் வங்கி பீ.எல்.சி.

(2007 - 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் குறிப்பு P.Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்டது)

1990ஆம் ஆண்டு 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 04ஆம் பிரிவின்கீழ் செலான் வங்கி பீ.எல்.சீ.இன் பணிப்பாளர் சபையினால் எடுக்கப்பட்ட தீர்மானம்.

இத்தால் அறியத்தரப்படுவதாவது 1990ஆம் ஆண்டு 04ஆம். இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்) 08ஆம் பிரிவின் கீழ் 2023/01/24ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் செலான் வங்கி . பீ.எல்.சீ. பணிப்பாளர் சபையினரால்,விசேடமாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டுள்ளதாவது:

**கிளை : தெஹிவளை**

**கணக்கு இலக்கம் : 0140-00164516-108**

(2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரகாரம் கம்பனி பதிவு இலக்கம் P.Q.9இன் கீழ் பதிவு செய்யப்பட்ட) செலான் வங்கி பி.எல்.சீஇன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ரீ.ஏ.என்.என்.தென்னகோன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018 செப்டெம்பர் 04ஆம் திகதியிடப்பட்ட 1095ஆம் இலக்க பிணைமுறியின் கீழ் செலுத்தப்படாமல் நிலுவையாக நிற்கும் தொகையை "கடன் பெற்றவரான/அடகு வைத்தவரான" தெஹிவளையைச் சேர்ந்த **ஆடம்பரகே சமிந்த உபேக்ஷ டி அல்விஸ்** என்பவரால் செலுத்தத் தவறியுள்ளமையால் குறித்த பிணைமுறியின் மீது பெறப்பட்ட தவணைக் கடன் வசதிக்காக 2022 மே 31ஆம் திகதிவரை அசல் மற்றும் வட்டித் தொகையாக பதினெட்டு மில்லியன் எண்ணூற்று இருபத்தொன்பதாயிரத்து இருநூற்றுப்பதினொரு ரூபா ஒன்பது சதத் (ரூ.18,829,211,09) தொகையை மற்றும் 2022 ஜூன் 01ஆம் திகதி தொடக்கம் (கடன் சலுகைக் கால.வசதியைத் தவிர்த்து) பதினாறு மில்லியன் நூற்றுஐம்பத்திரெண்டாயிரத்து நூற்றுப்பதினைந்து ரூபா பதினான்கு சதத் (ரூ.16,152,115.14) தொகை மீது பதினைந்து புள்ளி இரண்டு ஐந்து வீத (15.25%) வருடாந்த வட்டியுடன் சேர்த்து செலான் வங்கி பீ.எல்.சீக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத் தொகையாக நிற்பதன் காரணமாக மேற்படிதொகையான பதினெட்டு மில்லியன் எண்ணூற்று இருபத்தொன்பதாயிரத்து இருநூற்றுப் பதினொரு ரூபா ஒன்பது சதத் (ரூ.18,829,211.09) தொகையை முற்றாக அறவிடும் வரை அத்தொகை மீது 2022 ஜூன் 01ஆம் திகதி தொடக்கம் முழுமையாக அறவிடும் காலப்பகுதி வரை மேல்குறிப்பிடப்பட்ட வட்டி வீதத்தில் வட்டித் தொகையையும், விளம்பர செலவுகளையும் மற்றும் மேற்படி சட்டத்தின் 13ஆம் பிரிவின் கீழ்: குறிப்பிடப்படும் ஏனைய கட்டணங்களையும் சேர்த்து அறவிடுவதற்காகவும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் (எவையும்) பெறப்பட்டிருப்பின் அவற்றை கழித்து அறவிடுவதற்காக செலான் வங்கி பீ.எல்.சீயிடம் மேற்படி 1095ஆம் இலக்க அடகு முறியின்கீழ் அடகு வைக்கப்பட்டதும் இதன் கீழ் அட்டவணையில் விவரிக்கப்பட்ட ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித் கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவேண்டுமென செலான் வங்கி பீ.எல்.சீஇன் பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் சட்டத்தின் (விசேட ஏற்பாடுகள்)கீழ் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானித்திருக்கின்றது.

மேற்குறிப்பிடப்பட்ட ஆதன அட்டவணை:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம் சல்பிட்டி கோறளையின் பல்லே பத்துவில் தெஹிவளை-கல்கிசை மாநகர சபை எல்லையின் 14ஆவது பிரிவில் தெஹிவளை பிரதேச செயலாளர் பிரிவினுள் கரகம்பிட்டிய கிராம சேவகர் பிரிவிற்குள், தெஹிவளை. கரகம்பிட்டியவில் அமைந்துள்ள "மாதன்கஹவத்த" என அழைக்கப்படும் காணியானது உத்தரவு பெற்ற நில அளவையாளரான எஸ்.டி.எதிரிவிக்ரம என்பவரால் 2018 ஜூலை 11ஆம் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 4788ஆம் இலக்க நிலவரைபடத்தில் லொட் 1 என பிரித்தொதுக்கப்பட்ட காணித் துண்டு மற்றும் அதிலுள்ள கட்டடங்கள் உட்பட அதில் அமைந்துள்ள யாவும் ஆகும். அதன் எல்லைகளாவன: வடக்கு: யூனியன் குறுக்கு வீதி கிழக்கு: தம்மலங்கார மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70/7 இன் வளாகம் தெற்கு: 3.0 மீ. அகலமான வீதி (996ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 2) மற்றும் தம்மலங்கார மாவத்தை, வரிமதிப்பீட்டு இலக்கம் 70/6 இன் வளாகம் (996ஆம் இலக்க நிலவரைபடத்தின் லொட் 4) மேற்கு: தம்மலங்கார மாவத்தை ஆகிய எல்லைகளைக்கொண்ட குறித்த 4788ஆம் இலக்க. நிலவரைபடத்தின் பிரகாரம் லொட் 1 என காட்டப்படும் காணியின் பரப்பளவானது. எட்டு புள்ளி இரண்டு ஐந்து பேர்ச் (ஏ.0-றூ.0-பே,8.25) ஆகும்.

**பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி**
**(திருமதி) வீ.ஏ.பரணகம**
**சட்டத்தரணி,**
**உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.**





ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

வெள்ளிக்கிழமை 2023.03.31

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 5076 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 28,770,923.00
ஆங்கில எழுத்து: S — வெற்றி இலக்கங்கள்: 9 3 8 8 9 0

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம்: 3318 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 92,390,639.84
ஆங்கில எழுத்து: G — வெற்றி இலக்கங்கள்: 03 14 31 68

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 1531 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 11,550,092.80
வெற்றி இலக்கினம்: ரிஷபம் — வெற்றி இலக்கங்கள்: 2 4 9 4 8 3

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 1106 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 83,983,185.20
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 11 40 41 79

**ராசி சுப பலன் / Handahana** — சீட்டிழுப்பு இலக்கம்: 385 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,720,795.80
வெற்றி இலக்கினம்: கடகம் — வெற்றி இலக்கங்கள்: 18 43 52 54 — விசேட இலக்கினம்: கடகம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம்: 1424 — அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 311,690,850.00
ஆங்கில எழுத்து: Q — சுப்பர் இலக்கம்: 22 — வெற்றி இலக்கங்கள்: 02 10 12 45
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board

சனிக்கிழமை 2023.04.01

உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 5077 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 29,905,310.00
ஆங்கில எழுத்து: C — வெற்றி இலக்கங்கள்: 6 4 9 4 2 1

**கொவிசெத** — சீட்டிழுப்பு இலக்கம்: 3319 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 92,728,609.04
ஆங்கில எழுத்து: H — வெற்றி இலக்கங்கள்: 48 54 69 74

**ஜாதிக சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம்: 1532 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 11,623,731.20
வெற்றி இலக்கினம்: சிம்மம் — வெற்றி இலக்கங்கள்: 3 5 3 8 5 3

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம்: 1107 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 84,199,518.00
ஆங்கில எழுத்து: G — வெற்றி இலக்கங்கள்: 19 65 72 82

**ராசி சுப பலன் / Handahana** — சீட்டிழுப்பு இலக்கம்: 386 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு: ரூ. 2,751,030.80
வெற்றி இலக்கினம்: விருச்சிகம் — வெற்றி இலக்கங்கள்: 16 23 42 47 — விசேட இலக்கினம்: விருச்சிகம்

**மெகா பவர்** — சீட்டிழுப்பு இலக்கம்: 1425 — அடுத்த மெகா சுப்பர் பரிசு: ரூ. 312,012,910.00
ஆங்கில எழுத்து: K — சுப்பர் இலக்கம்: 16 — வெற்றி இலக்கங்கள்: 01 50 62 70
அடுத்த பவர் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு: ரூ. 10,000,000.00

# தமிழர்களின் இருப்பை அழிக்கும் செயற்பாட்டை தடுத்துநிறுத்தக் கோரி சங்கானையில் போராட்டம்






(யாழ். நிருபர்)

வடக்கு, கிழக்கில் தமிழர்களின் இருப்பை அழிக்கும் திட்டமிட்ட செயற்பாடுகளைக் கண்டித்தும் அதைத் தடுத்துநிறுத்த வலியுறுத்தியும் மாபெரும் கண்டனப் போராட்டமொன்று நேற்று முன்தினம் (01) சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் தலைமையில் யாழ்ப்பாணம் சங்கானைச் சந்தியில் இப் போராட்டம் நடைபெற்றது.

இதன்போது வெடுக்குநாறி மலை எங்கள் சொத்து, கிண்ணியா எங்கள் சொத்து, நெடுந்தீவு எங்கள் சொத்து, கச்சதீவு எங்கள் சொத்து, அழிக்காதே அழிக்காதே தமிழினத்தை அழிக்காதே, தொல்லியல் திணைக்களமே வெளியேறு, வெளியேறு வெளியேறு படைகளே வெளியேறு, எங்கே எங்கே உறவுகள் எங்கே, தமிழர்களின் தீர்வு சுயாட்சியே, எடுப்பது பிச்சை அறுப்பது எங்களின் கழுத்தையா உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ல் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

# சாவகச்சேரியில் ஐந்தரை லீற்றர் கசிப்பு மீட்பு

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப் படையில் நேற்று முன்தினம் (01) சனிக்கிழமை பிற்பகல் வரணி பகுதியில் வைத்து 5500 மில்லி லீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சியாக நபரொருவர் முல்லைத்தீவு--பருத்தித்துறை பஸ்ஸில் கசிப்புடன் பயணித்து அதனை வரணி பகுதியில் வைத்து வியாபாரம் செய்வதாக கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த கசிப்பு மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி சந்தேக நபர் வரணி பகுதியில் பஸ்ஸால் இறங்கி நடத்து சென்றபோது கசிப்பு மீட்கப்பட்டுள்ளபோதிலும் சந்தேக நபர் தப்பித்துள்ளார்.

இதன்போது முதுகுப் பை ஒன்றினுள் உடை களால் மூடப்பட்டு மறைத்து கொண்டுவரப் பட்ட 4 கசிப்புப் போத்தல்கள் மதுவரித் திணைக்களத்தினரால் மீட்கப்பட்டுள்ளன.



மதுவரி அத்தியட்சகர் பெரேரா மற்றும் உதவி மதுவரி ஆணையாளர் சுனில்சாந்த ஆகியோரின் வழிநடத்தலின் கீழ் சாவகச்சேரி மதுவரித் திணைக்கள சார்ஜன் மேஜர் வி.மகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் மேற்படி மீட்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர்.

# குருதிச்சோகையை நிவர்த்திசெய்தல் எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு அச்சுவேலியில்







(யாழ். நிருபர்)

குருதிச்சோகையை நிவர்த்திசெய்தல் எனும் தொனிப்பொருளிலான நிகழ்வு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் நேற்று முன்தினம் (01) சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

குறைந்த செலவில் எமது பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய இலை வகை மற்றும் காய்கறிகளுடன் போசாக்கை அதிகரிப்பது தொடர்பான நிகழ்வை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மற்றும் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலை ஆகியன இணைந்து நடத்தின.

இப்போசாக்கு நிகழ்வானது அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையை அண்டிய பிரதேசத்தில் வசிக்கும் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு போசாக்கை மேம்படுத்துவதற்காக முன்னெடுக்கப்பட்டது.

இந்நிகழ்வில் இலகுவாக - இயற்கையாக கிடைக்கக்கூடிய இலை வகை மற்றும் காய்கறி வகை கொண்டு பாரம்பரியமான உணவுமுறை தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டது. அத்துடன், வீடுகளில் இவ்வாறு போசாக்கை மேம்படுத்துவதற்கு உணவை தயாரிப்பது தொடர்பிலும் விளக்கமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி, உடுவில் சுகாதாரப் பணிமனை அதிகாரி, நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி, அச்சுவேலி வைத்திய அதிகாரி, வைத்தியர்கள், தாதிய உத்தியோகத்தர்கள், குடும்ப நல உத்தியோகத்தர்கள், சுகாதாரப் பரிசோதகர்கள் மற்றும் கர்ப்பிணித் தாய்மார்கள் என பலரும் கலந்துகொண்டனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மணல் ஏற்றிச்சென்ற 05 ரிப்பர் வாகனங்கள் கைப்பற்றல்

(சாவகச்சேரி நிருபர்)

சாவகச்சேரி பொலிஸாரால் நேற்று (02) ஞாயிற்றுக்கிழமை காலை உரிய அனுமதிப்பத்திரம் இன்றி மற்றும் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றிச்சென்ற 05 ரிப்பர் வாகனங்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கைதடி-கோப்பாய் வீதி ஊடாக கடற்கரை மணலை ஏற்றிச்சென்ற ரிப்பர் வாகனங்களே சாவகச்சேரி பொலிஸாரின் சோதனையின்போது கைப்பற்றப்பட்டுள்ளன. இதன்போது ரிப்பர் வாகனங்களை பொலிஸார் கைப்பற்றியதுடன், அதன் சாரதிகளையும் கைதுசெய்துள்ளனர்.

கைதானவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்து வதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன தலைமையிலான பொலிஸ் குழுவினரே குறித்த கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

# யாழில் இடம்பெற்ற சனி மாற்றத்திற்கான மஹாயாக உற்சவம்









(யாழ். நிருபர்)

பிறக்கவிருக்கும் தமிழ் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு சனி மாற்றத்திற்காக சனிபகவானுக்காக மஹாயாக உற்சவம் நேற்று முன்தினம் (01) வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ் உடுவில் மருதனார்மட சுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தில் பக்திபூர்வமாக நடைபெற்றது.

சனி மாற்றபெயர்ச்சிக்கான விசேட, யாக, ஹோமம் வளர்க்கப்பட்டு அபிஷேக, ஆராதனைகள் இடம்பெற்றன. இந்த உற்சவக் கிரியைகளை ஆலய பிரதமகுரு ஸ்ரீ.செ.சுந்தரரேஷக்குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் நடத்தினர்.

இதில் பல பாகங்களிலிருந்தும் வருகைதந்த பக்தர்கள் கலந்துகொண்டு இஷ்டசித்திகளை பெற்றுச்சென்றனர்.

## விபத்தில் மாணவர்கள் உயிரிழந்த சம்பவம்

# விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவிப்பு



பதுளையில் பாடசாலை கிரிக்கெட் போட்டிக்காக இடம்பெற்ற வாகனப் பேரணியின்போது ஜீப் ஒன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில் பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்த விபத்தில் மேலும் 08 பேர் காயமடைந்து பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளதாகவும் அவர்களில் இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளர் தெரிவித்தார்.

பதுளையில் இரண்டு பிரபல பாடசாலைகளுக் கிடையிலான பாடசாலை கிரிக்கெட் சுற்றுப் போட்டி நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

இந்தப் போட்டியுடன் இணைந்து நடத்தப்பட்ட வாகனப் பேரணியில் பயணித்த ஜீப் ஒன்று கவிழ்ந்ததில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளது.

பதுளை புதிய விளையாட்டு மைதா னத்திற்கு அருகில் இடம்பெற்ற இந்த விபத்தில் காயமடைந்தவர்கள் பதுளை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பதுளை தர்மதுத கல்லூரியில் 13ஆம் தரத்தில் கல்வி கற்கும் இரண்டு மாணவர்களே விபத்தில் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

இந்த துரதிர்ஷ்டவசமான விபத்தில் ரவிது துலக்ஷன ஜயதிலக்க மற்றும் ஹரீந்திர ருக்மால் ஆகிய இரு மாணவர்களே உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com



பசறை கல்வி வலயத்திற்குட்பட்ட கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையின் அதிபராக திருமதி எஸ்.எஸ்.மனோகரன் கடமையை பொறுப்பேற்ற பின்னர் பாடசாலை ஆசிரியர்கள் - பாடசாலை அபிவிருத்தி சங்க நிர்வாக குழுவினர் இடையிலான விசேட கலந்துரையாடல் நேற்று முன்தினம் (01) நடைபெற்றது. இதன்போது பசறை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஸரீனா பேகம், உதவிக் கல்விப் பணிப்பாளர்களான திருமதி கவிதாஞ்சலி, திருமதி அனோமா பிரியதர்ஷினி, கோட்டக்கல்விப் பணிப்பாளர் ஜெயதிஸ்ஸ மற்றும் முன்னாள் ஊவா மாகாணக் கல்வி அமைச்சின் தமிழ்ப் பிரிவு உதவிப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.எஸ் மனோகரன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலோசனை வழிகாட்டல்களை வழங்கினர். (படம்:- நடராஜா மலர்வேந்தன)

## மவுசாகலை நீர்த்தேக்கத்திலுள்ள

# புத்தர் சிலைக்கு மக்கள் வழிபாடு



(மஸ்கெலியா செய்தியாளர்)

மஸ்கெலியா மவுசாகலை நீர்த்தேக்கத்திலுள்ள புத்தர் சிலைக்கு பொதுமக்கள் நேற்று (02) வழிபாடு செய்தனர். மத்திய மலைநாட்டில் கடும் வெப்பம் நிலவி வருவதால் நீரேந்துப் பகுதிகளில் நீர் வற்றியுள்ளது.

இந்நிலையில் மவுசாகலை நீர்த் தேக்கத்திலும் நீர் வற்றியுள்ளதால் நீரில் மூழ்கியிருந்த சிலைகள் வெளியில் தென்படுகின்றன. இதனால் அங்கு சென்ற மக்கள் வழிபாடுகளில் ஈடுபட்டனர். ரக்காடு கிராம பௌத்த விகாரையின் தேரர் நடத்திய பூஜையில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# பண்டாரவளையில் ஆன்மீக அருளுரை

(பதுளை செய்தியாளர்)

பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணியர் தேவஸ்தான பரிபாலன சபை ஏற்பாட்டில் ஆன்மீக அருளுரை செயலமர்வு, மேற்படி தேவஸ்தான இந்துக் கலாசார மண்டபத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

தமிழ்நாடு ஈரோடு திருஞானசம்பந்தர் மடத்தைச் சேர்ந்த தவத்திரு சிவாக்கர தேசிக சுவாமிகளினால் 7ஆம் திகதி காலை 8.30 மணிக்கும் மாலை 5.30 மணிக்கும் திருமுறையே சிவநெறியின் கருவூலம், நமச்சிவாயவே தற்கதி தரும் என்ற தொனிப்பொருள்களில் ஆன்மீக அருளுரை செயலமர்வுகள் நடத்தப்படும்.

இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், இந்து சமய ஆர்வலர்கள் ஆகியோர் மேற்படி ஆன்மீக அருளுரை செயலமர்வுகளில் தவறாது கலந்து கொள்ளுமாறு, பண்டாரவளை அருள்மிகு ஸ்ரீ சிவசுப்ரமணியர் தேவஸ்தான பரிபாலன சபையினர் கேட்டுக்கொள்கின்றனர்.

இச்செயலமர்விற்கான அனைத்து ஏற்பாடுகளையும், தேவஸ்தான பரிபாலன சபையினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நாடக நூல் வெளியீட்டு விழா




(யாழ். நிருபர்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நாடகத்துறை விரிவுரையாளர் சந்திரிகா தர்மரட்ணம் எழுதிய 'கூடி வாழ்வோம்' என்ற நாடக நூலின் வெளியீட்டு விழா இன்று (03) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் முன்னாள் அதிபர் வீரகத்தி கருணலிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் கை. திலகநாதனும் கலந்துகொள்வர்.

நிகழ்வில் நூலின் வெளியீட்டுரையை கொழும்புப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.பௌநந்தி வழங்குவார். நூல் நயப்புரையை யாழ். கல்வி வலய நாடகத்துறை ஆசிரிய ஆலோசகர் யோ.யோன்சன் ராஜ்குமார் ஆற்றுவார்.

நூலை கலாசாலை அதிபர் வெளியிட்டு வைக்க, அதன் முதற்பிரதியை ஓய்வுநிலை விரிவுரையாளர் வ.சி.குணசீலன் பெற்றுக்கொள்வார்.














நுவரெலியா, லிந்துலை நாகசேனை ரோயல் கல்லூரியில் ஆசிரியர்கள், மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு அதிபர் எம்.ஜேசுதாசன் தலைமையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. (படப்பிடிப்பு: ஆ.ரமேஸ்)

# விமானப்படை 'ஹெரலி பெரலி' வேலைத்திட்டம் ஜனாதிபதி தலைமையில் அநுராதபுரத்தில் ஆரம்பம்





நாடு முழுவதும் மூன்று மில்லியன் பலா மரக்கன்றுகளை நடும் விமானப்படையின் 'ஹெரலி பெரலி' வேலைத்திட்டத்தின் முதல் கட்டம் அநுராதபுரத்திலுள்ள விமானப்படை முகாமில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நேற்று முன்தினம் (01) ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் உணவுப் பாதுகாப்பு வேலைத்திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படும் பலா சார்ந்த உற்பத்திகளுக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுச் சந்தை வாய்ப்புகளை உருவாக்குவதற்கும் பலா சார்ந்த உணவு உற்பத்திகளை இலங்கை மக்கள் மத்தியில் பிரபல்யபடுத்துவதுமே இதன் நோக்கமாகும்.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் மாத்திரம் 70 ஆயிரம் பலா மரக்கன்றுகளை நடுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. "விமானப்படை ஹெரலி பெரலி" என்ற பெயரில் பலா மரக்கன்றுகள் தொடர்பில் எழுதப்பட்ட நூலின் பிரதியொன்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கப்பட்டது.

"விமானப்படை ஹெரலி பெரலி" என்னும் நூலில் பலா மரக்கன்றுகளின் நடுகை மற்றும் அதனை சார்ந்த உற்பத்திகள் பற்றிய உள்ளீடுகளும் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும்.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் (ஓய்வு) ஜெனரல் கமல் குணரத்ன உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

அநுராதபுரத்திலுள்ள விமானப்படை முகாமில் முப்படையினருக்கான சிறப்புரை ஆற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆர்ப்பாட்டக்காரர்களால் பாராளுமன்றம் கையகப்படுத்தப்படுவதையும், அதனால் ஏற்படவிருந்த வன்முறைகளையும் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தமைக்காகவும் அவர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபைகள் இல்லாவிடில் மாநகர ஆணையாளரும் செயலாளர்களும் மிகக் கவனமாகப் பணியாற்ற வேண்டும்

## வட மாகாண ஆளுநர் சுட்டிக்காட்டு

வடமாகாணத்திலுள்ள 34 உள்ளூராட்சி மன்றங்களின் மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய சபைகளின் ஆட்சிக்காலம் கடந்த மார்ச் 19ஆம் திகதி நிறைவுக்கு வந்தபின்னர் அவற்றை நெறிப்படுத்தும்முகமாக இன்னோரன்ன முயற்சிகளை வடமாகாண ஆளுநர் எடுத்துள்ளாரென ஆளுநர் செயலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக ஊடகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள செய்திக்குறிப்பிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், மாகாண சபையொன்று இல்லாத காலப்பகுதியில் உள்ளூராட்சிக்குப் பொறுப்பான அமைச்சரது நிறைவேற்றுக் கடமைகளையும் ஆற்றிவரும் ஆளுநர், உள்ளூராட்சி மன்றங்கள், சபைகள் இல்லாத காலங்களிலும் இடையறாது பொதுமக்கள் சேவைகளை வழங்கவேண்டுமென அறிவுறுத்தியுள்ளார்.

இதற்காக மாநகர ஆணையாளரும் சகல சபைகளின் செயலாளர்களும் மிகக் கவனமாகப் பணியாற்ற வேண்டும் எனக் கூறியுள்ளார். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்களிடமிருந்து கூடுதலான கண்காணிப்பு நடவடிக்கைகளையும் எதிர்பார்ப்பதாக ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் உடன் அமுலுக்கு வரும்வகையில் பின்வரும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. சபை வருமானங்கள் குறித்து சபை செயலாளர்களுக்கு இலக்குகள் வழங்கப்பட்டு அவர்களது வருடாந்த செயலாற்றுகை மதிப்பிடலில் உள்வாங்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகங்களின் ஆய்வு உத்தியோகத்தர்கள் சபைகளின் செலவினங்கள் தொடர்பான கண்காணிப்புக்காகவும் அறிக்கையிடலுக்காகவும் தொடர்ச்சியான விஜயங்களை மேற்கொள்ளவுள்ளார்கள். அத்துடன், சகல உள்ளூராட்சி மன்றங்களின் தினசரி வருமான செலவீனங்கள் இணையமூலம் கணக்காய்வு செய்யவுள்ளார்கள்.

சபைகளின் காலாந்தரமான வருமான செலவின பகுப்பாய்வுகள் கணினிமயப்படுத்தப்படும். சபைகள் தங்களது மூலதன மற்றும் நானாவித செலவினங்களை ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட பாதீட்டுக்கிணங்க மேற்கொள்வது கண்காணிக்கப்படும்.

வெளிநாட்டு நிதி வழங்கலுடனான செயற்றிட்டங்கள் ஆளுநரின் நெருங்கிய கண்காணிப்புக்கு உட்படுத்தப்படும். சபைகள் தங்களது வருமான மிகைகளிலிருந்து நிதி தேவைப்படும் சபைகளுக்கு இலகு கடன்கள் பெறுவது வசதிப்படுத்தப்படும்.

மாகாண சபைக்குச் சொந்தமான திருத்தம் செய்யவேண்டிய வாகனங்கள் சபைச் செலவினத்தில் திருத்தப்பட முடியுமானால் அச்சபைகள் அவற்றைச் சொந்தமாக்கிக்கொள்ள முடியும். இடையறாததும் விரைவான சேவை வழங்கலுக்காகவுமாக உள்ளூராட்சித் திணைக்களத்துக்குள்ளான ஆளணிப் பரம்பல் சீராக்கப் பொறிமுறையொன்று வகுக்கப்படும்.

எல்லாச் சபைகளுக்கும் மாதத்தில் ஒரு பொதுவான நாள் குறிக்கப்பட்டு அந்நாளில் திறந்த அபிவிருத்திக் கலந்துரையாடலுக்காக பொதுமக்கள் அழைக்கப்படுவார்கள். அதில் வசதிப்படுத்துநர்களாக வட்டார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருப்பார்கள்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சும் மாகாண வருமானத் திணைக்களமும் இணைந்து சபைகளின் வருமானங்களை அதிகரிப்பது தொடர்பில் ஆளுநருக்குப் பிரேரணைகளை முன்வைக்கும்.

மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரும் உள்ளூராட்சி ஆணையாளரும் இரு மாதங்களுக்கு ஒரு தடவை மேற்படி விடயங்களை மீளாய்வுக்கு உட்படுத்துவார்கள் - என்றுள்ளது.







பிரபல பாடலாசிரியரும் இசையமைப்பாளரும் பாடகருமான பேராசிரியர் சனத் நந்தசிறியின் பூதவுடல் நேற்று முன்தினம் (01) இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு எடுத்து வரப்பட்டபோது நிலையத்தின் தலைவர் ஹட்சன் சமரசிங்க பூதவுடலை கையேற்பதையும் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம். (படங்கள் - எம்.நசார்)

# அனைத்து அரச காணிகளும் பகிரப்படும்போது பிரதேச மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும்

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா



பூநகரி - மன்னார் வீதியில் பல்லவன்கட்டு பகுதியில் கடைத் தொகுதிகளுக்கு ஒதுக்கப்பட்ட காணிகளை பகிர்வது உட்பட அனைத்து அரச காணிகளும் பகிரப்படும்போது பிரதேச மக்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படும் - என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

பூநகரி பிரதேச செயலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (31) இடம்பெற்ற கலந்துரையாடலை தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே கடற்றொழில் அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பூநகரி, நாகபடுவான், பல்லவராயன்கட்டு பகுதி மக்களினால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பான கலந்துரையாடல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலில் பிரதேச செயலாளர், துறைசார் அதிகாரிகள் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதுதொடர்பாக தொடர்ந்தும் கருத்து தெரிவித்த கடற்றொழில் அமைச்சர்,

"மக்களால் முன்வைக்கப்பட்ட காணி, குடிநீர், மின்சாரம், விளையாட்டு மைதானப் பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டு பல விடயங்களுக்கு தீர்வுகாணப்பட்டதுடன், சில விடயங்கள் தொடர்பாக கால அவகாசம் கேட்டிருக்கிறேன். அவை விரைவில் செய்து முடிக்கப்படும்" என்று தெரிவித்தார்.

இதன்போது பயங்கரவாதத் தடைச்சட்ட திருத்தம் தொடர்பாக ஊடகவியலாளரொருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, "புதிதாக உருவாக்கப்படுகின்ற பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமானது நாட்டின் பாதுகாப்பை அடிப்படையாகக்கொண்டு, அனைத்து மக்களுக்கும் பொதுவான சட்டமாகவே இருக்கும். இதுதொடர்பான சட்டமூலம் நாடாளுமன்றில் சமர்ப்பித்து வாதப்பிரதிவாதங்களின் பின்னரே சட்டமாக அறிவிக்கப்படும். எனவே, குறித்த பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தொடர்பாக மக்கள் குழப்பமடையத் தேவையில்லை" எனவும் தெரிவித்தார்.

# IMFஇடம் கடன் வாங்கத் தேவையில்லை; சுற்றுலாப் பயணிகளின் வருமானமே போதும்

## இலங்கை தன்னிறைவு அடையுமென்கிறார் ஜேர்மன் சுற்றுலா வர்த்தகர் டொக்டர் டயமட்ர் டோரிங்

(அஷ்ரப் ஏ சமத்)

ஜேர்மன் நாட்டுடன் நீங்கள் நல்ல நட்புறவை வைத்திருந்தால் வருடத்திற்கு 2.3 மில்லியன் சுற்றுலாப் பிரயாணிகள் இலங்கைக்கு வருகை தந்தாலேயே போதும், நீங்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் வாங்கத் தேவையில்லை. உங்கள் நாடு நல்ல தன்னிறைவுடன் இருந்திருக்குமென ஜேர்மன் சுற்றுலா வர்த்தகர் டொக்டர் டயமட்ர் டோரிங் தெரிவித்தார்.

மேற்கண்டவாறு கொழும்பில் சுற்றுலாத்துறை அதிகாரசபைத் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தலைமையில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் பேர்லின் டேபில் டெனிஸ் கழகத்தின் டொக்டர் டயமட்ர் டோரிங் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

ஒரு சுற்றுலாப் பிரயாணி 250 டொலர் செலவழித்து ஓர் அறை எடுத்து 10 நாட்கள் இலங்கையிலுள்ள ஹோட்டலில் தங்கியிருந்தால், 2.3 மில்லியன் சுற்றுலாப் பிரயாணிகளது வருமானம் என்ன? பாரியளவில் அந்நியச் செலாவணி இலங்கைக்கு கிடைத்திருக்கும். இலங்கை சுற்றுலாத்துறைக்கு பெயர் பெற்றதொரு நாடு. இங்கு நல்ல இயற்கை வளங்கள், சிறந்த காலநிலை, மக்களது விருந்தோம்பல், குற்றங்கள் குறைவாக உள்ளதொரு அழகான நாடாகும்.



ஆனால், உங்களது நாடு அண்மையில் ரஷ்யா - உக்ரைன் போர் - ஐ.நா. மனித உரிமைகள் பிரகடனத்திற்கு ஜேர்மன் வாக்களிக்க வேண்டாம் எனச் சொல்லியும் நீங்கள் ரஷ்யாவுக்கு ஆதரவளித்தீர்கள். அதனால் உங்களது நாட்டுக்கு ஜேர்மனியினர் உல்லாசப் பிரயாணிகளைக்கூட அனுப்புவதில்லை. நேரடி விமானத்தினையும் நிறுத்தியுள்ளார்கள். இலங்கை பற்றி ஜேர்மன் அவ்வளவு கரிசனை காட்டவில்லை. ஆனால், சுற்றுலாத்துறையில் வியட்நாமுக்கு 18 மில்லியன் பேர் சென்றுள்ளனர். வியட்நாம் உலகில் முன்னேறியுள்ளது. அவர்கள் சர்வதேச நாணய நிதியத்திடம் கடன் கேட்கவில்லை. அநியாயமாக ஜேர்மனியைப் பகைத்துக்கொண்டீர்கள். இதுதான் உண்மை - என்கின்றார் ஜேர்மன் சுற்றுலாத்துறை வர்த்தகர்.

# தடைசெய்யப்பட்ட விவசாய இரசாயனப் பொருட்களை கொண்டுசென்ற இருவர் கைது

தடைசெய்யப்பட்ட விவசாய இரசாயனப் பொருட்களை லொறியில் ஏற்றிச்சென்ற இருவர் திவுலபிட்டிய நகரில் வைத்து நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளனர். பல்வேறு வகையான விவசாய இரசாயனங்கள் அடங்கிய 1950 பொதிகள் காணப்பட்டதாகவும், அவற்றின் பெறுமதி 16 இலட்சத்து 72 ஆயிரத்து 500 ரூபா எனவும் பொலிஸார் தெரிவித்தனர். 40 மற்றும் 45 வயதுடைய இவர்கள் வெல்லவாய மற்றும் தியத்தலாவ பிரதேசத்தில் வசிப்பவர்கள் என தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# பயிர்ச்சேதங்களுக்காக 2021ஆம் ஆண்டில் விவசாயிகளுக்கு ரூ.657 மில்லியன் நட்டஈடு

2021ஆம் ஆண்டு பெரும்போகத்தில் ஏற்பட்ட பயிர்ச்சேதங்களுக்காக விவசாயிகளுக்கு 657 மில்லியன் ரூபா நட்டஈடாக வழங்கப்பட்டுள்ளதாக விவசாய மற்றும் கமநல காப்புறுதிச் சபை தெரிவித்துள்ளது.

மேலும், 2021ஆம் ஆண்டுக்கான சிறுபோக பருவத்தில் பயிர்ச்சேதத்திற்கான இழப்பீடு வழங்கல் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விவசாய அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

மேலும் 2021 பெரும்போக பருவத்தில் 25 மாவட்டங்களில் 31 ஆயிரத்து 613 விவசாயிகளின் பயிர்கள் சேதமடைந்துள்ளதுடன், 42 ஆயிரத்து 934 ஏக்கர் பயிர்ச்செய்கை நிலம் சேதமடைந்துள்ளதாகவும் உறுதிசெய்யப்பட்டுள்ளது.







உடப்பு முகைதீன் ஜும்மா பள்ளிவாசலில் இப்தார் சிறப்பு நிகழ்வொன்று வெள்ளிக்கிழமை (31) இடம்பெற்றது. இந்நிகழ்விற்கு முஸ்லிம் சகோதரர்களின் அழைப்பை ஏற்று உடப்பு பொலிஸ் பொறுப்பதிகாரி, கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர், இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் இரா.கலைச்செல்வன் இவர்களுடன் இந்து மதம் சார்பாக உடப்பு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தின் குருக்களும் கலந்துகொண்டபோது பிடிக்கப்பட்ட படங்களாகும்.

(உடப்பு செய்தியாளர்)

தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்ட பகுதியில் புதையல் தோண்ட முயற்சி

# இராணுவ முகாம் பொறுப்பதிகாரி மற்றும் தேரர் உட்பட நால்வர் கைது

(வெல்லாவெளி செய்தியாளர்)

மட்டக்களப்பு - கரடியனாறு, மாவடியோடை பகுதியில் நவீன கருவிகளை பயன்படுத்தி புதையல் தோண்ட முயற்சித்த இராணுவ லெப்டினன் கேர்ணல், தேரர் உட்பட நால்வர் விசேட அதிரடிப்படையினரால் வெள்ளிக்கிழமை (31)கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவடியோடை பகுதியில் உள்ள தொல்பொருள் திணைக்களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதியிலேயே இவர்கள் புதையல் தோண்ட முயற்சித்த நிலையில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிக்கந்தையில் உள்ள இராணுவ முகாம் ஒன்றின் பொறுப்பதிகாரி, அவரின்



கீழ் கடமையாற்றும் இரண்டு இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் தேரர் ஒருவர் உட்பட நான்கு பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாண்டியடி விசேட அதிரடிப்படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த குழுவினர் மடக்கிப்பிடிக்கப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய இராணுவத்திற்குரிய வாகனமும் கைப்பற்றப்பட்டுள்ளது. மேலும், புதையல் கண்டறிவதற்காக பயன்படுத்துவதற்கு கொண்டுவந்த நவீன கருவிகளும் மீட்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களும் கைப்பற்றப்பட்ட பொருட்களும் கரடியனாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# குழுக்களுக்கிடையிலான வாள்வெட்டு தாக்குதலில் தாயும் மகளும் காயம்

## தாயின் கையை பொருத்துவதற்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதி

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - கோணேஷபுரி பகுதியில் இரு குழுக்களுக்கிடையே ஏற்பட்ட கைகலப்பில் தாயும் மகளும் வாள்வெட்டுக்கு இலக்கான நிலையில், திருகோணமலை பொது வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் சனிக்கிழமை (01) மாலை இடம்பெற்றுள்ளது. இரு குழுக்களுக்கு இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதில் பெண்ணொருவரின் கைதுண்டிக்கப்பட்ட நிலையில், திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டநிலையில், அவசர சத்திர சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு வாள்வெட்டுக்கு இலக்கான பெண் நிலாவெளி - கோணேஷபுரி எஸ்.எல்.ஆர்.சி. வீட்டுத் திட்டத்தில் வசித்துவருபவராவார். இதேவேளை, தாயை வாளால் வெட்ட முற்பட்டபோது அவரின் மகள் தடுக்க முற்படுகையில் வாள்வெட்டுக்குள்ளான நிலையில் இருவரும் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குறித்த பெண்ணின் துண்டிக்கப்பட்ட கையை பொருத்துவதற்காக அவசர அம்பியூலன்ஸ் வாகனம் மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

அத்துடன், கைகலப்புடன் தொடர்புடைய மற்றுமொரு பெண்ணொருவர் நிலாவெளி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள அதேவேளை, குறித்த வாள்வெட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் தலைமறைவாகியுள்ள நிலையில், தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக நிலாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

# மலசலகூடக் குழியில் விழுந்து இரண்டரை வயது குழந்தை பலி

## நாவற்காடு பிரதேசத்தில் சம்பவம்

(ஆலையடிவேம்பு செய்தியாளர்)

பாதுகாப்பற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூடக் குழியில் இரண்டரை வயது குழந்தை ஒன்று விழுந்து பரிதாபகரமாக உயிரிழந்துள்ள சோகச் சம்பவமொன்று அம்பாறை மாவட்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட அக்கரைப்பற்று நாவற்காடு பிரதேசத்தில் சனிக்கிழமை(01) மாலை இடம்பெற்றுள்ளது.

சசிகுமார் சஸ்வந்த் எனும் இரண்டரை வயது ஆண் குழந்தையே இவ்வாறு பலியாகியுள்ளது.

உயிரிழந்த பிள்ளையின் தந்தை வெளிநாடொன்றில் தொழில் புரிந்துவரும் நிலையில், உயிரிழந்த பிள்ளையும் தாயும் அயலில் உள்ள உறவினர் வீடொன்றுக்கு வழமைபோன்று சென்றுள்ளனர். அங்கு அப்பிள்ளையின் தாயார் உறவினர்களுடன் இணைந்து சிறு வேலை ஒன்றில் ஈடுபட்டிருந்த நிலையில், யாரும் அவதானிக்காத சந்தர்ப்பத்தில் குறித்த குழந்தை வெளியேறியுள்ளது.

வெளியேறிய பிள்ளை அருகில் இருந்த வீடொன்றில் பாதுகாப்பற்ற முறையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மலசலகூடக் குழியில் வீழ்ந்துள்ளது. சில நிமிடங்களில் பிள்ளையினை காணாத தாயும் உறவினர்களும் தேடியபோதும் பிள்ளை கிடைக்கவில்லை. ஆயினும், சந்தேகமடைந்த ஒருவர் அருகிலிருந்த மலசலகூடக் குழியில் இறங்கி தேடியபோது, அக்குழியின் கீழே பிள்ளை கிடப்பதை அறிந்து வெளியே எடுத்து அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தபோதும் பிள்ளை உயிரிழந்துள்ளது.

இச்சம்பவம் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் இதுபோன்ற இன்னுமொரு சம்பவம் கண்ணகிகிராமத்திலும் அண்மையில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

# உணவக ஊழியர்களுக்கான மருத்துவப் பரிசோதனை




(மாளிகைக்காடு செய்தியாளர்)

உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொது மக்களுக்கு உறுதிப்படுத்தல் எனும் நோக்கில் தேசிய ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டுவரும் தேசிய உணவுப் பாதுகாப்பு வாரத்தை முன்னிட்டு காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி சேவை பிரதேசத்தில் உணவு தயாரிக்கும், விற்பனை மற்றும் விநியோகம் செய்யும் நிலைய உரிமையாளர், ஊழியர்களுக்கான மருத்துவ பரிசோதனையும் தொற்றாநோய் பரிசோதனையும் சனிக்கிழமை(01) இடம்பெற்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஐ.எல்.எம்.றிபாஸின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வஸீர் தலைமையில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் இடம்பெற்ற இப்பரிசோதனை நிகழ்வில் காரைதீவு, மாளிகைக்காடு, மாவடிப்பள்ளி, பிரதேச உணவு உற்பத்தி, விற்பனை, விநியோக நிறுவன உரிமையாளர், ஊழியர்கள் கலந்து கொண்டு மருத்துவப் பரிசோதனையும் தொற்றாநோய் பரிசோதனையும் செய்து கொண்டனர்.

இந்நிகழ்வில் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை மேற்பார்வை பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பைசல் முஸ்தபா, பொதுச்சுகாதார பரிசோதகர்களான கலந்தர்ஷா ஜெமீல், எம்.எம். முஹம்மட் சப்னூஸ், சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

## போடியார் புலம்பல்!



**வடக்கு, கிழக்கில பௌத்த மயமாக்கல செய்யிற நோக்கம் தமது அரசாங்கத்துக்கு இல்லையாம் எண்டு வாய்கூசாம பொய்சொல்லுறான் இந்த வெறுவாக்கிலம் கெட்ட பிரதமர் தினேஷ்குணவர்தன எண்ட பொய்யன். அடே மறுகா வெடுக்குநாரி மலயில ஆதிசிவன் ஆலயத்த இடித்து புத்தர் சில வைக்கிறதும், மட்டக்களப்புல மேச்சல்தரய அபகரித்து சிங்களவர குடியேற்றி பன்சல கட்டிறதும், கன்னியா வென்னீர் ஊற்ற மொத்தமா தொல்பொருள் ஆக்கள் எடுத்ததும் எந்த அரசாங்கம்டா? முழுப்பூசணிக்காய சோத்தில புதைக்கத்தானே உன்ன குள்ளநரி பிரதமராக வைச்சிருக்கான் எலுவா?**

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## காட்டுப்பகுதியிலிருந்து ஆணொருவரின் சடலம் மீட்பு

(மீராவோடை செய்தியாளர்)

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குடும்பிமலை காட்டுப் பகுதியிலிருந்து சனிக்கிழமை (01) ஆண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் கிரான் பாடசாலை வீதியைச் சேர்ந்த 69 வயதான பசுபதி ராகவன் என்பவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட நபர் கடந்த 29ஆம் திகதி குடும்பத்தாரிடம் ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் வீட்டை விட்டு வெளியேறிச் சென்றவர் என பொலிஸ் விசாரணைகளின்போது தெரிய வந்துள்ளது.

சடலம் பிரேத பரிசோதனைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பிரேத அறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வாழைச்சேனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



**சம்மாந்துறை, தீகவாபி, காரைதீவு போன்ற பிரதேசங்களில் நாய்கள், பூனைகள் மற்றும் குரங்குகளுக்கான ஏ.ஆர்.வீ. தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (மாளிகைக்காடு செய்தியாளர்)**

# ஒரு கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது

(பொலிவேரியன் செய்தியாளர்)

கல்முனையில் ஒரு கிலோ கஞ்சாவுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கல்முனை விசேட அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலையடுத்து வெள்ளிக்கிழமை (31) மாலை கல்முனை சாஹிராக்கல்லூரி வீதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் தொடர்ச்சியாக கஞ்சா விற்பனையில் ஈடுபட்டு வந்த நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். சந்தேக நபரிடமிருந்து ஒரு கிலோ கஞ்சாவும் மோட்டார் சைக்கிளும் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. 46 வயதுடைய குறித்த சந்தேகநபர், நான்கு பிள்ளைகளின் தந்தையாவார்.

சந்தேக நபர் குறித்த மேலதிக விசாரணைகளை சாய்ந்தமருது பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எஸ்.எம்.சம்சுதீன் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

# பிச்சைக்காரன் வேடமிட்டு துவிச்சக்கரவண்டி திருட்டு

## சந்தேக நபர் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரில் பிச்சைக்காரன் வேடமிட்டு துவிச்சக்கரவண்டியை திருடிச் சென்ற கொழும்பில் பல குற்றங்கள் புரிந்து குற்றவாளி பட்டியலிலுள்ள தெமட்டகொடையைச் சேர்ந்த சந்தேக நபர் ஒருவரை மட்டக்களப்பு பொதுச் சந்தை பகுதியில் வைத்து வெள்ளிக்கிழமை(31) கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மார்ச் 22ஆம் திகதி பாடசாலை மாணவன் ஒருவன் நகர்பகுதி மத்திய வீதியிலுள்ள உணவு கடை ஒன்றின் முன்னால் துவிச்சக்கரவண்டியை நிறுத்திவிட்டு கடைக்குள் சென்று திரும்பியபோது 30 ஆயிரம் ரூபா பெறுமதியான துவிச்சக்கரவண்டி திருட்டுபோயுள்ளது.

இதனையடுத்து, பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து பொலிஸார் அந்தப் பகுதி வீதியிலுள்ள கடைகளில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கெமரா மூலம் சந்தேக நபரை தேடிவந்த நிலையில், பொதுச்சந்தை கட்டிடப் பகுதியில் பிச்சைக்காரன் வேடமிட்டு பிச்சை எடுத்துவந்த தெமட்டகொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதான ஒருவரை கைது செய்தனர்.

சந்தேக நபர் கொழும்பில் 7 குற்றச்சாட்டுகளில் குற்றம் சாட்டப்பட்டு பொலிஸ் குற்றவாளி பட்டியலில் சேர்க்கப்பட்டவர் எனவும் இவரை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றில் சனிக்கிழமை(01) ஆஜர்படுத்தியபோது ஏப்ரல் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

# மருதமுனையில் இலவச அரிசி வழங்கிவைப்பு

(பாண்டிருப்பு செய்தியாளர்)

பெரும் போகத்தில் அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பு அகற்றல் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவச அரிசி வழங்குதல் திட்டத்திற்கமைய மருதமுனை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியினால் அரிசி வழங்கப்பட்டு வருகின்றது.

கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி பணிப்புரைக்கமைய மருதமுனை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் ஏ.எல்.எம்.நஜீப் வழிகாட்டலில் வலய உதவி முகாமையாளர் பி.எம்.இஸ்ஹாக் தலைமையில் மருதமுனை முதலாம் பிரிவில் இலவச அரிசி வழங்கி வைக்கப்பட்டது.

மருதமுனையில் சமுர்த்தி உதவி பெறும் குடும்பங்கள், காத்திருப்பு பட்டியலிலுள்ளவர்கள், விசேட தேவையுடையோர்கள், முதியோர்கள்




ஆகியோருக்கு தொடர்ச்சியாக 20 கிலோ அரிசி விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைய மருதமுனை முதலாம் பிரிவில் 182 குடும்பங்களுக்கு இவ் இலவச அரிசி வழங்கிவைக்கப்பட்டது. இந் நிகழ்வில் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எஸ்.யூ.சபீனா, கிராம சேவை உத்தியோகத்தர் ஏ.ஆர்.காமீலா, சங்கத் தலைவர் எம்.ஏ.சமட் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்திவைத்த மோட்டார்சைக்கிள் திருட்டு: ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு இந்து கல்லூரியில் இடம்பெற்றுவரும் களியாட்ட நிகழ்வுக்கு (காணிவேல்) சென்று வாகனத் தரிப்பிடத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிளை திருடிச்சென்ற செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த 35 வயதுடைய ஒருவரை சனிக்கிழமை (01) கைது செய்துள்ளதாக மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மைதானத்தில் இடம்பெற்றுவரும் காணிவேல் நிகழ்வுக்கு குடும்பசகிதமாக களுவாஞ்சிகுடியில் இருந்து வியாழக்கிழமை (30) இரவு சென்று அந்தப் பகுதியிலுள்ள வாகனம் பாதுகாக்கும் பகுதியில் மோட்டார்சைக்கிளை நிறுத்திவிட்டு அதற்கான 20ரூபா பணத்தை வழங்கிவிட்டு திறப்பை மோட்டார் சைக்கிளிலே மறந்து விட்டு காணிவேலுக்கு சென்று பின்னர் திரும்பிவந்து பார்த்தபோது 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான மோட்டார்சைக்கிள் திருட்டுப் போயுள்ளது.

இதனையடுத்து, பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டையடுத்து அந்தப் பகுதியில் உள்ள வீதி சுற்றுவட்டத்தில் அமைந்துள்ள சிசிரிவி கெமராவின் உதவியுடன் விசாரணைகளை மேற்கொண்டுவந்த பொலிஸார் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை விற்பதற்காக கொண்டுவந்த நிலையில், சந்தேக நபரை கைது செய்ததுடன் மோட்டார் சைக்கிளையும் மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவர் செட்டிப்பாளையத்தைச் சேர்ந்த 35 வயதுடையவர் எனவும் இவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# மாணவன் தூக்கிட்டு தற்கொலை பாலமீன்மடு பிரதேசத்தில் சோகம்

(மண்டூர் செய்தியாளர்)

கொக்குவில் பொலிஸ்பிரிவிற்குட்பட்ட பாலமீன்மடு பிரதேசத்தில் மாணவன் ஒருவர் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்ட சம்பவம் வெள்ளிக்கிழமை (31) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மட்டக்களப்பு வெளிச்சவீட்டு வீதி பாலமீன்மடு பிரதேசத்தைச் சேர்ந்த 16 வயதுடைய குரேஸ்குமார் ஹரிஸ்ராஜ் என்பவரே இவ்வாறு தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டவராவார்.

குறித்த மாணவன் க.பொ.த. சாதாரணதர வகுப்பில் கல்வி கற்று வந்த நிலையில் கடந்த வியாழக்கிழமை (30) வீட்டில் யாரும் இல்லாத நிலையில், தனிமையில் இருந்து தனது கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டுக்கொண்டிருந்ததாகவும் பின்னர் அன்றைய தினத்தன்று அவரின் சகோதரன் வீட்டுக்கு வந்து மாணவனை அழைத்த போது எவ்வித சத்தமும் இன்றி இருந்த நிலையில், வீட்டின் அறையினுள் உட்சென்று பார்த்தபோது தனக்குத்தானே தூக்கிட்ட நிலையில் காணப்பட்டதாகவும் பின்னர் அயலவர்களின் உதவியுடன் தூக்கில் இருந்து மீட்டெடுத்து வைத்தியசாலையில் அனுமதித்தபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்ததாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் பீற்றர்போலின் உத்தரவிற்கமைவாக சம்பவ இடத்திற்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரணவிசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும்படி பொலிஸாருக்கு உத்தரவிட்டார். மேலதிக விசாரணைகளை கொக்குவில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



**பாடசாலை மாணவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தால் வழங்கப்படும் இலவச பாடநூல்கள் விநியோகிக்கப்பட்டு வருகிறது. அந்தவகையில், கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கு சனிக்கிழமை (01) பாடநூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. கோட்டக் கல்விப் பணிப்பாளர் வீ.ரீ.அஜ்மீர் வழிகாட்டலில் முதல் கட்டமாக தியாவட்டவான் அறபா வித்தியாலயத்தில் வைத்து பாடசாலைகளுக்கு இலவச பாடநூல்கள் வழங்கி வைக்கப்பட்டன. (மீராவோடை செய்தியாளர்)**

# ரொட்டவெவ அல் - மத்ரஷதுல் ஹுதா ஹிப்ளுல் குர்ஆன் மத்ரசாவின் தலைப்பாகை சூட்டும் நிகழ்வு










-அப்துல்சலாம் யாசீம்-

திருகோணமலை - ரொட்டவெவ அல் - மத்ரஷதுல் ஹுதா ஹிப்ளுல் குர்ஆன் மத்ரசாவின் முதலாவது தலைப்பாகை சூட்டும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (31) மஸ்ஜிதுல் ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசலில் ஜும்ஆ தொழுகையின் பின்னர் இடம்பெற்றது.

திருகோணமலை மாவட்டம் அநுராதபுரம் எல்லை கிராமமான இக்கிராமத்தில் 480 குடும்பங்கள் வாழ்ந்து வருகின்ற நிலையில், ஹிப்ழ் மத்ரசா இல்லாத குறை பாரிய குறையாக காணப்பட்டது. இதனையடுத்து தற்போதைய பணிப்பாளர் அல்-ஹாபீழ் ஜனுதீன் (மனாரி) மற்றும் அல்-ஹாபீழ் ஆர்.எம்.சமீர் (சாலிஹாத்) ஆகியோரினால் நடத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஹிப்லுல் மத்ரசா 2018ஆம் ஆண்டு மார்ச் மாதம் 4ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. 25 மாணவர்கள் பாடசாலை கல்வியுடன் பகுதி நேரமாக அல்குர்ஆனை மனனம் செய்து வந்தனர். இந்நிலையில், அல்குர்ஆனை முதலாவது மனனம் செய்த மாணவனாக முகம்மத் அதீப் விளங்குகிறார்.

இவர் எச்.யசீர் - ஏ.ஆர்.றினோஷா தம்பதிகளின் புதல்வராவார். ரொட்டவெவ மஸ்ஜிதுல் ஹுதா ஜும்ஆப் பள்ளிவாசல் தலைவர் ஜனாப் இப்னுஸால், முகம்மத் அதீப் தலைப்பாகை சூட்டி கௌரவிக்கப்பட்டார்.

இதன்போது பள்ளி பேஷ் இமாம் எம்.நஸார்தீன் மௌலவி, சாலிஹ் மௌலவி, அப்துல் சத்தார் மௌலவி, சமுர்த்தி உத்தியோகத்தர் எம்.அமான் மற்றும் மத்ரசாவின் செயலாளர் ஜனாப் ஹபீப் முகம்மது, பள்ளிவாசல் நிர்வாக சபையினர், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# சிறு வியாபார நிலையத்தில் தீ



(எஸ்.அஷ்ரப்கான், நாவிதன்வெளி செய்தியாளர், பாறுக் ஷிஹான்)

கல்முனை மாநகர சபைக்குட்பட்ட கடற்கரைப் பள்ளி வீதி, ஆட்டோ பஸார் சந்தியில் வாழைப்பழம் மற்றும் இடியப்பம் விற்கும் சிறு கடை ஒன்று ஞாயிற்றுக்கிழமை(02) பகல் 2 மணியளவில் திடீரென தீப்பற்றி எரிந்தது.

வாழைப்பழத்திற்கு புகை வைக்கும்போது ஏற்பட்ட தீக்கசிவு காரணமாக மேற்படி சம்பவம் இடம்பெற்றிருக்கலாமென சந்தேகிக்கப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தீப்பரவல் காரணமாக, கடையினுள் இருந்த வாழைப்பழம் மற்றும் ஏனைய பொருட்கள் முற்றாக சேதமடைந்துள்ளதுடன் கல்முனை மாநகர சபையின் தீயணைப்புப் படையினர் ஸ்தலத்திற்கு விஜயம் செய்து தீயினை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கல்முனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# விவசாயிகளின் பிரச்சினைகள் தடைகளின்றி தீர்க்கப்படும்



**விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர உறுதி**



(அப்துல்சலாம் யாசீம்)

உலக வங்கியின் நிதி உதவியுடன் சியாப் என்றழைக்கப்படும் காலநிலைக்கு சீரமைவான நீர்ப்பாசன விவசாயத் திட்டத்தின் ஊடாக திருகோணமலை மாவட்டத்தில் 29 குளங்கள் புனரமைப்பு செய்யப்பட்டு வருகின்றன. இந்நிலையில், மாவட்ட விவசாயிகளின் பிரச்சினைகளை தடைகளின்றி தீர்த்துவைப்பேன் என விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் (31) இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து மொரவெவ பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாவற்குளம் பகுதிக்கு கள விஜயம் மேற்கொண்டபோது அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் மூலம், விவசாய சங்கத்தின் உதவியுடன் நாவற்குளம் என்ற குளம் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தினை பார்வையிடுவதற்காக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர நேரடியாக விஜயம் செய்து விவசாயிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள எவ்வித தடங்களும் ஏற்படாதவிடத்து அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்த காலத்தின்போது விவசாயம் செய்யப்பட்டு வந்த தமது காணிகளை வன பாதுகாப்புத் திணைக்களத்துக்கு சொந்தமான காணியென கூறி எல்லைக் கற்களை போட்டு வருவதாகவும் இதனால் ரொட்டவெவ-மிரிஸ்வெவ விவசாயிகள் மிகவும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் இதனை தீர்த்து வைக்குமாறும் விவசாய அமைச்சரிடம் விவசாய சங்கத்தினர் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து எதிர்காலத்தில் இவ்விடயம் தொடர்பாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

இக்கள விஜயத்தின் போது திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துக்கோரல, விவசாய பணிப்பாளர் எம்.எஸ்.ஏ.கலீஸ் சியாப், பிரதி திட்டப்பணிப்பாளர் டொக்டர் ஆரியதாஸ, மொரவெவ பிரதேச சபை உறுப்பினர் ஏ.எஸ்.எம்.பைசர் மற்றும் விவசாயத் திணைக்களம், கமநல சேவைகள் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டனர்.





கத்தார் வாழ் கல்முனை ஸாஹிரா தேசிய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்த இப்தார் நிகழ்வும் பொதுக் கூட்டம் மற்றும் புதிய நிர்வாகத்தெரிவும் கத்தார் ஸ்டபார்ட் ஸ்ரீலங்கா பாடசாலையில் வெள்ளிக்கிழமை(31) நடைபெற்றது. கத்தார் நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் மபாஸ் மொஹிதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில், அப்துல்லா ஷபி முகம்மது பாஹிம் கிராத் ஓதி ஆரம்பித்து வைத்தார். கத்தார் கிளையின் செயலாளர் மொஹமட் பாயிஸ் ஆதம்பாவா, தலைவர் பைரூஸ், பொறியியலாளர் நயீமுதீன் ஆகியோர் கலந்துகொண்டதுடன் நோன்பின் முக்கியத்துவம் பற்றியும் உரையாற்றினர். (எம்.என்.எம்.அப்ராஸ்)

# அட்டாளைச்சேனை மக்கள் பணிகளை நிறைவேற்றிக் காட்டிய முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் முனாஸ்

## சமூகத்தின் பல தரப்பினரிடமிருந்தும் பாராட்டு








- கோணாவத்தை செய்தியாளர் -

அட்டாளைச்சேனை பிரதேசத்தில் கடந்த காலங்களில் பல்வேறு மக்கள் நல பணிகளை முன்னின்று செயற்படுத்தி செய்து காட்டியதோடு பல்வேறு சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களையும் நடைமுறைப்படுத்திக் காட்டிய முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் எஸ்.எல்.முனாஸ், இம்முறையும் பிரதேச சபையின் வேட்பாளராக களமிறங்கியிருப்பது மகிழ்ச்சிக்குரியது என பிரதேச வாக்காளர்கள் தெரிவிக்கின்றனர். அட்டாளைச்சேனை பிரதேசத்திலுள்ள பல்வேறு சமூக அமைப்புகள், இளைஞர் கழகங்கள், விளையாட்டுக் கழகங்கள் என்பவற்றோடு இணைந்து சமூக சேவை அடிப்படையில் தமது செயற்பாடுகளை முன்னெடுத்தவராக முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் முனாஸ் கருதப்படுகிறார்.

தனது திட்டங்கள் மூலம் வறிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தவும் ஏழை மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு உதவி புரிந்தும் சாரணியம் மற்றும் தலைமைத்துவ செயலமர்வுகளை நெறிப்படுத்தியும் விளையாட்டுக்கழகங்களுக்கு உபகரணங்களை பெற்றுக்கொடுத்து உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதிலும் அதிக கவனம் செலுத்தியவர். மேலும், மீனவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடி தீர்த்து வைத்தல் என பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி காட்டியவர்.

மழை, வெள்ளப்பெருக்கு காலங்கள் மற்றும் கொரோனா காலங்களில் வறிய மக்களைத் தேடிச்சென்று உதவிகள் புரிந்தவர் என்பதனால் அவருக்கு இம்முறையும் மக்கள் ஆதரவு அமோகமாய் கிடைக்கும் வாய்ப்புகளே அதிகம். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக அட்டாளைச்சேனையில் அறபா வட்டார வேட்பாளராக களமிறங்கியுள்ள இவர், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடைபெறும் பட்சத்தில் மக்கள் ஆதரவுடன் பிரதேச சபை உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டு அக்கட்சி வெற்றிபெறும் பட்சத்தில் சபையின் தவிசாளராக பதவியேற்று தொடர்ந்தும் மக்கள் பணியை முன்னெடுத்துச்செல்வார் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இளம் பராயத்திலிருந்து சமூக சேவையில் ஆர்வம் கொண்டு பல அமைப்புகளுடன் இணைந்து பணியாற்றியமையினாலேயே அவருக்கு இவ்வாறான சமூக அங்கீகாரம் கிடைத்துள்ளது. பிரதேச சபை உறுப்பினராக இருந்த காலத்தில் "முனாஸ் நற்பணிமன்றம்" என்ற அமைப்பை உருவாக்கி அவ்வமைப்பின் ஊடாக பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்து தேவையுள்ள மக்களை இனங் கண்டு அவர்களுடைய தேவைகளை தீர்த்து வைப்பதிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட காலப்பகுதியில் பாதிக்கப்பட்ட மக்களோடு மக்களாக நின்று அவர்களுக்கு உதவுவதிலும் உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதிலும் அக்கறையோடு செயற்பட்டவர்.

அதன் பின்னர், அம்பாறை மாவட்ட பொதுப்பணிகள் அமைப்பை ஸ்தாபித்து சேவைகள் பல செய்தவர். மேலும் பிரதேச சபை உறுப்பினராக நான்கு வருடங்கள் அனுபவத்துடன் கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருக்கு ஊடகச் செயலாளராக மூன்று வருடங்கள் இருந்து மாகாண மட்டத்தில், மக்கள் மத்தியில் நன்மதிப்பைப் பெற்று மக்களுக்கு அதிக உதவிகள் புரிந்ததுடன் சிறந்த நிர்வாக திறமையையும் வளர்த்துக் கொண்டவர் என்பதுடன் விசேடமாக பல மொழிகளிலும் பேசும் திறமை கொண்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழன் வணிக உலகம்

www.thamilan.lk Thamilan Business World thamilanbusiness@gmail.com


# வடக்கு மற்றும் கிழக்கில் 20% சிறு அளவிலான விநியோகஸ்தர் தளங்களை விரிவுபடுத்தும் Hayleys





தேங்காய் தொடர்பான மூலப்பொருட்களுக்கான விநியோகத் தளத்தை விரிவுபடுத்தும் வகையில், இலங்கையின் பெறுமதி கூட்டப்பட்ட தேங்காய் நார்ப் பொருட்களை உற்பத்திசெய்யும் முன்னணி நிறுவனமும், Hayleys குழுமத்தின் துணை நிறுவனவுமான Eco Solutions வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் புதிய செயற்பாடுகளை அமைத்து அதன் விநியோகத் தளத்தை 20%ஆக விரிவுபடுத்தியுள்ளது.

இப்பகுதியில் பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுடன் பணிபுரியும் Eco Solutions பாரம்பரிய தேங்காய் முக்கோணத்திற்கு அப்பால் கிளிநொச்சி, முல்லைத்தீவு, பலாலி, அம்பாறை மற்றும் பொலன்னறுவை வரை தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது. இந்த நடவடிக்கையானது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலுள்ள உலகளாவிய விநியோகச் சங்கிலிகளுடன் முன்னர் தொடர்பில்லாத விவசாயிகளின் வலையமைப்பை உருவாக்குகிறது, அதேநேரத்தில் பல குடும்பங்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்குகிறது.

ஹேலிஸ் குழுமம் 145 ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட தேங்காய்ப் பொருட்களை உற்பத்திசெய்வதில் குறிப்பிடத்தக்க பங்கைக் கொண்டுள்ளது. பாரம்பரிய தென்னை முக்கோணத்தில் சிறு விவசாயிகளுடன் விரிவாகப் பணியாற்றியதால், நாடு முழுவதும் புதிய விவசாயி வலையமைப்புகளை உருவாக்குவதற்கான கருவிகள் மற்றும் அறிவு எங்களிடம் இருப்பதாக நாங்கள் நம்புகிறோம்.

கடந்த சில வருடங்களாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நாம் மேற்கொண்ட நடவடிக்கைகள் இதற்குச் சான்றாகும். இதுவரை, இப்பகுதியிலுள்ள 30இற்கும் மேற்பட்ட விவசாயிகளுடன் நாங்கள் இணைந்து செயற்பட்டு வருகின்றோம், மேலும் இனிவரும் ஆண்டுகளில் இந்த உறவை மேலும் வலுப்படுத்த நாங்கள் எதிர்நோக்குகிறோம் என Eco Solutionsஇன் ரஜீவ் குணதிலக்க தெரிவித்தார்.

உற்பத்தியாளர் தனது ஊழியர்கள் எதிர்கொள்ளும் போக்குவரத்தை மேற்கொள்வதிலுள்ள சவால்களைச் சமாளிக்க அருகிலுள்ள இடங்களில் இருப்பிட வசதிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தனது கால்தடத்தை பலப்படுத்துவதுடன், Eco Solutions தென்னிலங்கையில் புத்தல, மொனராகலை, எம்பிலிபிட்டிய மற்றும் சூரியவெவ போன்ற இடங்களில் அதன் விநியோகத் தளத்தை விஸ்தரிக்கவுள்ளது.

Hayleys Fibre, Hayleys குழுமத்தின் Eco Solutions நிறுவனத்திற்குப் பின்னால் உள்ள முதன்மை நிறுவனமாகும். மதிப்பு கூட்டப்பட்ட தேங்காய் நார்ப் பொருட்களின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் முன்னணியில் உள்ளது. உலகளவில் அதன் புத்தாக்கமான மற்றும் Tailor-made சுற்றுச்சூழலுக்கு ஏற்ற தீர்வுகளுக்காக புகழ் பெற்ற நிறுவனம், 100இற்கும் மேற்பட்ட தயாரிப்புகளை தயாரித்து விநியோகிக்கிறது, உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் புகழ்பெற்ற சில்லறை விற்பனையாளர்கள் மற்றும் DIY விற்பனை நிலையங்கள் உட்பட பல்வேறு வாடிக்கையாளர்களின் தேவைகளுக்கு சேவை செய்கிறது.

# சிவனொளிபாதமலை யாத்திரிகர்களின் வலிகளுக்கு நிவாரணியாக அமைந்த 'IODEX சுவசஹன'






வலி நீக்கும் நிவாரணியான IODEX, மார்ச் 3ஆம் திகதிமுதல் 19ஆம் திகதிவரையான 17 நாட்களுக்கு சிவனொளிபாத ஆலய வளாகத்தில் "IODEX சுவசஹன" எனும் சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தை முன்னெடுத்திருந்தது. இதன்போது, சிவனொளிபாதமலைக்கு விஜயம் செய்திருந்த ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களின் வலிகளுக்கு நிவாரணத்தை வழங்கியிருந்தது.

"வலி உங்களுக்குத் தடையாக அமைந்திட இடமளிக்காதீர்கள்" எனும் தொனிப்பொருளின் கீழ், ஆறு வருடங்களுக்கு முன்னதாக ஆரம்பமாகிய இந்த "IODEX சுவசஹன" எனும் சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டம், அக்காலப்பகுதியினுள் நாட்டின் பல்வேறு சமய, கலாசார நிகழ்வுகளின்போது யாத்திரிகர்களுக்கு நிவாரணத்தை வழங்கும் வகையில் செயலாற்றியிருந்தது. இம்முறை சிவனொளிபாத யாத்திரைக்கு வருகை தந்திருந்த யாத்திரிகர்களின் தலைவலி, கழுத்து வலி, மூட்டு வலி மற்றும் இடுப்பு வலி போன்ற உடல்சார் வலிகளால், யாத்திரையை மேற்கொள்வதில் எழக்கூடிய இடையூறுகளைக் குறைத்து, மலை உச்சிக்கு சென்று, வழிபாட்டைத் தொடரும் வாய்ப்பைப் பெற்றுக்கொடுப்பது "IODEX சுவசஹன" சமூகப் பொறுப்புணர்வு நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாக அமைந்திருந்தது.

அதன்பிரகாரம், களைப்படைந்திருந்த யாத்திரிகர்களுக்கு, ஆலய வளாகத்தில் நிறுவப்பட்டிருந்த IODEX சுவசஹன கூடத்தினுள் இலவசமாக கால்கள் மற்றும் தலை மசாஜ்களை வழங்கியது. மேலும், GSK நிறுவனத்தின் பிரதான வர்த்தக நாமங்களில் ஒன்றான பனடோல், யாத்திரிகர்களின் உடல்வலியைத் தணிப்பதற்கு பனடோல் மாத்திரைகளை இலவசமாக விநியோகித்திருந்தது.

மேலும், "IODEX சுவசஹன", சிவனொளிபாதமலைக்கு பயணிக்கும் யாத்திரிகர்களுக்கு, குறிப்பாக, வயதானவர்கள் எதிர்கொள்ளும் சிரமங்களுக்கு உதவ ஒரு சிறப்புக் குழுவை நியமித்தது. மேலும், இந்த அணியினால் சிவனொளிபாத யாத்திரையின் போது, காயங்களுக்குள்ளாகும் யாத்திரிகர்களுக்கு சிகிச்சைகளை வழங்கும் பணிகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

# The Coconut Tree உணவக வர்த்தக நாமம் இலங்கையில் அறிமுகம்




ஐக்கிய இராச்சியத்தில் வசிக்கும் இலங்கையர்களால் ஆரம்பிக்கப்பட்ட, பல மில்லியன் பவுண்டுகள் மதிப்புள்ள, விருதுகளை வென்ற, இலங்கையை கருப்பொருளாகக்கொண்ட உணவகச் சங்கிலியாக அமைந்துள்ள, The Coconut Tree, 2023 பெப்ரவரி 17ஆம் திகதி இலங்கையில் தனது வர்த்தகநாமத்தை உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தி வைத்துள்ளது. ஐக்கிய இராச்சியத்தில் இலங்கையின் சுவையான மற்றும் வண்ணமயமான சுவையுணவுகளைக் காட்சிப்படுத்தி, பெருவெற்றி கண்டுள்ள The Coconut Tree, தற்போது இலங்கையில் தனது வர்த்தகநாமத்தின் செயல்பாட்டை முன்னெடுக்க அதன் வர்த்தக உரிமையுடன் தயாராக உள்ளது. அதன் உலகளாவிய விஸ்தரிப்பு முயற்சியின் ஒரு பகுதியாக உள்ளூர் உணவு சேவை துறை மற்றும் உள்ளூர் திறமைசாலிகள் மீது மேலும் முதலீடு செய்யவும் உதவுகிறது.

ஸ்தாபகர்களான Mithra Fernando Director/ Co-Founder முக்கிய பிரமுகர்கள் மற்றும் அதிதிகளின் பங்குபற்றுதலுடன் உத்தியோகபூர்வ அறிமுக நிகழ்வு கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்றது. இலங்கையின் உணவு சேவை துறையில் உள்ள பல முதலீட்டாளர்கள் மற்றும் செல்வாக்கு மிக்க இதனுடன் தொடர்புபட்ட தரப்பினரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

The Coconut Treeஇன் பிரதம நிதியியல் அதிகாரியான மித்ரா பெர்னாண்டோ இந்த அறிமுகம் பற்றி கருத்து வெளியிடும்போது, "இலங்கையின் சமையல் சுவைகளை பிரித்தானியாவின் மது விடுதிக் கலாசாரத்துடன் (Pub) ஒன்றிக்கச் செய்வதில் ஒரு பொழுதுபோக்காகவும், பெரும் ஆர்வமாகவும் ஆரம்பித்த ஒரு முயற்சி, இப்போது உலகளாவிய விஸ்தரிப்பைக் காணுகின்ற ஒரு பெரிய வணிகமாக வளர்ச்சி கண்டுள்ளது. தாயகமான இலங்கைக்கு நாம் திரும்புவது ஒரு மாபெரும் நிகழ்வாகும். நாங்கள் கற்றுக்கொண்டதை மீண்டும் இலங்கைக்கு கொண்டுவர விரும்புகிறோம். மேலும், எங்கள் வெற்றியைப் பயன்படுத்தி இங்கு கூடுதல் மதிப்பை உருவாக்க உதவுகிறோம். அதுபோலவே, இலங்கையில் உள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களுடன் நாங்கள் இணைந்து செயல்படுகிறோம். Ma's Kitchen போன்ற வர்த்தகநாமங்கள் முதல் எங்கள் மசாலாப் பொருட்கள் மற்றும் ஏனைய சேர்க்கைப் பொருட்களுக்கான பல்வேறு சிறிய அளவிலான வழங்குனர்கள்வரை நாங்கள் இணைந்து வேலை செய்கிறோம்.

இது ஐக்கிய இராச்சியத்திற்கான நேரடி அணுகலை அவர்களுக்கு வழங்குவதுடன், ஏற்றுமதி வருவாயின் முக்கியமான மார்க்கமாகவும் அமைந்துள்ளது. உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான வாய்ப்புகளை மேலும் விரிவுபடுத்த விரும்புகிறோம். எங்கள் தனித்துவமான The Coconut Tree அனுபவத்தை இங்கே இலங்கைக்குக் கொண்டுவர விரும்புகிறோம். தலைசிறந்த அசல் இலங்கை உணவு, புகழ்மிக்க பிரித்தானிய மது விடுதிப் பழக்கம் மற்றும் இலங்கையை அடிப்படையாகக்கொண்ட பலதரப்பட்ட கொக்டெய்ல் (cocktail) பானங்கள் ஆகியன ஒன்றுக்கொன்று இணைந்து அனுபவத்தைப் பன்மடங்காக்குகின்றன. இலங்கை தேசமும் எம்முடன் இணைந்த வளர உதவ விரும்புகிறோம்" என்று குறிப்பிட்டார்.

# இரட்டை விருது வென்ற Fcode Labs



இலங்கையின் முன்னணி மென்பொருள் மற்றும் டிஜிட்டல் சார்ந்த தீர்வுகளை வழங்கும் நிறுவனமான Fcode Labs தனியார் நிறுவனத்தின் Flingo மற்றும் CarromBot உற்பத்திகளுக்கு, டிஜிட்டல் உற்பத்தித்துறை சார்ந்த வல்லுனர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நோக்கத்துடன் இலங்கை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை நிறுவனத்தினால் நடத்தப்படும் E-ஸ்வாபிமானி விருது விழாவில் இரட்டை விருதுகள் கிடைத்துள்ளன.

E-ஸ்வாபிமானி விருது விழா அண்மையில் கொழும்பில் வெகு விமரிசையாக நடைபெற்றது. தனி ஒருவரால் கேரம் விளையாடக்கூடிய வகையில் செயற்கை அறிவின் அடிப்படையில் அமைந்த ரோபோவான CarromBot டிஜிட்டல் பொழுதுபோக்கு (Digital Entertainment) பிரிவின் வெற்றியாளராக தெரிவுசெய்யப்பட்டு மேற்படி விருதை வென்றுள்ளது. கேரம் காயை பலகைப் பைக்குள் வீழ்த்துவதற்கு தேவையான சக்தி மற்றும் பார்வையை தனியே அடையாளங் காணக்கூடிய ஆற்றல் மேற்படி CarromBotஇற்கு உண்டு.

மேற்படி விருது விழாவில் திறமைச் சான்றிதழ் விருதை வென்ற Flingo மொபைல் செயலி ஊடாக உங்களுக்கு சித்திரம் வரைவதற்கும் நண்பர்களுடன் உரையாடுவதற்குமான வாய்ப்பு கிடைக்கிறது. Flingo மொபைல் செயலியை பயன்படுத்துவோருக்கு ஸ்மார்ட் அனுபவங்களைப் பெறும் வகையில் நவீன தொழில்நுட்பத்தின் துணையுடன் அது தயாரிக்கப்பட்டுள்ளது. Fcode Labs (www.fcodelabs.com) எனப்படுவது டிஜிட்டல் பரிணாம வளர்ச்சி (Digital Transformation), டிஜிட்டல் பொறியியல் உற்பத்தி (Digital Product Engineering), செயற்கை அறிவு (AI) மற்றும் Blockchain சேவைகளை வழங்கும் இலங்கை மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளை தளமாகக்கொண்டதொரு நிறுவனமாகும்.

# 1,800க்கும் மேற்பட்ட தூய்மைப் பணியாளர்களை மேம்படுத்தும் முயற்சியில் இறங்கியுள்ள Coca-Cola அறக்கட்டளை மற்றும் SLRCS





நாட்டிலுள்ள சமூகங்களின் நல்வாழ்வையும் மரியாதையையும் மேம்படுத்துவதற்காக இலங்கையிலுள்ள கழிவு சேகரிப்பவர்கள் செய்யும் அர்ப்பணிப்புகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் இம்முறை உலக மீள்சுழற்சி தினத்தில் தூய்மைப் பணியாளர்களின் உணவுப் பாதுகாப்பின்மைக்கு உடனடித் தீர்வை வழங்க Coca-Cola அறக்கட்டளை (TCCF) மற்றும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் (SLRCS) ஆகியன இணைந்து செயற்பட்டுள்ளன.

இதன்படி, தெரிவுசெய்யப்பட்ட 10 மாவட்டங்களில் கழிவுகளைச் சேகரிப்பதை பிரதான வருமானமாகக்கொண்ட 1,800 குடும்பங்களுக்கு உலர் உணவுகள் மற்றும் மருந்துகளுடன் அத்தியாவசிய உணவுப் பொதியை வழங்குவதற்கு இவ்விரு பிரிவினரும் ஏற்பாடு செய்துள்ளனர்.

2022ஆம் ஆண்டில் இலங்கையில் வறுமை நிலை 25%மாக அதிகரிக்கும் என உலக வங்கி கணித்துள்ளது. இதனால், இந்நாட்டில் பெரும் எண்ணிக்கையிலான குடும்பங்கள் ஒரு நாளைக்கு உட்கொள்ளும் உணவின் அளவைக் குறைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் உணவுப் பொருட்களின் விலை அதிகமாக இருப்பதால், உணவின் ஊட்டச்சத்து தரமும் குறைந்து, வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள குடும்பங்கள் மேலும் அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளன.

அதனால்தான், இந்த இக்கட்டான சூழ்நிலையில், TCCF மற்றும் SLRCS ஆகியவை 10 மாவட்டங்களிலிருந்து அவதானத்திற்குரிய தூய்மைப் பணியாளர்களின் குடும்பங்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்குவதன் மூலம் இதுவரை செயல்படுத்தப்பட்ட 'Say We Care' திட்டத்தை மேலும் விஸ்தரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளன. அந்த மாவட்டங்களிலுள்ள கழிவுகளை சேகரிப்பவர்கள் உட்பட பெரும் எண்ணிக்கையிலான சமூகங்கள் பொருளாதாரச் சூழ்நிலையால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், 4 முதல் 5 உறுப்பினர்களைக்கொண்ட ஒரு குடும்பத்திற்கு சுமார் 2 மாதங்களுக்குத் தேவையான 1,800 உணவுப் பொதிகள் பெண்/ஒற்றைப் பெற்றோர் தலைமைக் குடும்பங்கள், குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்கள் (தினசரி ஊதியம் பெறுவோர்), வீடற்ற குடும்பங்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும், TCCF மற்றும் SLRCS ஆகியவை நிரந்தர நோய்வாய்ப்பட்ட குடும்பங்கள் அல்லது உடல் அல்லது மனநல குறைபாடுகள் உள்ளவர்கள், 5 வயதுக்குட்பட்ட குழந்தைகள் அல்லது ஊட்டச்சத்து குறைபாடு உள்ள கர்ப்பிணி அல்லது பாலூட்டும் தாய்மார்கள், நிலையான வருமானம் இல்லாத முதியோர் குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்க ஏற்பாடு செய்துள்ளன.

சுமார் 45 கிலோ எடையுள்ள இந்த உணவுப் பொதியில் அரிசி, பருப்பு, கோதுமை மாவு, உலர் உணவுகளான நெத்தலி கருவாடு, ரின் மீன்கள், கடலை போன்ற ஊட்டச்சத்து தானியங்கள் மற்றும் சவர்க்காரம், கிருமிநாசினிகள் மற்றும் பற்பசை போன்ற அத்தியாவசிய வீட்டுப்பொருட்களும் இதில் உள்ளடங்குகின்றன.

TCCF, இந்தக் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவதன் மூலமும், முழு உணவுக்கான அவர்களின் பொருளாதாரப் போராட்டத்தை வலுப்படுத்துவதன் மூலமும் அதன் மதிப்பு வலையமைப்பை விரிவுபடுத்த முடியும், மேலும் நாட்டில் கழிவு சேகரிப்பு மற்றும் மீள்சுழற்சி நடவடிக்கைகளையும் மேம்படுத்த முடியும்.

# புதிய சின்னத்துடன் தமது சேவைகளை விரிவுபடுத்தும் அமாமி நிறுவனம்




சுற்றுலா ஹோட்டல்கள் சார்ந்த சேவைகளுக்கான சுத்தப்படுத்தி மற்றும் மணமூட்டி (Amenity Kit) தொகுதிகளை உற்பத்திசெய்து விநியோகிக்கும் பணியை இலங்கையில் முதல் தடவையாக ஆரம்பித்த ரண்யன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் ஸ்தாபகர் ரணில் டீ சில்வா ஆரம்பித்த அமாமி வர்த்தகநாமத்துக்குக்குரிய உற்பத்திகள் புதிய சின்னத்தில் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. ரண்யன் இண்டஸ்ட்ரீஸ் நிறுவனத்தின் புதிய அதிபர் திருமதி அர்சலா டி சில்வாவின் தலைமையில் புதிய வர்த்தக நாமமிடல் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்றுக்குப் பின்னர் மறுமலர்ச்சி கண்டுவரும் சுற்றுலாத்துறையில் தமது உற்பத்திகளை விரிவுபடுத்துவதே அவரின் நோக்கமாகும். 80களில் ஒபரோய் ஹோட்டலுக்கு எயார் பிரெஷ்னர் வாசனைக் கட்டிகளுடன் கூடிய முதலாவது உற்பத்திகளை விற்பனைச் செய்ததன் மூலம் தொடங்கப்பட்ட அமாமி நிறுவனமானது, தற்பொழுது எயார் பிரெஷ்னர், ஷெம்பு, ஷவர் ஜெல், டூத்பேஸ்ட், கிளிசரின் சவர்க்காரக் கட்டிகள், அனைத்து வகை சலவைத் தூள்கள், ஆயுர்வேத மற்றும் இயற்கை மூலிகைச் சார்ந்த உற்பத்திகள் பலவற்றை உற்பத்திசெய்து விநியோகிக்கின்றது.

# ஆண்டின் சிறந்த நுண்நிதி நிறுவன விருது வென்ற Future Life Investments




Future Life Investments நிறுவனத்துக்கு ஆண்டின் சிறந்த நுண்நிதி நிறுவனத்துக்கான விருது நுண்நிதித் துறையில் வளர்ந்துவரும் நிறுவனமான Future Life Investments Ltd. (FLI), நிறுவனம், Business World International Organization ஏற்பாடு செய்த BWIO சர்வதேச விருது வழங்கும் விழாவில் ஆண்டின் சிறந்த நுண்நிதி நிறுவனம் என்ற விருதை வென்றுள்ளது. மேற்படி விருது விழா கொழும்பு தாஜ்சமுத்ரா ஹோட்டலில் வெகு விமரிசையாக நடைபெற்றது. 2016ஆம் ஆண்டில் கம்பஹா பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட Future Life Investments Ltd. நிறுவனம் சுமார் ஆறு ஆண்டுகளுக்குள் நாட்டின் துரிதமாக வளர்ந்துவரும் நுண்நிதி நிறுவனமாக தடம் பதித்துள்ளது.

"எமது நிறுவனம் நாடெங்கிலும் 36 கிளைகளுடன் சகல மாவட்டங்களிலும் செயற்பட்டு வருவதோடு, நுண்நிதி எனும் எண்ணக்கருவின் உண்மையான நோக்கங்களை அடைவதை முக்கியமான பணியாகக் கருதுகின்றோம். எமது வாடிக்கையாளர்கள் அவர்களின் இலக்கை அடைவதை காண்பதே எமது முக்கிய குறிக்கோளாகும்" என்றார் நிறுவனத்தின் தலைமை நிறைவேற்று அதிகாரி தனுஷ்க உடுகம.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilanbusiness@gmail.com

## சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அன்பின் கரங்களை நீட்டுகிறது ஹேமாஸ்





இலங்கையின் தற்போதைய பொருளாதார மற்றும் சமூக நெருக்கடிக்கு முகங்கொடுத்து கடுமையான அழுத்தத்தில் வாழும் சிறுநீரக நோயாளர்களுக்கு உகந்த சுகாதார சேவையை உறுதிசெய்து, இலங்கையில் நோயாளிகளின் பாதுகாப்பிற்காக முழுமையாக அர்ப்பணிக்கப்பட்ட ஹேமாஸ் மருத்துவமனை குழுமம், அண்மையில் தேசிய பணியை ஒரு படி மேலே கொண்டுசெல்கிறது மற்றும் அதன் சமீபத்திய பெருநிறுவன சமூகப் பொறுப்பு வேலைத்திட்டமான 'உபகார' என்ற தேசிய திட்டம் சமீபத்தில் மிகவும் சிறப்பாக ஆரம்பிக்கப்பட்டது. நாட்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட ஆதரவற்ற நோயாளிகளுக்கு புதிய நம்பிக்கையை அளிக்கும் இத்திட்டத்தின் மூலம் அவர்களுக்கு மாதாந்த டயாலிசிஸ் சிகிச்சை இலவசமாக அளிக்கப்படவுள்ளது.

தற்போதைய நிலைமையைக் கருத்திற்கொண்டு, அனைத்து சிறுநீரக நோயாளிகளுக்கும் இலவச சிகிச்சையை அரசாங்க சுகாதாரத் துறையினரால் வழங்க முடியாது, எனவே, ஹேமாஸ் மருத்துவமனை குழுமம், இந்த நிலைமையை நன்கு புரிந்துகொண்டு மருத்துவமனை சேவையாக அதன் தேசிய பொறுப்புகளுடன், இந்த தனித்துவமான ஆதரவு திட்டத்தின் மூலம் ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டம் நாட்பட்ட சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட குறைந்த வருமானம் பெறுபவர்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்குப் பங்களிக்கிறது. மேலும், பொருளாதார ரீதியில் பின்தங்கியுள்ள சிறுநீரக நோயாளிகளின் வாழ்க்கைச் சுமைக்கு ஓரளவு நிவாரணம் அளிக்கும் தேசிய அளவிலான முயற்சியாக இந்தத் திட்டத்தை சுட்டிக்காட்ட முடியும்.

நாட்பட்ட சிறுநீரக நோய் இலங்கையில் மிகவும் பொதுவான தொற்றாத நோய்களில் ஒன்றாகும். புள்ளிவிவரங்களின்படி, நீரிழிவு நோயாளிகள் 20-25% மற்றும் உயர் இரத்த அழுத்தம் உள்ள நோயாளர்கள் 18-20% பேர் CKD நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஒவ்வொரு 10 இலங்கையர்களில் ஒருவர் நீண்டகால சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது, ஆனால், அவர்களில் பெரும்பாலானோர் நீண்டகால சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறியாதது மிகவும் வேதனையான விடயமாகும். இதன் காரணமாக, துரதிர்ஷ்டவசமாக இந்த மக்கள் அனைவரும் நோய் மோசமடைந்த பின்னரே சிகிச்சையைத் தொடங்குகிறார்கள். இதன் காரணமாக, அத்தகைய நோயாளிகளுக்கு வழக்கமான டயாலிசிஸ் சிகிச்சை அல்லது சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை தவிர, வேறு வழியில்லை. இந்த இரண்டு சிகிச்சைகளும் நோயாளிகளையும் அவர்களது குடும்ப உறுப்பினர்களையும் மிகவும் நெருக்கடியான மற்றும் பொருளாதாரச் சிரமங்களுக்கு உள்ளாக்குகின்றன.

இன்றைய பொருளாதாரம் மாறிவரும் சூழலில், நோயாளிகளும் அவர்களது உறவினர்களும் இத்தகைய சிகிச்சைகளை அணுக முடியாத அவலநிலையில் உள்ளனர் - என ஹேமாஸ் மருத்துவமனை குழுமத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் டாக்டர் லக்கிட் பீரிஸ் தெரிவித்தார்.

## சிறந்த கொழுந்து பறிப்பாளர்கள் போட்டியை வெற்றிகரமாக நடத்திய ஹேலிஸ்




இலங்கையில் நிலையான விவசாய வணிகத்துறையில் முன்னணியிலுள்ள ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனம், சிறந்த மற்றும் நிபுணத்துவத்தை அங்கீகரிக்கும் வகையில் இரண்டாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்ட 2023 சிறந்த தேயிலைக் கொழுந்து பறிப்பாளர் தெரிவு போட்டியை வெற்றிகரமாக நடத்தியுள்ளது.

ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனத்தின் ஊழியர் சமூகத்தின் அர்ப்பணிப்பிற்கும் கடின உழைப்பிற்கும் பெறுமதி சேர்க்கும் வகையில் களனிவெலி பெருந்தோட்ட நிறுவனம், தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனம் மற்றும் ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனத்துக்கு சொந்தமான ஹொரண பெருந்தோட்ட நிறுவனம் ஆகிய தோட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கொழுந்து பறிப்பாளர்களுக்கிடையில் இப்போட்டி நடைபெற்றது. கொவிட்-19 தொற்று நோய் ஏற்பட்டதைத் தொடர்ந்து, இரண்டு வருட இடைவெளிக்குப் பின்னர் இந்த ஆண்டு நடைபெற்ற போட்டியானது, ஊழியர்களின் வலுவான வேண்டுகோளைக் கவனத்திற்கொண்டு இந்தப் போட்டி மீண்டும் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தலவாக்கலை பெருந்தோட்ட நிறுவனத்திற்குச் சொந்தமான சமர்செட் தோட்டத்தைச் சேர்ந்த திருமதி ஆர்.சீதையம்மா 2023ஆம் ஆண்டின் சிறந்த தேயிலைக் கொழுந்து பறிப்பாளராக மகுடம் சூட்டப்பட்டார். தலவாக்கலை பெருந்தோட்டக் கம்பனிக்கான தங்க விருதை வென்றதுடன், அவர் 20 நிமிடங்களுக்குள் நம்பமுடியாத 10.42 கிலோ கொழுந்துகளைப் பறித்து 82.6% என்ற அதிகபட்ச மதிப்பெண்ணுடன் தங்க விருதை வென்றார்.

"போட்டியில் வெற்றிபெற்றதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். தேயிலைக் கொழுந்து பறிப்பது குறித்து நல்ல பயிற்சியளித்து இவ்வாறான போட்டியில் பங்குபற்ற வாய்ப்பளித்த எமது கலாநிதி ரொஷான் ராஜதுரை, தோட்ட முகாமையாளர்கள் மற்றும் ஹேலிஸ் நிறுவனம் ஆகியோருக்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும் எனது குடும்பத்தினரும் நண்பர்களும் எனக்கு ஆதரவளித்து என்னை ஊக்கப்படுத்துகிறார்கள் - என போட்டியில் 3,00,000 ரூபா பரிசுத் தொகையைப் பெற்றுக்கொண்ட வேளையில் கருத்து தெரிவிக்கும்போது சீதையம்மா தெரிவித்தார்.

## SLT-MOBITEL இனால் புத்தாக்கமான SLIoT Challenge மற்றும் IESL Robogames போட்டிகள் ஏற்பாடு

புத்தாக்கமான மனநிலையைக் கட்டியெழுப்புவதில் பங்களிப்பு வழங்கும் வகையில், SLT-MOBITELஇன் வலுவூட்டலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'SLIoT Challenge 2022' மற்றும் 'IESL Robogames 2022' ஆகியன அண்மையில் இடம்பெற்றன.




SLIoT Challenge 2022இல் பட்டம் பயிலுனர்கள் பிரிவில் 1ஆம் இடத்தை Metatron, 2ஆம் இடத்தை JuRu மற்றும் 3ஆம் இடத்தை ஆகியன Strydo Labs பெற்றுக்கொண்டன. திறந்த பிரிவில், வெற்றியாளராக Achievers தெரிவாகி யிருந்ததுடன், 2ஆம் இடத்தை UpThrust மற்றும் 3ஆம் இடத்தை Indika ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன.

IESL Robogames 2022 போட்டியின் பாடசாலைகள் பிரிவில் 1ஆம் இடத்தை Ralphy Boy, 2ஆம் இடத்தை Kada Ozaki மற்றும் 3ஆம் இடத்தை Mavericks ஆகியன பெற்றுக் கொண்டதுடன், பட்டம் பயிலுனர்கள் பிரிவில் வெற்றியாளராக Trix, 2ஆம் இடத்தை Botivity மற்றும் 3ஆம் இடத்தை Terminator ஆகிய அணிகள் பெற்றுக்கொண்டன.

## 2022 SLIM தேசிய விற்பனை விருதுகளில் யூனிலீவர் அணிக்கு மாபெரும் வெற்றி



அண்மையில் இடம்பெற்ற SLIM National Sales Awards 2022 (2022 தேசிய விற்பனை விருதுகள்) விழாவில் யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவன ஊழியர்கள் ஆறு பேர், 3 தங்கம், 1 வெள்ளி, 2 வெண்கலம் ஆகிய 6 விருதுகளைப் பெற்றனர்.

இலங்கையில் விற்பனை தொடர்பான இவ்வருடத்தின் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்வாகக் கருதப்படும், இலங்கை சந்தைப்படுத்தல் நிறுவகத்தால் (SLIM) ஏற்பாடு செய்யப்பட்ட தேசிய விற்பனை விருதுகளானவை, தேசிய விற்பனைத் துறையில் உயர் செயல்திறன்கொண்ட நபர்களுக்கு அவர்களின் முயற்சிகள் மற்றும் சாதனைகளுக்காக தேசியமட்ட அங்கீகாரத்தை வழங்கி வெகுமதி அளிக்கிறது.

2022இல் யூனிலீவர் வெற்றியாளர்களின் பட்டியலில், மிக உயர்ந்த மற்றும் சிறந்த செயல்திறனுக்காக அங்கீகரிக்கப்பட்டவர்களில் FMCG நுகர்வோர் பிரிவில் TSL ஹோல்டிங்ஸ் கணக்கு முகாமையாளர் ஹசித்திகா ஹேரத், Territory Manager தங்க விருதை வென்றார்.

Pureit - கணக்கு முகாமையாளர் தரிந்து அகஸ்தி கொக்குஹென்னதி, நீடித்த நுகர்வோர் பொருட்கள் பிரிவில் Territory Manager தங்க விருதை வென்றார். Omni Lead நவீன வர்த்தக முகாமையாளர் லசான் கருணாரத்ன Modern Trade பிரிவில், Territory Manager தங்க விருதைப் பெற்றார். வாடிக்கையாளர் அபிவிருத்தி நிர்வாக உதவி முகாமையாளர் குஷினி ஜயசூரிய — Other Sales Support Staff (உதவி முகாமையாளர்) பிரிவில் வெள்ளி விருதைப் பெற்றார். வாடிக்கையாளர் மேம்பாட்டு பாதுகாப்பு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் செயற்படுத்தும் முகாமையாளர் சரித் ஹபுதந்திரிகே - Other Sales Support Staff (முகாமையாளர்) பிரிவில் வெண்கல விருதை பெற்றுக்கொண்டார். நவீன வர்த்தகம் தொடர்பான கணக்கு முகாமையாளர் ஓஷத வித்யானந்த — நவீன வர்த்தக பிரிவில் Territory Manager வெண்கல விருதை வென்றார்.

யூனிலீவர் ஸ்ரீலங்காவின் வாடிக்கையாளர் அபிவிருத்திப் பணிப்பாளர் பாத்திய தயாரத்ன இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், சவாலான சந்தை நிலைமைகள் நிலவிய வேளையில் விற்பனையை முன்னெடுத்துச் சென்றமை மற்றும் யூனிலீவர் ஸ்ரீலங்கா நிறுவனத்தை உயர் நிலையில் நிலைநிறுத்துவதற்காக செயற்பட்ட ஹசித்திகா, தரிந்து, லசான், குஷினி, சரித், ஓஷத ஆகியோருக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார்.

## பாதுகாப்பை உறுதிசெய்வதற்காக சமூக வழிகாட்டுதல்களின் புதிய தொகுப்பை அறிமுகப்படுத்தும் TikTok

TikTok சமூக வழிகாட்டுதல்களின் புதிய தொகுப்பை வெளியிடுவதன் மூலம் பாதுகாப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. TikTokஇன் சமூக வழிகாட்டுதல்களின் புதிய தொகுப்பு என்பது அனைவருக்கும் பொருந்தும் மற்றும் TikTok இயங்கு தளத்தைப் பயன்படுத்தும் அனைவருக்கும் பொருந்தும் விதிகள் மற்றும் தரங்களை உள்ளடக்கிய ஓர் அறிவிப்பாகும், மேலும் இந்த அறிவிப்பு மூலம் TikTok இன் சமூகக் கொள்கைகளை அறிமுகப்படுத்துகிறது.




TikTok பாவனையாளர்களுக்கு பாதுகாப்பான சூழலைப் பேணுவதற்கு, தங்களை எவ்வாறு நடத்துவது என்பதை பாவனையாளர்கள் நன்கு புரிந்துகொள்ள இந்த சமூக வழிகாட்டுதல்கள் உதவும். இது மனித உரிமைகளைப் பாதுகாப்பதில் TikTokஇன் அர்ப்பணிப்பை நிரூபிக்கிறது மற்றும் சர்வதேச சட்ட கட்டமைப்புகளுடன் ஒத்துப்போகிறது. TikTokஇல் மிகவும் ஈர்க்கக்கூடிய மற்றும் ஆக்கப்பூர்வமான உள்ளடக்கத்தை எவ்வாறு உருவாக்குவது என்பதை இந்தக் கொள்கைகள் வழிகாட்டுகின்றன. TikTok தளத்தில் உங்கள் கண்ணியத்தை சமன் செய்து, கருத்துச் சுதந்திரத்தைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். இன்றுவரை, TikTokஇன் சமூக வழிகாட்டுதல்களைப் பற்றி சமூகத்தைப் புதுப்பிப்பதற்கும் அறிவுறுத்துவதற்கும் Association for Suicide Prevention, Safety Advisory Council உட்பட உலகம் முழுவதும் உள்ள 100க்கும் மேற்பட்ட நிறுவனங்களுடன் TikTok ஆலோசித்துள்ளது.

## யூனியன் அஷ்யூரன்ஸ் - யூனியன் வங்கி பாங்கசூரன்ஸ் டயமன்ட் விருதுகள் வழங்கும் நிகழ்வில் யூனியன் வங்கி அணிக்கு கௌரவிப்பு




யூனியன் அஷ்யூரன்ஸ் - யூனியன் வங்கி பாங்கசூரன்ஸ் டயமன்ட் விருதுகள் 2022 நிகழ்வின்போது யூனியன் வங்கி அணி வெளிப்படுத்தியிருந்த சிறந்த பெறுபேறுகளுக்காக கௌரவிக்கப்பட்டிருந்தது. பாங்கசூரன்ஸ் துறையில் இடம்பெற்ற பெருமைக்குரிய விருதுகள் வழங்கும் நிகழ்வாக இது அமைந்திருந்ததுடன், சிறப்பாக செயலாற்றியிருந்தவர்களை கௌரவிக்கும் வகையில் அமைந்திருந்தது. 2022ஆம் ஆண்டுக்காக தனிநபர் மற்றும் குழுநிலை சிறந்த செயற்பாட்டாளர்களுக்கான பிரதான பிரிவுகளில் பல முக்கிய விருதுகளை யூனியன் வங்கி பெற்றிருந்தது. வருடாந்த புதிய வியாபார கட்டுப்பணங்கள் (ANBP) பிரிவில் உயர்ந்த தனிநபர் சாதனைக்கான The CEO's Lounge விருதை, பொரளை கிளையின் லக்சிகா ஹெதிகல்லே பெற்றுக்கொண்டார்.

வலயப் பிரிவில் டயமன்ட் விருதை, வலயம் 1B இன் தலைமை அதிகாரியான சமிந்த பெர்னான்டோ பெற்றுக்கொண்டார்.

வலயங்கள் 1A, 1B மற்றும் 2 ஆகியன ANBP இல் சிறந்த மூன்று பங்களிப்பாளர்களாக கௌரவிக்கப்பட்டிருந்தன. 2022ஆம் ஆண்டுக்கான வருடாந்த ஷீல்ட் சம்பியன் விருது, சிறப்பாக செயலாற்றியிருந்தமைக்காக பொரளை கிளைக்கு வழங்கப்பட்டிருந்தது. வருடாந்த இலக்குகளை விஞ்சும் வகையில் செயலாற்றியிருந்த சில கிளைகள் மற்றும் ஊழியர் அங்கத்தவர்களுக்கும் இந்த நிகழ்வின்போது கௌரவிப்புகள் வழங்கப்பட்டிருந்தன.

## டுபாய்க்கான விமானங்களை அதிகரித்துள்ள FitsAir




இலங்கையின் முதலாவது தனியாருக்குச் சொந்தமான சர்வதேச விமான சேவையான FitsAir, கொழும்பிலிருந்து துபாய்க்கு செல்லும் நாளாந்த விமானங்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது. குறித்த இரண்டு நகரங்களுக்கும் இடையிலான புதிய தினசரி சேவை 2023 மார்ச் 28 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இரு நாடுகளுக்கும் இடையிலான பயணிகளின் தேவையின் பிரதிபலிப்பாகவும், எதிர்வரும் தமிழ், சிங்கள புத்தாண்டின் போது இத்தேவை அதிகரிக்கும் எனும் எதிர்பார்ப்புடனும், வாரத்திற்கு 4 ஆக உள்ள விமான சேவைகளின் எண்ணிக்கையை நாளாந்த சேவையாக அதிகரிப்பதற்கான முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து டுபாய்க்கு செல்லும் வழியானது, நீண்ட தூரம் பயணிக்கும் விமானங்களுக்கான போக்குவரத்து மையமாக திகழ்வதால் பயணிகளிடையே பிரபலமாக உள்ளது.

Fits Aviation (Pvt) Ltd. நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் Ammar Kassim இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், "கொழும்பிலிருந்து டுபாய்க்கான எமது சேவையின் எண்ணிக்கையை தினசரி சேவையாக அதிகரித்துள்ளமையை அறிவிப்பதில் நாம் பெரும் மகிழ்ச்சியடைகிறோம். ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கான தடையற்ற இணைப்பை வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பை இந்த மேம்படுத்தல் எடுத்துக்காட்டுகிறது" என்றார்.

இப்புதிய தினசரி விமான சேவையின் மூலம், உலகின் மிகவும் பிரபலமான சுற்றுலாத் தலங்களில் ஒன்றான மற்றும் வணிகப் பயணிகளுக்கான மையமாகவும் விளங்கும் டுபாயை பார்வையிடுவதற்கான சிறந்ததொரு வாய்ப்பைப் பெற முடியும். உலகத்தரம் வாய்ந்த பொருட்கள் கொள்வனவு செய்யும் அனுபவம், ஆடம்பரமான தங்குமிடங்கள் மற்றும் சிலிர்ப்பூட்டும் சாகசங்கள் உள்ளிட்ட பல்வேறு கண்கவர் விடயங்களை அனைவருக்கும் வழங்கக்கூடிய இடமாக டுபாய் விளங்குகிறது.

அண்மையில் கொழும்புக்கும் சென்னைக்கும் இடையேயான விமான சேவையை அறிமுகப்படுத்தியதன் மூலம் FitsAir அதன் மற்றுமொரு புதிய நகருக்கான சேவையை இணைத்திருந்தது. 2022 ஒக்டோபரில் விமானப் பயண சேவைகளை நிறுவனம் ஆரம்பித்ததிலிருந்து, அதன் செயற்பாடுகளை விரிவுபடுத்தி வருகிறது. அத்துடன், வாடிக்கையாளர்களுக்கு அதிகளவான பயணத் தெரிவுகள் மற்றும் சிறந்த இணைப்பை ஏற்படுத்துவதற்கான அதன் சான்றையும் அர்ப்பணிப்பையும் இதன்மூலம் வெளிப்படுத்துகிறது.

# அமெரிக்காவை புரட்டிப் போட்ட பெரும் புயல்: 26 பேர் பலி; நூற்றுக்கணக்கானோர் படுகாயம்



அமெரிக்காவை சூறையாடிய பெரும் புயலில் சிக்கி 26 பேர் உயிரிழந்துள்ளதுடன், நூற்றுக்கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர். ஏராளமான வீடுகள், தனியார் - அரச கட்டடங்கள் சேதமடைந்துள்ளதுடன், மின்துண்டிப்பால் 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய மேற்குப் பகுதியில் வீசிய சூறாவளியால் 7 மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

புயல் காரணமாக அலபாமா, இல்லினாய்ஸ், மிசிசிப்பி மற்றும் லிட்டில் ரொக் பகுதியில் இடி மின்னலுடன் கடும் மழை கொட்டித் தீர்த்தது. இல்லினாய்ஸின் பெல்விடேரில் வீசிய சூறாவளி அப்பல்லோ தியேட்டரின் கூரையை விசிறியடித்ததில் ஒருவர் உயிரிழந்தார்.

அமெரிக்காவின் பல மாகாணங்களில் பனிப்புயல், மண்சரிவு போன்ற இயற்கை பேரிடர்கள் ஏற்பட்டு வருகின்றது. புயல் காரணமாக 2 இலட்சத்துக்கும் அதிகமானோர் மின்சாரமின்றி தவித்து வருகின்றனர்.

# பாகிஸ்தானில் கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழப்பு



கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் பாகிஸ்தானில் அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. இந்நிலையில், அங்கு இலவசமாக வழங்கப்படவிருந்த பொருட்களை வாங்குவதற்கு குடிமக்களால் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி குழந்தைகள் உட்பட 12 பேர் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

கராச்சி மாகாணம் சிந்து தொழிற்பேட்டை பகுதியில் தொண்டு நிறுவனம் சார்பில் இலவசப் பொருட்கள் விநியோகம் செய்யப்பட்டன. அதை வாங்க நூற்றுக்கணக்கான மக்கள் குவிந்ததால் நெரிசல் ஏற்பட்டது. இந்த நெரிசலில் மூச்சுத் திணறி பெண்கள், குழந்தைகள் என 12 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்திற்கு பிரதமரே காரணம் என குற்றஞ்சாட்டிய பெண்கள், சமையல் எரிவாயு சிலிண்டர், குடிநீர், மின்சாரம், அரிசி உள்ளிட்டவை கிடைக்காமல் மக்கள் செத்து மடிவதாகக் கூறினர். முறையான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யாமல் இலவசப் பொருட்கள் விநியோகம் செய்த தொண்டு நிறுவனத்தின் நிர்வாகிகளை பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

உலக செய்திகள்

# ரஷ்யா - உக்ரைன் போரின் ஓர் அங்கமான ட்ரோன்கள்

## எதிரிகளைக் கண்டறிந்து தாக்கி அழிக்கும் திறனுள்ளவை



ரஷ்யா, உக்ரைன் இடையேயான போரில் இதுவரை இல்லாதளவிற்கு இரு நாடுகளும் அதிநவீன ட்ரோன் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றன.

ரஷ்யா உக்ரைனை ஆக்கிரமித்த ஒரு வருடத்தில், இத்தகைய ட்ரோன்கள் போரின் ஒருங்கிணைந்த பகுதியாக மாறிவிட்டதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

எதிரிகள் பதுங்கியிருக்கும் இடங்களைக் கண்டறிதல், டேங்குகள் மீது சிறிய குண்டுகளை வீசி பெரும் சேதத்தை விளைவித்தல் போன்றவை ட்ரோன்கள் மூலம் நடத்தப்படும் முன்னணித் தாக்குதல்களாகும்.

க்ரோன்ஸ்டட், ஆர்லன் 10, எலரான் 3 உள்ளிட்ட ட்ரோன்கள் மூலம் ரஷ்யாவும், பேரக்டர், DJI மேவிக், ஸ்விட்ச் ப்ளேட் போன்ற இலகு ரக ட்ரோன்கள் மூலம் உக்ரைனும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

அளவில் சிறியதாக இருப்பதாலும், குறைந்த விலையில் கிடைப்பதாலும் ட்ரோன் தாக்குதல்கள் அதிகளவில் இடம்பெற்றுள்ளன. இரு நாடுகளும் மாறி மாறி தாக்கிக்கொண்டாலும், ட்ரோன்கள் தாக்குதலால் ரஷ்யாவை விட உக்ரைனே அதிக பலனைப் பெற்றிருப்பதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# வரலாற்று நாயகர்களின் செல்பி...



பிரித்தானியாவைச் சேர்ந்த திரைப்பட எடிட்டர் ஒருவர் செயற்கை நுண்ணறிவைப் பயன்படுத்தி உருவாக்கிய வரலாற்று நாயகர்கள் செல்பி எடுப்பது போன்ற புகைப்படங்கள் இணையத்தில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன.

டங்கன் தாம்ப்ஸன் என்ற திரைப்பட எடிட்டர் ஒருவர் 'மிட்ஜர்னி' என்ற மென்பொருளைப் பயன்படுத்தி கற்பனையான சில புகைப்படங்களை எடுத்திருந்தார்.

இயேசுகிறிஸ்து தனது கடைசி விருந்தின்போது சீடர்களுடன் சேர்ந்து செல்ஃபி எடுத்துக்கொண்டது போலவும், மாவீரன் நெப்போலியன் வாட்டர் லூ போரின்போது தனது வீரர்களுடன் எக்காளமிட்டு சிரிப்பது போன்றும் படங்களை வெளியிட்டிருந்தார்.

உலக அழகி கிளியோபாட்ரா, ராணி எலிசபெத், போப் பிரான்சிஸ் போன்றோரும் தாங்களாகவே செல்பி எடுப்பது போன்று செயற்கை நுண்ணறிவு புகைப்படங்களை வெளியிட்டிருந்தார். இந்தப் படங்கள் தற்போது இணையத்தில் பேசுபொருளாகியுள்ளன.

இதேபோன்று, ஏஐ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஜியோ ஜோன் முள்ளூர் (jyo john mulloor) என்பவர் நேரு, காந்தி, அம்பேத்கார் மற்றும் அன்னை தெரேசா உள்ளிட்டோரின் செல்பிக்களை உருவாக்கியுள்ளார்.

# நடிகைக்கு பணம் கொடுத்த விவகாரம்: ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டு பதிவு




ஆபாசப் பட நடிகைக்கு இரகசியமாக பணம் கொடுத்த குற்றச்சாட்டில் அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டு பதிவுசெய்யப்பட்டுள்ளது. அவர் எப்போது வேண்டுமானாலும் கைதுசெய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலையில், ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டை பதிவுசெய்ய நீதிமன்றம் உத்தரவிட்ட 24 மணிநேரத்தில் அவருக்கு ரூ.33 கோடி தேர்தல் நன்கொடையாக குவிந்துள்ளது. கடந்த 2016ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்பு, ஸ்டோர்மி டேனியல்ஸ் என்ற ஆபாசப் பட நடிகையுடன் இருந்த தொடர்பை மறைப்பதற்காக அவருக்கு ட்ரம்ப் 1,30,000 டொலர்கள் வழங்கியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இதுதொடர்பான வழக்கு மன்ஹாட்டன் நடுவர் மன்றத்தில் விசாரணையில் இருந்த நிலையில், தற்போது ட்ரம்ப் மீது கிரிமினல் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஏலவே, ட்ரம்பின் முன்னாள் வழக்கறிஞர் மைக்கேல் கோஹன் ட்ரம்புக்கு எதிராக சாட்சியம் அளித்தார். மேலும் நடிகைக்கு பணம் வழங்கியதற்கான ஆதாரத்தையும் அட்டர்னி ஜெனரல் அலுவலகம் கைப்பற்றியது. இதனால் ட்ரம்புக்கு நெருக்கடி வலுத்தது. இந்நிலையில், ட்ரம்ப் சரணடைய வேண்டும், இல்லாவிடில் அவர் கைது செய்யப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# கன்னி ஐ.பி.எல். அரைச்சதம் விளாசிய பானுக



2023ஆம் ஆண்டுக்கான ஐ.பி.எல். தொடர் கடந்த வெள்ளிக்கிழமைமுதல் நடைபெற்றுவரும் நிலையில் நேற்று முன்தினம் நடைபெற்ற பஞ்சாப் கிங்ஸ் - கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கிடையிலான ஆட்டத்தில் இலங்கை வீரர் பானுக ராஜபக்ஷவின் கன்னி ஐ.பி.எல். அரைச்சதத்தின் உதவியுடன் பஞ்சாப் அணி வெற்றியை சுவைத்தது.

முதலில் களமிறங்கிய பஞ்சாப் அணியில் தொடக்க வீரர் பிரப்சிம்ரன் சிங் அதிரடியாக 12 பந்துகளில் 23 ஓட்டங்கள் எடுத்து வெளியேறினார். அதன் பின்னர் களமிறங்கிய இலங்கையின் பானுக ராஜபக்ஷ, எதிரணியின் பந்துவீச்சை துவம்சம் செய்தார். சிக்ஸர், பவுண்டரிகளை விரட்டிய அவர், அவ்வப்போது துரிதமாக ஓட்டங்களையும் சேர்த்தார். அவரது ஆட்டத்தினால் கொல்கத்தா அணியின் பந்துவீச்சாளர்கள் மிரண்டு போயினர்.

அவருக்கு பக்கபலமாக ஷிகர் தவான் பொறுப்பான ஆட்டத்தினால் பஞ்சாப் அணியின் ஓட்ட விகிதம் ஜெட் வேகத்தில் உயர்ந்தது. அதிரடியில் பட்டையை கிளப்பிய பானுக ராஜபக்ஷ 30 பந்துகளில் அரைசதம் அடித்தார். ஆனால், அடுத்த 2 பந்துகளில் அவர் 50 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். பானுக ராஜபக்ஷ 2 சிக்ஸர், 5 பவுண்டரிகளை விரட்டினார். பனுகா - தவான் கூட்டணி முதல் விக்கெட்டுக்கு 86 ஓட்டங்கள் குவித்தது. இறுதியில் பஞ்சாப் அணி 20 ஓவர்களில் 191 ஓட்டங்களைக் குவித்தது.

மழை காரணமாக 16 ஓவர்களுக்கு 154 என்ற இலக்குடன் பதிலெடுத்தாடிய கொல்கத்தா அணி 146 ஓட்டங்களை மாத்திரம் பெற பஞ்சாப் அணி டக்வர்த் லூயிஸ் முறையில் 7 ஓட்டங்களினால் வெற்றியீட்டியது.

**TATA IPL**

**இன்றைய போட்டி**

**போட்டி இலக்கம் - 6**

**சென்னை VS லக்னோ**

**இடம் - சென்னை**

# சுப்பர் ஓவரில் நியூசிலாந்துக்கு அதிர்ச்சி கொடுத்த இலங்கை அணி



நியூசிலாந்து அணியுடனான 3 ஆட்டங்கள் கொண்ட இருபதுக்கு 20 சர்வதேச தொடரின் முதல் ஆட்டம் நேற்று ஒக்லாந்தில் நடைபெற்ற நிலையில், அதில் இலங்கை அணி சுப்பர் ஓவரில் வெற்றியை சுவைத்தது.

போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பை தெரிவுசெய்ய முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து 196 ஓட்டங்களைக் குவித்தது. துடுப்பாட்டத்தில் சரித் அசலங்க 67 ஓட்டங்களையும், குசல் பெரேரா 53 ஓட்டங்களையும் அதிகபட்ச ஓட்டங்களாகக் குவித்தனர்.

197 என்ற கடின இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய நியூசிலாந்து அணி ஆரம்பத்தில் அடுத்தடுத்து இரு விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. இறுதிப்பந்தில் வெற்றிக்கு 7 ஓட்டங்கள் தேவைப்பட்ட நிலையில், இஷ் சோதி சிக்ஸர் விளாச போட்டி சுப்பர் ஓவர் முறைக்கு மாறியது.

சுப்பர் ஓவரில் முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 8 ஓட்டங்களைக் குவித்தது. 9 ஓட்டங்களை இலக்காகக்கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 3 பந்துகளில் வெற்றியிலக்கை அடைந்தது. இதன்மூலம் இலங்கை அணி தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது. போட்டியின் ஆட்டநாயகனாக சரித் அசலங்க தெரிவானார். இரண்டாவது இருபதுக்கு 20 போட்டி புதன்கிழமை டுனிடினில் நடைபெறுகிறது. இந்த ஆட்டம் இலங்கை நேரப்படி காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகும்.

விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# அட்டாளைச்சேனை ஹைலண்ட் விளையாட்டுக் கழகத்தின் புதிய சீருடை அறிமுகம்

**(அட்டாளைச்சேனை மேலதிக நிருபர்)**




அட்டாளைச்சேனை ஹைலண்ட் விளையாட்டுக் கழகத்தின் 2023ஆம் ஆண்டின் உதைபந்தாட்ட புதிய சீருடை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு நேற்று கழகத்தின் காரியாலயத்தில் நடைபெற்றது.

ஹைலண்ட் விளையாட்டுக் கழத்தின் ஸ்தாபத் தலைவர் முகம்மட் றியாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. தலைவர் எம்.ஐ.ஹாசீம் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு கழகத்தின் புதிய சீருடையை வீரர்களுக்கு வழங்கி அறிமுகம் செய்துவைத்தார்.

இந்நிகழ்வில் அட்டாளைச்சேனை வை.எம்.எம்.ஏ. செயலாளர் ஏ.எல்.கியாஸ்தீன், பொருளாளர் ஏ.எம்.சுலைமாலெப்பை உட்பட கழக வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# ரஷ்யா - பெலாரஸ் வீரர்கள் விளையாட அனுமதி

**(ரமணி)**



விம்பிள்டனில் ரஷ்யா, பெலாரஸ் வீரர்கள் "நடுநிலை" விளையாட்டு வீரர்களாக விளையாட அனுமதிக்கப்படுவார்கள் என்று ஓல் இங்கிலாந்து கிளப் வெள்ளிக்கிழமை அறிவித்தது. "நடுநிலை விளையாட்டு வீரர்களாக போட்டியிடுவதற்கும் பொருத்தமான நிபந்தனைகளுக்கு இணங்குவதற்கும் உட்பட்ட ரஷ்யா, பெலாரஸ் வீரர்களின் உள்ளீடுகளை ஏற்றுக்கொள்வது எங்கள் தற்போதைய நோக்கம்" என்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், ரஷ்யா அல்லது பெலாரஸ் மாநிலங்களிலிருந்து நிதியுதவி பெறும் வீரர்கள் அல்லது மாநிலங்களால் இயக்கப்படும் அல்லது கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களின் அனுசரணை உள்ளவர்கள் போட்டியில் பங்கேற்க அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

"எல்லா காரணிகளையும் கருத்திற்கொண்டு, இந்த ஆண்டுக்கான சம்பியன்ஷிப் போட்டிகளுக்கு இவை மிகவும் பொருத்தமான ஏற்பாடுகள் என்பது எங்கள் கருத்து" என்று ஓல் இங்கிலாந்து கிளப்பின் தலைவர் இயன் ஹெவிட் கருத்து தெரிவித்தார்.

"இப்போது மற்றும் சம்பியன்ஷிப் தொடங்குவதற்கு இடையில் சூழ்நிலைகள் மாறினால், நாங்கள் பரிசீலித்து அதற்கேற்ப பதிலளிப்போம்."

டென்னிஸின் நான்கு கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றாக, விம்பிள்டன் சம்பியன்ஷிப் 2022 போட்டிக்கான ரஷ்யா மற்றும் பெலாரஸ் வீரர்களின் நுழைவுகளை நிராகரித்தது.

விளாடிமிர் புட்டின் உக்ரைன் மீதான படையெடுப்பைத் தொடர்ந்து கடந்த ஆண்டு ரஷ்யா, பெலாரஸ்யர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. விம்பிள்டன் இந்த ஆண்டு ஜூலை 3 முதல் 16 வரை நடைபெற உள்ளது.

ரஷ்யாவின் உலக தரவரிசையில் ஐந்தாவது வீரரான டேனியல் மெட்வடேவ், பெலாரஸின் நடப்பு அவுஸ்திரேலிய ஓபன் சம்பியனான அரினா சபலெங்கா ஆகியோர் விளையாடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7